ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

HIFAZATH - UL - ISLAM

உயர்தர செந்தமிழ் மாத சஞ்சிகை

மலர் 2. | ஹிஜ்ரி 1350 ஜமாதுல் ஆகிர் 1931 நவம்பர்மீ | இதழ் 11

உள்ளடக்கம்		பக்கம்
1.	ஸூரத்துல் இக்ரவ் ...	481
2.	நாயக வாக்கியம் ...	485
3.	மத இலாக்காவின் அவசியம் ...	488
4.	நம்பிராட்டிமார்கள் ...	490
5.	இந்தியத்தொழில் நிலையும், முஸ்லிம்களும் ...	495
6.	இஸ்லாமிய உலகம் ...	498
7.	சிங்கை முஸ்லிம் வியாபாரிகள் கவனிப்பார்களா?	502
8.	சமத்துவ சுதந்தரபோதகர்! ...	504
9.	அகில உலக தப்லீக் பிரசாரத்தின் அவசியம் ...	506
10.	நஞ்சிருர்கட்கு நன்மதி ...	508
11.	ஹிஜாஸ் தேச அபிவிருத்தி ...	510
12.	தாடியின் கண்ணியம் ...	513
13.	மங்கையரின் ஆபரணம் பர்தாவே! ...	515
14.	மதியின் மணியே மைதீனே! ...	519
15.	சர்வகட்சி மகாநாடு ...	521
16.	சுகாதாரப்பகுதி ...	525
17.	ஆசிரியர் குறிப்புகள் ...	527

சென்னை, ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரின் வெளியீடு.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு	... ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாய் முதலிய வெளிநாடுகளுக்கு	... ,,	4 0 0
தனிப் பிரதி	... ,,	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரேபக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

48, அங்கப்ப நாய்க்கன் தெரு,

G. T. மதராஸ்.

حفاظة الإسلام مدراس

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம் [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவீ)

மலர் 2	ஹிஜ்ரி 1350 ஜமாதுல் ஆகிர் ௴ 1931 ௵ நவம்பர் ௴	இதழ் 11

28 NOV 1931

ஸூரத்துல் இக்ரவ்.

நிகரற்ற அருளாளனும், அளவற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் (நான் இதனை ஆரம்பிக்கின்றேன்.)

(1) படைத்த உம்முடைய (ரப்பு)நாயனின் திருநாமத்தைக் கொண்டு ஓதுவீராக.

(2) மனிதனை உதிரக் கட்டியினின்று படைத்தான்.

(3) ஓதுவீராக! உம்முடைய நாயன் பெரும் கொடைவள்ளலாக யிருக்கின்றான்.

(4) எழுதுகோலைக் கொண்டு கற்பித்தவன்.

(5) மானிடனுக்கு அவன் அறியாமலிருந்ததைக் கற்பித்தவன்.

(6) (காரியம்) அவ்வாறன்று; நிச்சயமாக மானிடன் அக்கிரமம் செய்கிறவனாகயிருக்கின்றான்.

(7) அவன் தன்னை ஐசுவரியனாக (பிறர் உதவி தேவையற்றவனாக) காணும்போது.

(8) நிச்சயமாக உம்முடைய நாயனின் பக்கல் திரும்பிச்செல்ல வேண்டியிருக்கிறது.

(9) தடைசெய்கிறவனை நீர் பார்த்தீரா?

(10) அடிமையை அவன் தொழும்போது

(11) அவன் நேரான பாதையில் இருப்பதாக நீர் தெரிந்துகொண்டீரா?

(12) அல்லது (மனிதர்கள்) பயந்து நடக்க வேண்டுமென்று ஏவினான் என்பதை தெரிந்துகொண்டீரா?

(13) அவன் (உண்மை மார்க்கத்தை) பொய்யாக்கிவைத்து (நேரான பாதையை விட்டு) முதுகைத் திருப்பிக்கொள்கிறான் என்பதை தெரிந்துகொண்டீரா?

(14) ஆண்டவன் பார்க்கின்றான் என்பதை அவன் அறிந்துகொள்வதில்லையா?

(15) (காரியம்) அவ்வாறன்று; அவன் விலகிக்கொள்ளாவிடில் நிச்சயமாக நாம் முன்னெற்றி ரோமத்தைப் பிடித்து அவனை இழுப்போம்.

(16) தவறிழைக்கும்படியான பொய் சொல்லும் நெற்றி.

(17) ஆதலின் அவன் தன் சபையோரை அழைக்கட்டும்.

(18) நாமும் ஜபானியாக் (களென்னும் மலக்கு)களை அழைப்போம்.

(19) (காரியம்) அவ்வாரன்று; அவனுக்கு வழிப்படாதீர். மேலும் (உம்முடைய நாயனுக்கு) ஸஜ்தா செய்து (அவனருகில்) முடுகுவீராக.

[அதாவது "உம்முடைய ரப்பின்(கலாமை) திருவசனத்தை அவனது திருநாமத்தின் உதவிகொண்டு ஓதுவீராக. அவன் மானிடனை உதிரக்கட்டியினின்று படைத்து அளவற்ற சங்கைமரியாதைகளை அளித்துள்ளான். உம்முடைய நாயன்மாபெருங்கொடை வள்ளலாக யிருப்பதால் கல்வியில்லாதார்க்கு கல்வியைக்கொடுப்பதும், படிப்புவாசனை யில்லாதோனை கற்றோனாக ஆக்கிவிடுவதும் அவனுக்குப் பிரமாதமான காரியமன்று. மானிடன் தன் புத்தி முதலியவைகளைக் கொண்டு அறிந்துகொள்ள முடியாத விஷயங்களையெல்லாம் (கலம்) எழுதுகோலைக் கொண்டு அவனுக்கு கற்பித்தான். இந்நிலைமையில் அவன் தன்னை ஐசுவரியனாகவும் தேவையற்றவனாகவும் தலைவனாகவும் பராக்கிரம சாலியாகவும் காணும்பொழுது ஆண்டவனது கட்டளைக்கு மாறு செய்பவனாக ஆகி அடியார்கள் மீது அக்கிரமம் புரிய ஆரம்பித்துவிடுகின்றான். இவ்வாறு அவன் நினைப்பது கூடாத காரியமாகும். ஏனெனில் நிச்சயமாக அவன் தன் ரப்பின் பக்கல் திரும்பிச் செல்லவேண்டியவனாக யிருக்கின்றான். மானிடன் தான் நாடியபொழுது தன் நாயனை வணங்குவதை தடுத்துக்கொண்டிருப்பவனை நீர் பார்த்தீரா? தன் அகம்பாவத்தை அகற்றி தன்னைக் காப்பாற்றிக்கொள்வதுடன் ஏனையோர்க்கும் உபதேசம் புரிந்து நேரான பாதையில் கொணர்ந்து சேர்ப்பவனாக அவனைப் பார்த்தீரா? அல்லது அவன் நேரான பாதையை விட்டு முகத்தைத் திருப்பிச் செல்கிறவனாகப் பார்த்தீரா? ஆண்டவன் அவன் செய்யக்கூடிய ஒவ்வொரு அணுப்பிரமாணமான காரியாதியையும் பார்த்து அதற்கு தக்க தண்டனையோ கூலியோ கொடுப்பதற்கு சக்தி பெற்றிருக்கின்றான் என்பதை அவன் அறிந்து கொள்ளவில்லைபோலும். இவ்வாறு துர்க்கருமங்கள் புரிந்து வருபவன், தான் புரியும் கெட்ட காரியங்களிலிருந்து விலகிக் கொள்ளவில்லையாகில் அவனுடைய முன்னெற்றி ரோமத்தைப் பிடித்திழுத்து அவனைத் தாழ்மைப்படுத்துவோம். அதுபோழ்து அவன் தனக்கு சம்பவித்துள்ள மரணத்தை தடுப்பதற்காக சதா தன்னுடன் இராப்பகலாய்க் கூடிக்குலாவி உட்கார்ந்திருந்தவர்கள் அனைவரையும் கூப்பிட்டு பார்க்கட்டும். நாம் நரகத்திற்காக ஏற்படுத்தி வைத்திருக்கும் "ஜபானியா"க்களென்னும் மலக்குகளை கூப்பிடுகிறோம். ஆதலின் அவ்வாறுள்ள வழிகேடனுக்கு வழிப்படாமல் ஆண்டவனுக்கு (சஜ்தா) சிரவணக்கம் புரிந்து அவனது முடுகுதலைத் தேடிக்கொள்வீராக" என்பதாகும்.]

இத்திரு அத்தியாயம் மக்கீயாம். இதை ஸூரத்துல் "இக்ரவ்" என்றழைக்கின்றனர். ஆனால் இதில் மானிடன் உதிரக்கட்டியினால் படைக்கப்பட்டிருக்கின்றானென்று கூறப்பட்டிருப்பதால் இதை "ஸூரத்துல் அலக்" உதிரக்கட்டி என்னும் அத்தியாயமென்றும் கூறுகின்றனர்.

இவ்வத்தியாயம் இறங்கியவிதமாவது :— நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்கு முதன் முதல் "வஹீ" வருவதற்கு அடையாளமாக ஆரம்பத்தில் உண்மையான கனவுகள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. தாங்கள் இரவில் எதை கனவு காண்கின்றார்களோ அஃது அவ்வாறே காலையில் நிகழ்வுற்றுக் கொண்டிருந்தது. அதற்குப்பின் நபிகள் நாதர் (ஸல்.) அவர்களுக்கு தனித்திருப்பதின்மீது அதிகப் பிரீதி ஏற்பட்டு மக்கமா நகரிலிருந்து மினாவின் பக்கல் இரண்டு மைல் தூரத்திலுள்ள "ஹிரா"வென்னும் மலைக்குச்சென்று தனித்திருப்பதற்காக ஒரு பொதும்பைத் தெரிந்துகொண்டு சிலநாட்களின் ஆகாராதிகளை கூட்டெடுத்துக்கொண்டு ஆங்குசென்று ஆண்டவனை வணங்குவதில் பராக்காயிருப்பார்கள். சில நாட்களுக்கொருமுறை தங்கள் இல்லத்திற்கேகி இரண்டொரு தினமிருந்துவிட்டு மறுபடியும் சில நாட்களுக்குள்ள ஆகாரங்களை எடுத்துக்கொண்டு அப்பொதும்பிற்குள் சென்று விடுவார்கள். சில காலங்களில் ஒரு மாதத்திற்கு குறைவான காலமும் ஒவ்வோர் சமயத்தில் ஒரு மாதத்திற்கு அதிகமாகவும் அங்கு தங்கியிருப்பார்கள். இந்நிலைமையில் ஒருநாள் அவர்கள் கைகால் கழுவுவதற்காக வெளியில்வந்து தண்ணீருக் கருகாமையில் நின்றுகொண்டிருக்கும் சமயம் திடுகூறாக ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலை.) அவர்கள் மேலே

யிருந்து, "ஏ முஹம்மதே" (ஸல்.) என ஒரு சத்தம் கொடுத்தார்கள். இச் சத்தத்தைக் கேட்டு சமத்துவத் தூதர் (ஸல்.) அவர்கள் மேல்நோக்கிப் பார்த்தார்கள். யாதொன்றும் புலனாகவில்லை. இரண்டாம் முறையும் மூன்றாம் முறையும் இச்சத்தம் வந்தது. இது கேட்டு நபிகள் நாதர் (ஸல்) அவர்கள் பிரமித்து ஆச்சரியமுற்றவர்களாய் நாலுதிசையிலும் திரும்பிப்பார்த்தார்கள். அப்பொழுது ஒளிபோன்ற முகத்தையுடைய ஒருவர் பச்சை வர்ணமுடைய ஒரு போர்வையை அணிந்துகொண்டு ஒளியினாலாகிய கிரீடம் பூண்டவராக எம்பிரான் (ஸல்.) அவர்கள் முன் தோன்றி "ஓதுவீராக" எனக்கூறினர். "நான் படிப்பு, எழுத்து வாசனை இவைகளை அறியாமலும் கல்வி பயிலாமலும் இருக்கும் நிலைமையில் எவ்வாறு ஓதுவேன்?" என நாயகம் (ஸல்.) கூறினார்கள். மறுமுறையும் அப்பெரியார் "ஓதுவீராக" எனச்சொல்லி எம்பிரான் (ஸல்.) அவர்களை கட்டித்தழுவி நெருக்கினர். அஃது அவர்களுக்கு பெரும் கஷ்டமாயிருந்தது. திரேகமடங்கலிலும் வியர்வைஏற்பட்டுவிட்டது. இவ்வாறு மூன்று முறை செய்தார்கள். நான்காவது முறை இவ்வத்தியாயத்திலுள்ள முதல் ஐந்து வாக்கியங்களையும் ஓதினார்கள். அஃது அவ்வாறே அவர்கள் மனதில் நன்கு பதிந்துவிட்டது. இச்சம்பவத்தின் திடுக்கத்தால் நபிகள்நாதர் (ஸல்.) அவர்களுக்கு பயம் ஏற்பட்டு நடுக்கமுற்றவர்களாய் தங்கள் இருப்பிடஞ்சென்று துணைவி ஹஸ்ரத் கதீஜா (ரலி.) அவர்களை அழைத்து போர்வைபோர்த்தும்படி சொன்னார்கள். சற்றுநேரம் கழிந்து நடுக்கமெல்லாம் அடங்கியபின், "அருமை பர்த்தாவே! தங்களுக்கு யாது நிகழ்வுற்றது?" என கதீஜா (ரலி.) அவர்கள் வினவினார்கள். அதற்கு எம்பிரான் (ஸல்.) அவர்கள் ஹிராவென்னும் குகையினருகாமையில் நிகழ்ந்த சம்பவங்கள் யாவற்றையும் விவரித்து "இதனால் எனக்கு மரணம் சம்பவிக்கும் என்ற பயமும் உண்டாகிறது" எனக்கூறினார்கள். அதற்கு கதீஜா (ரலி.) அவர்கள், "தாங்கள் ஒருபொழுதும் பயப்படத்தேவையில்லை. தாங்கள் சக்தி அற்றோர்க்கு உதவிபுரிகின்றீர்கள்; விருந்தாளிகளுக்கு தக்க உபசாரம் புரிகின்றீர்கள்; சுற்றத்தார்களை நன்கு விசாரித்து வருகிறீர்கள்; தேவையுற்றோர்க்கு அவர்களின் தேவைகளை நிறைவேற்றி வைக்கின்றீர்கள் இத்தகைய நற்குணங்கள் தங்கள் சுபாவத்திலேயே காணப்படுவதால் தாங்கள் ஆண்டவனின் கிருபைக்கு பாத்தியஸ்தர்களாக ஆயிருக்கின்றீர்கள்" என தைரியம் கூறினார்கள். அப்பொழுது "வரகா பின் நவ்பல், ஈஸவீமத் ஹபையுடையவராகயிருந்ததுடன் தவ்ராத், இன்ஜீல் முதலிய வேதங்களையும் நன்குதெரிந்திருந்தார். அதனால் அரபிபாஷையில் அவைகளை மொழிபெயர்த்து அராபியர்களுக்குக் கூறிக்கொண்டிருந்தார். ஹஸ்ரத் கதீஜா (ரலி.) அவர்கள் எம்பிரான் (ஸல்.) அவர்களை அவரிடம் அழைத்துச் சென்று "தங்கள் சிறிய தகப்பனாரின் குமாரர் என்ன சொல்லுகின்றார் எனக்கேளுங்கள்" எனக் கூறினார்கள். வரக்கா, நிகழ்வுற்ற சம்பவங்கள் யாவற்றையும் தெரிந்துகொண்டு, "தங்களிடம் வந்த மனிதர் "நாமூஸ அக்பரா"கும் (வேதக்காரர்கள் ஹஸ்ரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்களை நாமூஸ அக்பர் என்றழைப்பர்) இவர்கள் ஆண்டவன் புறத்திலிருந்து நபீமார்களுக்கு அவனது தூதைக் கொண்டுவந்திருந்தார்கள். தாங்கள் யாதொன்றுக்கும் பயப்படவேண்டாம். ஆனால் தங்களுடைய ஜனங்கள் இதற்கு நன்றிபாராட்டாமல் தங்களைக் கஷ்டப்படுத்தி இவ்வூரைவிட்டு தங்களை அகற்றிவிடுவார்கள். அது சமயம் நான் ஜீவித்திருப்பேனாகில் தங்களுக்கு உபகாரம் புரிந்து அதனால் இருபதியின் மேன்மையை அடைந்துகொள்வேன்" எனக் கூறினர்.

ஆரம்பமாக இறக்கிவைக்கப்பட்டது, இவ்வத்தியாயத்திலுள்ள முதல் ஐந்துவாக்கியங்களாகும். அதற்குபின் "ஸூரயேபாத்திஹா"வும், பின்பு "ஸூரயேமுதத்திரு"ம் இறக்கிவைக்கப்பட்டது. ஆனால் ஆரம்பமாக "ஸூரயேபாத்திஹா" இறக்கிவைக்கப்பட்டதென்பதாக ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்கள் கூறியதாகவும் "ஸூரயேமுதத்திர்" ஆரம்பத்தில் இறக்கிவைக்கப்பட்டதென்பதாக ஹஸ்ரத் ஜாபிர் (ரலி.) அவர்கள் கூறியதாவும் சொல்லப்படுகிறது: ஆனால் கீழே விளக்கிக் கூறுபவைகளைக்கொண்டு இச்சந்தேகம் நிவர்த்தியாய்விடும். அதாவது, ஆரம்பமாக இவ்வத்தியாயத்திலுள்ள முந்திய ஐந்து வாக்கியங்கள் தான் இறக்கிவைக்கப்பட்டன. அதற்குபின் தொழுகையில் ஓதுவதற்காக ஆரம்ப

மாக "ஸூரயேபாத்திஹா" இறக்கிவைக்கப்பட்டது. அதற்குப்பின் "வஹீ" வருவது நின்றுபோய் மறுபடியும் ஆரம்பமாகும்போது துவக்கமாக "ஸூரயேமுதத்திர்" இறக்கிவைக்கப்பட்டு அதுமுதல் தொடர்ச்சியாக குர்ஆன்ஷரீப் இறங்கிக்கொண்டுவந்தது. இதனால் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்கள் துவக்கமாக "ஸூரயேபாத்திஹா" இறங்கியது எனக் கூறியது தொழுகை விஷயத்திலாகுமென்றும், ஜாபிர் (ரலி.) அவர்கள் "ஸூரயேமுதத்திர்" முதலில் இறங்கிற்று எனக்கூறியது "வஹீ" நின்றுபோய் மறுபடியும் ஆரம்பிக்கும்போது துவக்கமாக இறங்கியதென்றும் நன்குபுலனாய்விட்டது.

இவ்வத்தியாயத்தில் சிலருக்கு ஒரு சந்தேகம் உதிக்கலாம். அதாவது, நாயகம் (ஸல்.) அவர்கள் ஓதப்படிக்கத்தெரியாத உம்மியாகயிருந்தார்கள். அவர்களை நோக்கி "ஓதுவீராக" என்றுகூறுவது குருடனைப்பார்த்து "பார்" என்றும், களைத்திருப்பவனை நோக்கி "ஓடு" என்றும் சொல்வதற்கு ஒப்பாகயிருக்கிறது. இவ்வாறு நடைமுறையில் இயலாத விஷயங்களைக்கொண்டு கட்டளைப் பிறப்பிப்பது சரியா என்பதே. இதற்கு கீழ்வருமாறு விடையிறுப்பது கொண்டு அச்சந்தேகம் நிவர்த்தியாய்விடும். அஃதாவது, இவ்வத்தியாயத்திலுள்ள "ஓதுவீராக" என்னும் வாக்கியமானது கட்டளை பிறப்பிக்கும் விதமாக யில்லாமல் கற்பித்துக்கொடுக்கும் முறையில் அமைந்திருக்கிறது. உதாரணமாக, சிறு பிள்ளையை ஆரம்பமாக பாடசாலைக்கு அழைத்துச்செல்கிறோம். ஆங்கு உபாத்தியாயர் அப்பிள்ளையைப் பார்த்து "ஓதுவீராக" என்று கூறுகின்றார். அது சமயம் அந்தப் பிள்ளை யாதொன்றும் தெரியாதவனாகயிருக்கின்றான். அதனால் உபாத்தியாயர் "ஓதுவீராக" என்று சொன்னதின் கருத்தானது "எவ்வாறு நான் ஓதுகின்றேனோ அவ்வாறே நீயும் நான் ஓதுவதைக் கேட்டு ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்" என்பதாகும். நாயகம் (ஸல்.) அவர்களுக்கு இட்ட கட்டளையும் இதைப்போன்றதே.

"ஓதுவீராக" என நாயகம் (ஸல்.) அவர்களைப் பார்த்து கூறப்பட்டவுடன் நான் எழுதப்படிக்கத் தெரியாத உம்மியாகயிருக்கும் நிலைமையில் எவ்வாறு ஓதுவதென்று ஆச்சரியப்பட்டுக் கூறினார்கள். ஆண்டவன் அதைக் கட்டாயப்படுத்துவதற்காக மறுமுறையும் "ஓதுவீராக" என்று கூறினான். சில வியாக்கியானகர்த்தாக்கள் முதலில் "ஓதுவீராக" என்று கூறியது தங்களுக்காக ஓதுவதென்றும், இரண்டாவது கூறியது மனிதர்களுக்கு கற்பித்துக் கொடுக்கவேண்டியதற்காக வாகுமென்றும் கூறுகின்றனர்.

இதன் இரண்டாவது வாக்கியத்தில் மானிடனை உதிரக்கட்டியினின்று படைத்திருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. அதாவது, மானிடன் சாப்பிடும் பல்வகையான ஆகாராதிகள் ஜீரணமானபின் திரேகத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டு அதிலிருந்து ஒருசத்து உற்பத்தியாகின்றது. அதற்குத்தான் (மனீ) இந்திரியம் என்று கூறுவர். அஃது பெண்களின் கெர்ப்பப்பையினுட் சென்ற சில காலத்திற்கெல்லாம் உதிரக்கட்டியாகமாறி விடுகிறது. பின்பு அது தசைக்கட்டியாகமாறி ஒரு மாறுதலை அடைகிறது. அதற்குபின் அல்லாஹ் தஆலா அதற்கு பல்வேறு உறுப்புகளாகிய கை கால் தலை மூளை இவைகளை அளித்து ஒவ்வொரு உறுப்புகளுக்கும் தனித்தனி வெவ்வேறு சக்திகளை அளித்துவிடுகின்றான் இதுவிஷயமாய் வயிற்றில் என்ன நடக்கிறதென்று தாய் தந்தையர்களுக்கு யாதொன்றும் தெரியமாட்டாது. மாபெரும் மேதாவிகளும் கல்விமான்களும் நிபுணத்துவம் படைத்தவர்களும் அவ்வுறுப்புகள் அமைந்திருப்பது கொண்டு எந்த விதமான பிரயோசனங்களிருக்கின்றன வென்பதைத் தெரிந்துகொள்ள சக்தியற்றவர்களா யிருக்கின்றனர். அதற்குப்பின் அதற்கு உயிரளிக்கப்படுகிறது. ஆங்கு அஃது வளர்வதற்காக ஊண் தீன்களை ஆண்டவன் உண்டாக்கிக் கொடுக்கின்றான். அவ்விடத்திலேயே வளர்ந்து கெர்ப்பப்பையிலேயே மனிதனாக ஆகிவிடுகின்றது. முடிவாக இந்திரியமானது இத்தியாதி மாறுதலுக்குப்பின் மானிடனாக ஆகி கெர்ப்பப்பையிலிருந்து வெளியில் வருகிறது. ஆனால் இவ்வாக்கியத்தில் மானிடனின் உற்பத்திக்கு முதன்மையாகவுள்ள இந்திரியத்தை குறிப்பிடாமல் அதற்கு அடுத்தபடியாகவுள்ள உதிரக்கட்டியைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன் காரணமாவது :—தாயின் கர்ப்பத்தில் உதிரக்கட்டி உண்டாய் விடுவது தான் முந்திய மாறுதலாகும். இங்கிருந்து

தான் மானிடனென்னும் கட்டிடம் ஆரம்ப மாகிறது. அக்கட்டிடம் முடிவடைந்த பிற குங் கூட உதிரத்தின் பலத்தைக் கொண்டு தான் அக்கட்டிடம் நிலைநிற்கின்றது. ஆதலி ஞல்தான் ஆரம்பமாக உதிரக்கட்டியைக் குறிப்பிட்டுள்ளான்.

இதன் நான்காவது வாக்கியத்தில் (கலம்) எழுதுகோலைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக் கிறது. இராஜ்ய பரிபாலனஞ் செய்வது, வாணிபம் புரிவது முதலியவைகள்தான் எழுதுகோலால் முடியும் காரியங்களென எண்ணிக்கொள்ளலாகாது. பின் சந்ததி யினர் பிரயோசனமடைந்து விமோசனம் பெருவதற்குள்ள நற்போதனைகளை எழுதி வைப்பதற்கும் அஃது பிரயோஸனமளிக் கிறது. சங்கைவான்களான நபிமார்களுடை யவும் கீர்த்திவாய்ந்த மகான்களுடையவும் நற்போதனைகள்—நல்லுபதேசங்கள் இவை களை பின் சந்ததியார்கள் அடைந்து முக்தி பெறுவதற்கும் எழுதுகோல் உதவி அளித்து வருகிறது. சுருங்கக்கூறுமிடத்து மார்க்க விஷயமான ஞானங்களையும் சரித்திர பூர்வ மான சம்பவங்கள் யாவற்றையும் அறிவிப் பதற்காக நூல்களை எழுதிவைக்கிறோம்; ஒரு இடத்தில் பரவியுள்ள கலைஞானத்தை யும் அற்புதங்களையும் மற்றோர் இடத்திற்கு எழுதி அனுப்புவதற்கு எழுதுகோல் மிக்க உதவி அளிக்கின்றது. எழுத்தாளரின் பூத வுடல் அழிந்தாலும் புகழுடம்பு அழியாவண் ணம் நம்முடைய ஆற்றலும் அறிவும் உலகி னுக்கு உதவுமாறு அஃது துணைபுரிகின்றது. இவ்வளவு மகிமையோடுகூடிய எழுதுகோலைக் கொண்டு மானிடனுக்கு கல்வி ஞானத்தை புகட்டியதாக ஆண்டவன் கூறுகின்றான்.

(தொடரும்.)

நாயக வாக்கியம்.

மிகநல்ல செயலும், மிகத் தீய செயலும்.

ஹஸ்ரத் உப்பாதா பின்ஸாமித் (ரலி.) அவர்கள் அறிவிப்பதாவது:—நபிகள்நாயகம் (ஸல்.) அவர்கள் ஒருநாள் கஃபத்துல்லா பள்ளிவாயிலின் முற்றத்தில் (ஸஹனில்) உட் கார்ந்து ஏகதெய்வத்துவத்தைப்பற்றி பிர சங்கித்துக்கொண்டிருந்தார்கள். பிரசங்கம் முடிந்ததும் யமன் தேச மனிதரொருவர் முன்வந்து, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை நோக்கி "யாரஸூலல்லாஹ்! மனிதருடைய கருமங்களில் எது மிக நல்ல கருமம்? எது மிகத் தீய கருமம்? என்பதை அறிவியுங்கள்" என்று வேண்டிக்கொண்டார். அதற்கு நபி கள் நாயகம் (ஸல்.) அவர்கள் திருவுளம்பற் றியதாவது :—

"ஆண்டவன் மீது ஈமான்கொள்வது, முஸ் லிம்கட்கு நன்மைப்புரிவது ஆகிய இரண்டு நற்கருமங்களை விட மேலானது வேறெதுவு மில்லை. ஆண்டவனுக்கு இணை வைப்பது, முஸ்லிம்களுக்கு தீங்கிழைப்பது ஆகிய இவ் விரண்டு தீய கருமங்களைவிட மிக மிகத் தீய கருமங்கள் வேறெதுவுமில்லை" என்பதாகும்.

இத் திருமொழியில் அல்லாஹ்வின் மீது திட நம்பிக்கைகொள்வதின் சிறப்பும், முஸ் லிம்கட்கு அனுகூலஞ்செய்வதின் புனிதமும், சிருஷ்டிப் பொருட்களைக்கொண்டு ஆண்டவ னுக்கு இணைவைத்தல்—அவைகளை வணங்கல் ஆகியவற்றின் பாதகமும், முஸ்லிம் சோதரர் கட்கு இடர் விளைவிப்பதின் தீமையும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. எனவே முஸ்லிம் கள் ஒவ்வொருவரும் உறுதியான ஈமான் கொண்டு இதர முஸ்லிம் சோதரர்களுக்கு நன்மையே செய்துகொண்டு பரஸ்பர நேச மாய் வாழ்வதும்; ஷிர்க்கு பித்அத்தான கெட்ட கருமங்களை விட்டு விலகி முஸ்லிம் கட்கு நாவினாலோ கரத்தாலோ வேறுவிதத் தாலோ ஒரு சிறிதும் தீங்கு புரியாமல் பரிசுத் தராய் உத்தமகுண ஒழுக்கத்தோடிருப்பதும் சன்மார்க்கக் கடமைகளாகும்.

உலகம் ஒரு சத்திரமாகும்.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது:—நபிகள் நாயகம் ரஸூல்

(ஸல்.) அவர்கள் ஒருசமயம் குத்பா ஓதிக்கொண்டிருக்குமிடையே பின்வருமாறு திருவுளம்பற்றினார்கள்:—

நீங்கள் இப்பிரபஞ்சத்தில் வழி நடந்து செல்லும் பிரயாணியைப்போல் தங்கியிருக்கிறீர்கள். ஆகவே, இவ்வுலகமானது வழிப்போக்கர் தங்கும் "முஸாபிர்கானா" சத்திரத்தைப் போலிருக்கின்றது. நீங்கள் இச்சத்திரத்தில் மாலையை கழித்து இருப்பீர்களானால் காலையை எதிர்பார்க்கவேண்டாம். நீங்கள் காலையைகழித்து இருப்பீர்களாயின் மாலையை எதிர்ப்பார்க்க வேண்டாம். ஆனால், நீங்கள் சுகமாயிருக்கையில்வியாதியைஎதிர்பாருங்கள். நீங்கள் ஜீவித்திருக்குங்கால் மரணத்தை எதிர்பாருங்கள். இதற்குரியசாதனத்தை முன்னேற்பாடு செய்துகொள்ளுங்கள்.

இதன் தாத்பரியமாவது மனிதரின் ஜீவியம் சதமற்ற ஒரு நிலையாகும். மரணம் என்ற புயல் அடித்தவுடன், இதன் முதல் காற்று வீச்சு தாக்கியதும் ஜீவியம் என்னும் தீபம் அணைந்துபோகின்றது. ஆகவே மனிதரின் முதலாவது கடமை, இவ்வுலகத்தை யொரு நிலையற்ற சத்திரமென்றெண்ணி, இதில் நாம் ஒருவழிப்போக்கன் தங்கி களைப்பாறிச் செல்வதைப்போல் இதை அற்பமானதாய்க் கருத வேண்டும். சத்திரத்தில் ஒரு பிரயாணி தங்கியிருந்துவிட்டு, ஊருக்குப்போக ரயில் வண்டியை எதிர்ப்பார்த்துக் கொண்டிருப்பதைப் போல், உலகம் என்ற இந்த சத்திரத்தில் நாம் குறிப்பிடப்படாத ஒரு சொற்ப காலம் தங்கியிருக்குங்கால் மரணம் என்னும் ரயிலிலேறிச்செல்ல தயாராய்க் காத்திருக்கவேண்டும்.

இந்த சதமற்ற உலகத்தை சாஸ்வதமாய் வாழுதற்குரிய சுகஸ்தலமென்று அவிவேகமாய் நினைத்து இழிச்செயல்கள் புரிந்து கொண்டிருப்பது கூடாதகாரியமாகும். மேலும் செல்வத்தின் ஆசைகொண்டும், சொத்தின் பேராவல் கொண்டும், உலகத்தின்கண் மோசமும் வஞ்சகமும் துர்க்கிருத்தியமும் புரிந்து தனவந்தராகி விடலாமென்னும் மமதைகொண்டுவாழ்வோர் ஆண்டவனுடைய ஆணைக்கு முரண்பட்டுச்செல்பவர்களாவர். ஆகவே நேயர்காள்! உலகை நிலையற்ற சத்திர வாழ்க்கையுடையதென்று கருதுங்கள்! அதில் பரலோகத்துக்குரிய நற்கருமம் நற்சாதனங்களை சேமித்துக்கொள்ளுங்கள். மோசத்தினாலும் வஞ்சகத்தாலும் செல்வந்தராகி விடலாமென்னும் பேராசையும் மமதையுங்கொள்ளாதீர்கள் இவ்வித ஆர்பாட்ட ஆடம்பரபடாடோபமெல்லாம் ஒழிந்து போகுமென்பது திண்ணம். ஓர் உண்மையான முஸ்லிமின் இலக்ஷணம்—கடமை இவற்றின்படி பெருந்தன்மையும், போதுமென்ற மனமும் பூண்டு ஒழுகுங்கள்! உங்கள் தேவைக் கேற்ப ஆண்டவன் அளித்துள்ள சாதனத்தைக்கொண்டுபோதுமென்ற (கிநாஅத்) திருப்திவாழ்வை மேற்கொள்ளுங்கள்! ஆண்டவனுக்கு நன்றியும் வந்தனையும் புரியுங்கள்.

இச்சமயத்தில் ஒரு அரபி கவியின் கருத்து நம் ஞாபகத்திற்கு வருகிறது.

அதாவது:—"பிரயாசைப்பட்டு கிடைத்ததைக் கொண்டு போதுமென்ற திருப்தி வாழ்க்கை மேற்கொள்வதோடு, அதிகமான செல்வம் சேமிக்க வேண்டுமென்ற பேராசையால் சன்மார்க்கத்துக்கு ஆகாத காரியங்கள் புரியாமல் அதை விட்டும் நீங்கி எவன் இருக்கின்றானோ, அப்படிப்பட்ட மனிதன் எல்லாவித பாதகத்தை விட்டும் விமோசனம் அடைவதோடு, கியாமத் (இறுதி) நாளிலும் நரகத்தீயின் வேதனையை விட்டும் ஆண்டவனருளால் பாதுகாக்கப்படுவான்" என்பதே.

வியாபாரத்தின் திவ்விய இலக்ஷணம்.

ஜீவனோபாய சாதனத்துக்காக 'வர்த்தகம்' மிகச் சிறந்த வழியென்பதில் ஒரு சிறிதும் சந்தேகமில்லை. இக்காரணத்தை முன்னிட்டேதான் அந்தந்த காலத்தின் பெரியார்களும், உத்தமர்களும் வியாபாரத்தை தங்கள் ஜீவனோபாயத்துக்குரிய சாதனமாய் அனுஷ்டித்தொழுகினார்கள். மேலும் பொது மக்கட்கும் இதன் மேன்மை சிறப்பைப்பற்றி நன்கெடுத்தோதினார்கள்.

நமது நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்களும் வியாபாரம் புரிந்துகொண்டிருந்தார்கள். "ஜீவனோபாயம் தேடிக்கொள்வதற்குரிய மிகச்சிறந்த சாதனம் வியாபாரந்தான்" என்று பன்முறையும் விளக்கிக் கூறியுள்ளார்கள். இங்ஙனமிருக்க, இதுகாலை நமது தற்கால நிலையோ மிக வருந்தற்குரித்தானதாயிருக்கின்றது. நம்மவர்கள் உலகச் சாதனத்தையும், ஒழுக்காசாரத் தத்துவங்களையும்

உதறித் தள்ளிவிட்டதேபோல் வியாபார நேர்மையான சாதனத்தையும் விட்டுவிட்டனர். நம்மவரில் ஒருசாரார் தம்திய மனோ இச்சைகளைப் பூர்த்திச் செய்துகொள்வதற்காக இந்த புனித வியாபாரத்தில் மோசம், வஞ்சகம், பொய், சூது ஆகிய பாதகமான காரியங்களையும் கலந்து சீர்கெடுத்து வருகின்றார்கள்.

சென்ற பதின்மூன்றரை நூற்றாண்டுகட்கு முன்னர் வியாபாரத்துறையில் நம் பெரியார்களால் ஏற்படுத்திவைக்கப்பட்ட சட்டதிட்டங்கள், ஒழுங்குகள், நீதிமுறைகள் ஆகியவை இதுகாலை மிகச் சீர்கேடாய் மாற்றப்பட்டு பேதகப்படுத்தப்பட்டுப் போய்விட்டன. இங்ஙனம் வியாபார ஒழுங்கு பேதப்பட்டுப் போனதால் வியாபாரத்தையே கை விட்டு விடவேண்டுமென்பது அவசியமில்லை. வியாபாரத்தின் திவ்வியமான இலக்ஷணங்கள் வாக்கு சுத்தம், உத்தமத்தன்மை, நற்குணம், நல்லொழுக்கம் முதலியவைகளாகும். இதனை சிலாகித்து நமது நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்கள் சென்ற 13-நூற்றாண்டுகட்கு முன்னரே பின்வருமாறு போதித்திருக்கின்றார்கள் :—

(1) "நம்பிக்கையாளனும், சத்தியவானுமாகிய வியாபாரி (இறுதி காலத்தில்) நபிமார்களுடனும், உண்மையாளர்களுடனும், உயிர்த்தியாகிகளுடனும், உத்தம பெரியார்களுடனும் அணுகியிருப்பார். (வியாபாரத் துறையில் ஈடுபட்டு) வாங்கும்போதும், விற்கும்போதும், பணம் வசூலிக்கும்போதும் நேர்மையான மிருதுத்தன்மையை அனுஷ்டிக்கும் மனிதன் மீது ஆண்டவன் கிருபை புரிகின்றான்."

* * * *

மேலும் ஹஜ்ரத் அபூஸஈது (ரலி.) அவர்கள் அறிவிப்பதாவது :—ஒருநாளன்று நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் வியாபாரத்தின் மகிமை—சிறப்பு—நன்மை ஆகியவைகளை போதித்தார்கள். அதுசமயம் திருவுளம் பற்றியருளியதாவது :—

(2) முஸ்லிம் வியாபாரி யொருவன், ஒரு பொருளில் கெடுதி இருப்பதைத் தெரிந்து அதையவன் பிறர்க்கு விற்பனைச் செய்வது கூடாதகாரியமாகும். அப்படியவன் அதன் கெடுதியை, வாங்கும் மனிதருக்கு தெரிவித்துவிட்டால் அதனால் பாதகமில்லை.

இதனால் கெட்டுப்போன சாமான்களையும் ஊனமாயுள்ள பொருட்களையும் பொதுமக்களுக்கு தெரிவிக்காமல் மோசத்தனமாய் விற்று ஆகாத முறையில் வர்த்தகம் செய்வது தடுக்கப்பட்ட காரியமென்பது நன்குவிளக்கமாகின்றது.

துன்பத்தை சகிப்பது.

உலகத்தில் எந்த மனிதனும் துன்பமனுபவிக்காதவன் கிடையாது. அதிகமாகவோ குறைவாகவோ ஒவ்வொரு மனிதனும் சஞ்சலம், விசாரம், கவலை, கஷ்டம், நஷ்டம், துன்பம், சங்கடம் முதலிய சோதனை என்னும் எல்லைகளை கடந்துதான் பரிபக்குவமடைகின்றான். இவ்விசாரத் துன்பங்களை யனுபவிப்பதற்கு ஒரு குறிப்பட்டவர்க்கமோ, கூட்டமோதான் தகுதியுடையதென்று ஒதுக்கி வைக்கப்பட்டில்லை. இதுவிஷயத்தில் எல்லோரும் பொதுவானவர்களே யாவர். இதிலொரு விசேஷம் யாதெனில், சத்திய முஸ்லிமொருவன்மீது ஏதேனும் துன்பம் வந்து நேரிடுமாயின் அதனையவன் பொறுமையோடும், இறைவன்பால் நன்றியறிதலோடும் சாந்தமாய் சகித்துக்கொள்ளுகின்றான்; இதனால் இவன் புண்ணியத்துக்கும், இறைவனது அபார அருளுக்கும் பாத்தியஸ்தனாகின்றான். சத்தியமுஸ்லிமல்லாதார் துன்பம் நேரிட்டக்கால், பொறுமை—சகிப்புத்தன்மை முதலியன யனுஷ்டிக்காததினால் புண்ணியத்தையும், இறைவனது அருளையும் இழந்து விடுகின்றனர். இதைப்பற்றி நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்கள் கூறியிருப்பதாவது :—

"ஒரு முஸ்லிம் ஏதேனும் துன்பத்திலோ சங்கடத்திலோ அகப்பட்டு விடுவானாகில், அவன் க்ஷேமமாயிருந்து நற்காரியம் செய்து கொண்டிருந்தால் எவ்வளவு புண்ணியங்கள் பெறுவானோ அவ்வளவு புண்ணியங்களை அவனுக்காக எழுதுமாறு 'மலக்கு'க்கு (ஆண்டவனிடமிருந்து) கட்டளைப் பிறக்கின்றது. அந்த துன்பஸ்தன் சுகமடைந்துவிடுவானானால் பாவங்களைவிட்டும் தூய்மையடைகின்றான். அப்படியின்றி அத்துன்பத்திலேயே அவனது உயிர் போய்விடுமாயின், இறைவன் அவனை பூரணமாக மன்னித்துவிடுகின்றான்."

ஆண்டவனுடைய இம்மகத்தான பேரருள் சத்தியமுஸ்லிம்களுக்கே உரித்தானதாகும்.

حفاظة الإسلام مدراس

மத இலாக்காவின் அவசியம்

இந்தியாவிலே நமது முஸ்லிம்களின் சமய - சமூக காரியங்களின் பாதுகாப்பு மிக மிகச் சீர்கேடடைந்திருப்பதால், அவைகளை ஒழுங்குபடுத்தி சீர்பெற அமைத்து நடத்துவான்வேண்டி ஒரு தனிப்பட்ட இலாக்கா அத்தியாவசியமென்று நாம் ஏற்கெனவே பன்முறையும் எடுத்துக் கூறியுள்ளோம். அதற்கு ஆதாரமாக, சில வாரங்களுக்குமுன் மௌலானா அதாவுல்லா ஷா புகாரீ அவர்கள் தெஹ்லி ஜாமிஃ மஸ்ஜிதில் பேசுகையில் முஸ்லிம்களின் மத விவகாரங்களை விசாரித்து முடிவான தீர்ப்பளிப்பதற்காக ஒவ்வொரு மாகாணத்திலும் ஓர் மார்க்கத் தீர்ப்பாளரை நியமிக்கவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். நமது முஸ்லிம் மக்களின் தற்கால நிலைமையையும் நமது உண்மை மார்க்கம் அடைந்திருக்கும் சீர்கேடையும் சரிவர உணர்ந்தோர் யாவரும் இந்த யோசனையை ஆவலுடன் ஆதரிப்பாரென்பது திண்ணம்.

சமீபத்தில் நடந்த ஜனக்கணிதப்படி இந்தியாவிலுள்ள முஸ்லிம் பெருமக்களின் தொகை சுமார் எட்டுக்கோடியென்று தெரிகின்றது. ஆனால் இப்பெரும் ஜனசமூகத்தின் சமய - சமூக நிலைகளோ ஜனப்பெருக்கத்துக்கேற்ப சீர்பெருக்க முள்ளவைகளாயில்லை. எங்கு பார்த்தாலும் சீர்கேடுகளே காணப்படுகின்றன. மதக்கல்விச்சாலைகள் அடைந்திருக்கும் அலங்கோல நிலையை என்னென்று சொல்வது? வக்பு சொத்துக்களின் நிலைமையும், அவற்றை நிர்வகிக்கும் முத்தவல்லிகளின் நேர்மையும் நமக்கும் நமது புனித மார்க்கத்துக்கும் புகழ்தரத்தக்கனவாகுமா? இனி, ஒழுங்கு வரம்பின்றி நடைபெறும், விவாக விலக்குகள், ஹறாமான (நிகாஹ்) விவாகங்கள் இன்னும் எண்ணத்தொலையாத மார்க்க விலக்கான கர்மங்கள் இன்னோரன்ன தீமைகளும் அவற்றாலேற்படும் வழக்குகளும், அவ்வழக்குகளில் புறமதத்தினர் தீர்ப்புக்கூறி அதற்கு முஸ்லிம்கள் கட்டுப்படவேண்டியிருப்பதுமான அலங்கோலங்களை எண்ணிப் பாருங்கள். இவையெல்லாம் நம்மவர்களுடையவும், நம் புனித மார்க்கத்தினுடையவும், மேன்மை, சிறப்பு, பெருக்கம் இவைகளை சன்னஞ்சன்னமாய் சீர்குலைத்து வருகிறதென்பதை சிந்தை செய்பவர்களுமுண்டோ?

எனவே, இவைகளை சீர்திருத்தி ஒழுங்கான முறையில் அமைக்க ஒரு மார்க்க இலாக்கா அவசியமென்பதை ஏற்கனவே நாம் வற்புறுத்தி கூறியிருக்கின்றோம். இவ்வாறே ஐரோப்பாவிலுள்ள பல்கேரிய நாட்டிலும் அவ்விடத்திய முஸ்லிம்களின் வழக்கு விவகாரங்களில் தீர்ப்புக்கூறி ஒழுங்கு செய்வதற்காக "முப்தீ" என்ற மார்க்கத் தீர்ப்பாளர் அவ்வரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டிருப்பதாய் அறிகிறோம். மேலும் பிரான்ஸ், இத்தாலி, ஆஸ்டிரியா, ருஷியா, ஹாலண்டு முதலிய ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவைச் சேர்ந்த முஸ்லிம் பிரதேசங்களிலும் நமது மார்க்கக் காரியாதிகளை கண்காணிப்பதற்காக தனி மத இலாக்காக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தியாவிலும் நிஜாம் ராஜ்யத்தில் நமது மார்க்கப் பாதுகாப்புக்காக ஒரு

பிரத்தியேக இலாக்கா ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. போபால் சமஸ்தானத்திலும் காஜீ, முப்தீ என்று இரு அதிகாரிகள் நியமிக்கப் பட்டிருக்கின்றனர். பரோடா, குவாலியர் ஆகிய இந்து சமஸ்தானங்களிலும் முஸ்லிம்களுக்காக காஜீ, முப்தீ என்னும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

இவைகளையெல்லாம் கவனிக்குங்கால் பிரிட்டிஷ் இந்தியாவிலும் முஸ்லிம் சமய - சமூக காரியங்களை நிர்வகிப்பதற்காக பிரத்தியேகமான ஒரு இலாக்கா இன்றியமையாத அவசியமென புலனுகிறது. எனவே அதற்காக நாம் முயற்சித்தல் அத்தியாவசியமாகும்.

இந்நிலைமையில் இந்நன்முயற்சியை குறை கூறவும், இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளோரைத் தூற்றவும் ஒருசாரார் முற்பட்டிருப்பது காலத்தின் கோலமல்லவா? மத இலாக்கா ஏற்பட்டு முஸ்லிம்களின் மத ஆசாரங்கள் ஒழுங்குபடுத்தப்படுமாயின் இக்கூட்டத்தாரின் தீய பிரசாரத்துக்கு இடமில்லாமற் போகுமேஎன்ற பயமே அன்னோரின் எதிர்ப்புக்குக் காரணமாகுமென்பது நாம் சொல்லாமலே விளங்கும். அவ்வாறு தீயபிரசாரத்துக்கு இடமில்லாமற்போனுல், அத்திய பிரசாரத்தையே ஆதாரமாகக்கொண்ட அன்னோருக்கு பெரும் சங்கடம்நேர்ந்துவிடுமென்பது திண்ணம். எனவே அன்னோர் மத இலாக்கா ஏற்படுத்துவதின் அவசியத்தைக் கண்டிக்க முயற்சிப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஆனுல் அதற்காக அவர்கள் கூறும் நியாயங்களோ விஷயமறிந்தோர் எள்ளி நகையாடத்தக்கனவாய் இருக்கின்றன.

எங்ஙனமெனில், அவர்கள் இந்து ஆசார சீர்திருத்தக் காரர்கள் பாஷையிலுள்ள "புரோகிதராட்சி" என்ற வார்த்தையை எடுத்துக்கொண்டு, அவ்வித புரோகிதராட்சி என்ற ஏதோவொன்று இஸ்லாத்தில் வந்து நுழைந்துவிட்டதாகவும், அதனை ஒழிப்பதற்காக முற்போக்கை விரும்பும் முஸ்லிம்களும் வாலிப முஸ்லிம்களும் பாடுபட்டு வருவதாகவும் பறைசாற்றி வரும்நிலைமையில் மத இலாக்கா வேண்டுமென்பதும் புரோகிதராட்சியை நன்கு நிலைநிறுத்துவதற்காகத்தானென்றும், அவ்வாறு மத இலாக்கா ஏற்படுவதை யுவர்கள் வெறுக்கின்றனரென்றும் அது உள்நாட்டுக் கலகத்தில் வந்து முடியுமென்றும் கூறுகின்றனர்.

இக்கூற்றுக்கு ஏதாவது பொருளோ ஆதாரமோ உண்டாவென்று சிறிது ஆராய்தல் வேண்டும். இந்திய முஸ்லிம்களின் சமய-சமூக காரியங்கள் பெரிதும் சீர்கேடடைந்திருப்பதாலும், முஸ்லிம்களின் மார்க்க சம்பந்தமான விவகாரங்களில் இதரர்கள் தலையிட்டு தீர்ப்பு செய்யவேண்டியிருப்பதை உத்தேசித்தும் அவற்றை ஒழுங்குபடுத்தி நிர்வகிப்பதற்காகத்தானே ஒரு மத இலாக்கா வேண்டுமென்கிறோம். இதனை "புரோகிதராட்சி" என்று கூறுவது எத்துணைப் பொருத்தமானதென்பதை நண்பர்களே சிந்தித்துப் பார்ப்பார்களாக.

மற்ற நாடுகளில் முஸ்லிம்களின் சமய - சமூக காரியங்களை நல்ல முறையில் சீர்திருத்துவதற்காக மத இலாக்காக்கள் ஏற்பட்டதின் காரணமாக முஸ்லிம் சமூகம் சீர்பெற்று விளங்குவது இக் கூட்டத்தாருக்கு புலனுகாமற் போனதேனே? உண்மையைத் திரித்துக்கூறி பிரசாரம் செய்தால் விஷயவுணர்ச்சி யில்லாதார் நம்பினவரைக்கும் லாபம் என்ற எண்ணத்தோடுதான் அவர்கள் இவ்வாறு கூறித் திரிகின்றனர் என்று தோன்றுகிறது.

கடைசியாக, யுவர்களை ஆகாயத்தில் தூக்கி வைத்துப் பேசி அவர்கள் மத இலாக்கா ஏற்படுவதை விரும்பவில்லை என்றும், அதனுல் உள் நாட்டு சண்டை உண்டாகுமென்றும் இத் தீய பிரசாரக் கூட்டத்தார் பூச்சாண்டி

காட்டி யிருப்பதுதான் மிகவும் விந்தைக் குரியதாகும். இது தற்கால அரசியல் விதிகளின் பாஷை நடையை அனுசரித்திருந்தாலும் யாரும் மயங்கத்தக்கதான அத்துணை யுக்தி யுடையதாகயில்லை. ஏனெனில், வாலிப முஸ்லிம்கள் நமது சமய - சமூகத்துறைகளில் காணப்பட்டும் குற்றங் குறைகளை நீக்கி நமது புனித மார்க்கத்தை நாடெங்கும் பரப்பவே முனைந்து நிற்கின்றனர் என்று கூறுவது மிகையாகாது. நமது மார்க்கத்தையும், சமூகத்தையும் மாண்புற சீர்பெருக்கி உச்ச நிலைக்கு கொண்டுவர வேண்டுமென்பதே வாலிப முஸ்லிம்களின் பேரவாவாகுமென்பதை நாம் நன்கறிவோம். எனவே அவர்கள் தற்காலம், முஸ்லிம் சமூகத்தில் காணப்படும் சீர்கேடுகளை ஒழிப்பதற்காகவும், மதப் பாதுகாப்புக்காகவும் ஒரு மத இலாக்கா ஏற்படுத்தவேண்டு மென்பதையே ஆதரிப்பார்களென்பது திண்ணம். தன் தீய பிரசாரத்தைக்கொண்டு யுவர்களை ஏமாற்றி விடலாமென்று எண்ணிக் கொண்டிருந்த காலம் மலையேறிவிட்டது. அவ்வாறு கருதும் கூட்டத்தார் பெரிதும் ஏமாற்றமடைவார்களென்பதில் சந்தேகமில்லை. ஆகவே நமது மார்க்க - சமூக முன்னேற்றத்துக்கு பெரிதும் அனுகூலமாயிருக்கக்கூடிய மத இலாக்கா ஏற்படுத்தவேண்டுமென்று கூறுவதற்கு முரண்படுவதெல்லாம் தமது சுயநல விருத்தியைக் கருதியே யன்றி வேறல்ல என்பதை நண்பர்கள் கவனிப்பார்களாக!

நம் பிராட்டிமார்கள்.

(1) ஹஸ்ரத் கதீஜா நாயகீ (ரலி.)

இவர்களது வம்மிச வரலாறு பின்வருமாறு:—குஸ்ஸாவின் புத்திரர் அப்துல் உஜ்ஜா, இவரது புத்திரர் அஸத், இவரது புத்திரர் குவைலித், இவரது புத்திரிதான் நமது கதீஜா நாயகி (ரலி.) அவர்களாவர். இந்த வம்சத்தொடர்பு குஸ்ஸா என்பவர் வரைக்கும் போய் பிறகு இவரது வம்சம் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுடைய வம்சத்துடன் சேர்ந்துகொள்ளுகின்றது.

நபிகள்நாயகம் ரஸூல்(ஸல்.)அவர்கள் நபியாக அவதரித்ததற்கு முன்னர் கதீஜா நாயகி "தாஹிரா" என்ற சிறப்புப் பெயரால் பிரசித்திப்பெற்றிருந்தனர். அவர்களின் தாயார் "பாதிமா பின்த் ஜாயிதா" என்பவராவர். கதீஜா நாயகியின் தந்தை அவரது கூட்டத்தில் சிரேஷ்டமானவராயிருந்தார். அவர் (தமது பிறப்பிடத்தைவிட்டு) மக்காவுக்கு வந்து வாசஞ்செய்யலானார். பனூ அப்துத்தார் என்பவருக்கு மிகவும் வேண்டியவராய் (ஹலீபாக) இருந்தார். மேலும் அவர் ஆமிர் பின் லுவைவுடைய குடும்பத்தில் பாத்திமா பின்த் ஜாயிதாவை விவாகஞ் செய்துகொண்டார். இந்த பத்தினியின் வயிற்றில்தான் ஹஜ்ரத் கதீஜா நாயகி உதித்தனர்.

கதீஜா நாயகிக்கு முதல் விவாகம் அபூஹாலா பின் ஜராரா என்பவருடன் ஏற்பட்டிருந்தது. இவர்கட்கு இரு பிள்ளைகள் பிறந்தன. ஒன்றின் பெயர் "ஹிந்த்" என்பதாகும். மற்றொன்றின் பெயர் "ஹாரிஸ்" என்பதாகும். அபூஹாலா மரணமடைந்து விட்ட பின்னர் கதீஜா நாயகியவர்கள் அதீக் பின் ஆயித் மக்ஜூமீ என்பவரை மணஞ்செய்து கொண்டார்கள். இவ்விரண்டாம் வாழ்க்கையில் ஒரு பெண்குழந்தை பிறந்தது. இதன் பெயர் "ஹிந்தா" என்பதாகும். இக்காரணம் பற்றித்தான் கதீஜா நாயகிக்கு "உம்மு ஹிந்த்" என்ற மற்றொரு பெயரும் வழங்கப்படுகின்றது.

அதீக் என்பவரும் மரணமடைந்து விட்ட பின் ஹஸ்ரத் கதீஜா நாயகியவர்கள் நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்களை திருமணம்

புரிந்துகொண்டார்கள். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கட்கு (கதீஜா நாயகி வயற்றில்) ஆறு பிள்ளைகள் பிறந்தன. அதில் இரு குமாரர்கள் பால்யத்திலேயே இறந்துவிட்டனர். நான்கு திருக்குமாரர்த்திகளின் நாமங்களாவன, ஹஸ்ரத் பாதிமா நாயகி, ஹஸ்ரத் ஜைனப், ஹஸ்ரத் ருகிய்யா, ஹஸ்ரத் உம்முகுல்தூம் என்பனவாகும். (இவர்களது வரலாறுகள் பின்னர் கூறப்படும்.)

ஹஸ்ரத் கதீஜா நாயகியின் மீது நமது நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்கட்கு அளவற்ற பிரியம் இருந்துவந்தது. கதீஜா நாயகிக்கு (நபிபெருமானுடன்) திருமணமான போது வயது நாற்பது ஆகியிருந்தது. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு வயது இருபத்தைந்து. திருமணமானபின் நாயகியவர்கள் இருபத்தைந்து வயதுவரை ஜீவித்திருந்தனர். அவர்கள் ஜீவித்திருந்த காலம்வரை நாயகம் (ஸல்.) அவர்கள்வேறுகல்யாணம் செய்துகொள்ளவே யில்லை. கதீஜா நாயகி மரணமடைந்து விட்ட பின்னருங்கூடநாயகம் (ஸல்.) அவர்கள் அவ்வுத்தமியை மறந்துவிடவில்லை.

ஆயிஷா நாயகீ (ரலி) கூறுவதாவது:—நான் கதீஜாவை (ரலி.) பார்த்தில்லாவிடினும் அம்மாதின் மீது நான் மற்றெவர்மீதும் கொள்ளாத அத்துணை ரோஷம் எனக்கு வருகிறது. இதற்குக்காரணம் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மாதை சதா நினைத்து பிரஸ்தாபித்துக்கொண்டிருந்ததே யாகும். ஒரு முறை யான் இதைப்பற்றி நாயகம் (ஸல்.) அவர்களிடம் வினவினேன்; அதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள் "ஆண்டவன் எனக்கு அம்மாதின்மீது அதிகபிரியத்தை அருளியுள்ளான்" என்று கூறினார்கள்.

கதீஜா நாயகி மரணமடைந்துவிட்ட பின்னர், அவர்களது சகோதரியான ஹாலா, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை கண்டு பேசவந்தனர். வழக்காசாரப்படி "உள்ளே வரலாமா?" என்று வெளியிலிருந்து உத்தரவு கேட்டார்கள். இப்பெண்மணியின் குரலோசை கதீஜா நாயகியின் குரலோசையை ஒத்திருந்தது. எனவே அந்த ஓசை காதில் விழவே நபிபெருமானார் (ஸல்.) அவர்கட்கு கதீஜா நாயகியின் ஞாபகம் வந்துவிட்டது. உடனே நாயகம் (ஸல்.) அவர்கள் எழுந்து "ஹாலா வந்திருக்கலாம்" என்று கூறினர். இது சமயம் ஆயிஷாநாயகி அருகிலிருந்ததால் அவர்களுக்கு கோபம் வந்துவிட்டது. எனவே, ஆயிஷாநாயகி நபிபெருமானார் (ஸல்.) அவர்களை நோக்கி, "ஆண்டவன் தங்கட்கு அவரை (கதீஜாநாயகியை) விட நல்ல மனைவிகளை அளித்திருக்க, இறந்துபோன ஒரு கிழவியையா தாங்கள் நினைத்து கொண்டேயிருக்கின்றீர்கள்?" என்று கூறினார். அதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள் கூறிய சமாதானமாவது:—"அவ்வாறன்று! ஜனங்களெல்லாம் என்னை பொய்யனென்று கூறியபோது அந்த உத்தமி என்னை மெய்ப்படுத்திவைத்தனர். ஜனங்களெல்லாம் காபிராயிருந்த சமயம் அவர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொண்டனர். வேறு எந்தமனிதரும் எனக்கு உதவியாளராயில்லாத சந்தர்ப்பத்தில் அந்த உத்தமிதான் எனக்கு துணைபுரிந்து ஆதரித்தனர்."

(2) ஹஸ்ரத் ஸவ்தா நாயகி.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் தூய்மையான மனைவிமார்களில், ஹஸ்ரத் கதீஜா நாயகியின் மரணத்திற்கு பின்னர் முதன் முதலாக நாயகம் (ஸல்.) அவர்களின் திருமணத்தில் மனைவியான பெருமை ஹஸ்ரத் ஸவ்தா (ரலி.) அவர்களுக்கே உரியதாகும். ஹஸ்ரத் ஸவ்தா (ரலி.) நுபுவ்வத்தின் ஆரம்ப காலத்திலேயே இஸ்லாத்தைத்தழுவி சிறந்திருந்தனர். எனவே "பூர்வீக இஸ்லாமியர்" என்ற சிறப்பும் இவ்வுத்தமியவர்கட்குண்டு.

ஹஸ்ரத் ஸவ்தாவின் முதல் விவாகம் 'ஸூக்ரான்பின் அம்ரு' என்பவருடன் ஆகியிருந்தது. அந்த முதல் கணவருடன் சேர்ந்து ஸவ்தா (ரலி.) வும் இஸ்லாத்தைத் தழுவியிருந்தனர். அவருடனேயே அபிஸினியாவுக்கு ஹிஜ்ரத்துச்சென்றிருந்தனர். அவருடன் சேர்ந்தே அபிஸினியாவினின்றும் மக்காவுக்குத் திரும்பி வந்தனர். பிறகு ஸூக்ரான் என்பவர் சின்னட்கள் ஜீவித்திருந்து மரணமடைந்துவிட்டார். அவர்தம் ஞாபகார்த்தமாய் ஒரு ஆண்பிள்ளையை விட்டுச்சென்றிருந்தனர். இப்பிள்ளையின் பெயர் அப்துர் ரஹ்மான் என்பதாகும். ஜலூலா யுத்தத்தில் அவர் ஷஹீதாகிவிட்டார்.

கதீஜா நாயகியவர்களுடைய மரணத்தினால் நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்

கள் மிகவும் வியாகுலமடைந்து விசனத்தில் ஆழ்ந்திருந்தார்கள். இந்த நிலைமையை கண்ட கவ்லாபின்த் ஹகீம் என்பவர் நாயகம் (ஸல்.) அவர்கள் சமுகத்தில் வந்து, "தங்களுக்கு ஒரு வாழ்க்கைத் துணைவி அத்தியாவசியமாயிருக்கிறதல்லவா?" என்று கேட்டனர். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள், "ஆம்! வீட்டு விவகாரம், பிள்ளைகள் சம்ரக்ஷணை முதலிய நிர்வாகங்கள் யாவும் கதீஜாவின் பொறுப்பிலிருந்து வந்தன; அவ்வுத்தமி இப்போதில்லாததால் அவசியம் தான்" என்று பதில் கூறினார்கள். நாயகம் (ஸல்.) அவர்களின் இந்த சமிக்ஞையை தெரிந்துகொண்ட கவ்லா உடனே ஹஜ்ரத் ஸவ்தா (ரலி.) அவர்களுடைய தந்தையிடம் சென்று அறியாமைக்காலத்து முறைப்படி "அன்இம் ஸபாஹா" என்று ஸலாம் சொல்லி, விவாக விண்ணப்ப விஷயத்தை கூறினர். அதற்கு அப்பெரியார், "சரி முஹம்மத் (ஸல்.) மிகவும் உத்தமர்". தகுதியுடையவர்தான். ஆனால் ஸவ்தா இடத்திலும் சம்மதம் கேட்கவேண்டுமென்றனர். சுருங்கக்கூறுமிடத்து எல்லா ஏற்பாடுகளும் செவ்வனே முடிந்துவிட்டன. பிறகு நாயகம் (ஸல்.) அவர்கள் பெண்வீட்டுக்கு அழைத்து வரப்பட்டார்கள். மணவதியான ஸவ்தாவின் தந்தையே நிகாஹ்வின் குத்பா ஓதினார். நானூறு திர்ஹம் 'மஹர்' ஏற்படுத்தப்பட்டது. இந்த சம்பவத்தின்போது ஸவ்தாவின் சகோதரரான அப்துல்லாஹ் பின்ஜம்ஆ என்பவர் காபிராகத்தானிருந்தார். இந்தச் செய்தியை கேள்வியுற்றதும் சினங்கொண்டு அவர் தம் தலையில் மண்ணைவாரிப் போட்டுக் கொண்டார். பிறகு, அவர் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்ட பின்னர், தமது அறிவீனத்தினாலான மேற்படிச் செயலைப்பற்றி சதா வருந்திகொண்டிருந்தார்.

ஹஸ்ரத் ஆயிஷா நாயகி, ஸவ்தா நாயகி ஆகிய இருவரின் விவாகமும் அநேகமாக ஒரே காலத்தில்தான் நடந்ததென்றும், யாருடைய விவாகம் முதலில் நடந்ததென்று சொல்வதற்கில்லையென்றும் சரித்திராசிரியர்களுக்குள் அபிப்பிராயபேதமிருக்கின்றது. ஹஸ்ரத் ஸவ்தாவின் விவாகம்தான் முதலில் நடந்ததென்று இப்னு இஸ்ஹாக் அறிவிக்கிறார். ஹஸ்ரத் ஆயிஷா நாயகிக்கு விவாகமான பின்னர்தான் ஸவ்தாவுக்கு விவாகமாயிற்றென்று அப்துல்லாபின் முஹம்மத்பின் உகைல் கூறுகின்றார்.

ஹஸ்ரத் ஸவ்தா நாயகி உயர்ந்த தோற்றமும், பருத்த சரீரமும் உடையவராயிருந்தனர். இக்காரணமாக அவர் விரைவாக நடந்து செல்வதற்கு இயலாதவராயிருந்தனர். ஹஜ்ஜதுல் விதாஃவில் "முஸ்தலிபா"விலிருந்து புறப்பட்டு செல்ல வேண்டிய தேற்பட்ட போழ்து, ஸவ்தா அவர்கள் நாயகம் (ஸல்.) அவர்களை யணுகி, "கூட்டத்தில் கலந்து செல்வதனால் தமக்கு கஷ்ட மேற்படுமாதலால் தான்மட்டும் எல்லோரினும் முன்னடியாய் செல்வதற்கு அனுமதிக் கேட்டுக் கொண்டார்கள்.:

பர்தாவின் ஆயத்து இறங்குவதற்கு முன், அராபியரின் பழையகால வழக்கப்படியே நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது மனைவிமார்களும் மலோபாதைக்காக வென்று வெளி மைதானங்கட்கு சென்றுகொண்டிருந்தனர். இந்த வழக்கம் ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கட்கு மிக வெறுப்பாய் காணப்பட்டு வந்தது. எனவே நாயகம் (ஸல்.) அவர்களிடம் சென்று பெண்கள் பர்தாவுக்குள்ளவேயிருக்கவேண்டுமென்று கோரிக்கொண்டார்கள். இந்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படத்தக்க சந்தர்ப்பம் நேராமலிருந்தது. ஹஸ்ரத் ஸவ்தா அவர்கள் ஒருமுறை இரவில் மலோபாதைக்காக வேண்டி வெளியே புறப்பட்டார்கள். இவரது உயரம் வெளிப்படையானதால் இதனை ஹஸ்ரத் உமர் (ரலி) தெரிந்து கொண்டு ஹஸ்ரத் ஸவ்தாவுக்கு அறிவித்துவைத்தார்கள். இந்த சம்பவத்துக்கு பிறகுதான் ஹிஜாப் (பர்தாவின்) ஆய்த்து இறக்கிவைக்கப்பட்டது.

நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்களுடைய சற்குண நல்வழக்கங்களில் தானதருமஞ் செய்வது சிரேஷ்டமான ஓர் சத்தொழுக்கமாயிருந்துவந்தது. இவ்வாறே, நாயகம் (ஸல்.) அவர்கள்பால் அதிகம் நெருங்கிய சஹாபியாய் இருந்து வந்தோர் அதற்கேற்ப அச்சிரேஷ்டமான சத்தொழுக்கத்தில் சிறந்தவர்களாய் விளங்கிவந்தனர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சத்குண நல்லொழுக்கங்களை கண்டனுபவித்து அந்நற்கருமத்தை பின்பற்றி நடக்க நாயகம் (ஸல்.) அவர்களின் மனைவி மார்கட்கு அதிக இடம்

பாடிருந்து வந்தது. ஆகவே தான் நபி பெருமானார் (ஸல்.) அவர்களது மனைவி மார்கள் தான தருமஞ் செய்வதில் சிறந்து விளங்கினர்.

ஹஸ்ரத் ஸவ்தா நாயகியவர்கள், இந்த சத் கரும அனுஷ்டானத்தில் ஆயிஷா நாயகியை காட்டிலும் மிகவும் சிறந்தவர்களாயிருந்து வந்தனர். உதாரணமாய், ஒருமுறை ஹஸ் ரத் உமர் (ரலி.) அவர்கள் ஹஸ்ரத் ஸவ்தா அவர்கட்கு பை ஒன்று அனுப்பிவைத்தார் கள். இதைக்கண்ட ஸவ்தா, அதைக்கொண்டு வந்தவரை நோக்கி" இதற்குள் என்ன இருக் கிறது ?" என்று கேட்டார். "இதில் திர்ஹம் — நாணயங்கள் இருக்கின்றன" என்று அதற்கவர் பதில் கூறினர். இதைக்கேட்ட ஸவ்தா நாயகி "ஆ! பேரீச் சம்பழங்களைப்போல் நாணயங்கள் பையிலு மா போட்டு அனுப்பப்படுகிறது?" என்று வியந்துகூறி, அந்த நாணயம் யாவற்றையும் அச்சமயமே விநியோகித்து தருமஞ்செய்து விட்டனர். இவ்வாறே ஆண்டவனுக்கு அடி பணிந்து நடப்பது, கட்டளைகட்கு வழிப்பட்டு நடப்பது ஆகிய சத்குணங்களில் ஸவ்தா நாயகி மற்ற மனைவிமார்கள் எல்லாரினும் சிறந்து விளங்கினார்கள்.

ஹஸ்ரத் ஸவ்தா நாயகி மரணமடைந்த ஆண்டு எதுவென்பதில் அபிப்பிராய பேத மிருக்கின்றது. அமீர் முஆவியாவின் கிலாபத் ஆட்சிகாலத்தில் ஹிஜ்ரீ 54-ல் மரண மடைந்ததாக 'வாகிதீ' கூறுகின்றார். ஹிஜ்ரீ 55-ல் மரணமடைந்ததாக ஹாபிஜ் இப்னு ஹஜர் எண்பிக்கின்றனர். ஹஸ்ரத் உமர் (ரலி.)யின் கிலாபத் காலத்தில்மரணமடைந்த தாக இமாம் புகாரீயவர்கள், சரித்திரத்தில் சரியான ஆதாரத்தைக் காட்டியுள்ளார்கள்.

(3) ஹஸ்ரத் ஆயிஷா (ரலி.)

ஆயிஷா வென்பது அவர்களது சுயநாம மாகும். இவர்களுக்கு பிள்ளை கிடையாது. ஆயிஷாநாயகி, அப்துல்லாபின் ஜுபை ருடைய பிள்ளையை (பட்சமாய் வளர்த்தமை யால் இதை) யொட்டி இவ்வுத்தமிக்கு "உம்மு அப்துல்லா" என்றொரு காரணப் பெயருமுண்டு. ஆயிஷா நாயகியின் தாயாரின் பெயர் 'ஜைனப்' என்பதாகும். இவருக்கு "உம்மு ரூமான், என்பது காரணப் பெயர். நபிப்பட்டம் கிடைத்து நான்கு வருடங்கள் ஆனபின்னர் ஆயிஷா நாயகி பிறந்தார்கள்.

நபித்துவத்தின் பத்தாவது வருடம், ஆயிஷாநாயகியின் திருமணம் நபிகள் நாய கம் (ஸல்.) அவர்களுடன் நடந்தது. இந்த சமயத்தில் ஆயிஷாநாயகி ஆறு வயதுடைய வராயிருந்தனர். கதீஜா நாயகி அவர்கள் மரணமடைந்து விட்டபின்னர், கவ்லாபின்த் ஹகீம் அவர்கள் நபிகள்நாயகம் (ஸல்.) அவர் களிடம் சென்று விவாகம்செய்து கொள்ளு மாறு தூண்டினர். நாயகம் (ஸல்) அதற்கு சம்மதிக்கவே கவ்லாஎன்பவர், கதீஜாநாயகி யின் தாயாரிடம் சென்று விஷயத்தைத் தெரிவித்தனர். இதை அந்த அன்னை ஹஸ் ரத் அபூபக்ர் (ரலி.) அவர்கட்கு அறிவித்த னர். எனவே, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர் கள், ஜுபைரின் முத்இமுக்கு வாக்குறுதி யளித்துவிட்டதாகவும், இதுவரை தாம் சொன்ன வாக்கு மீறிநடந்ததில்லை யென் றும் கூறினார்கள். ஆனால் முத்யிமே வேண் டாமென்று நிராகரித்து விட்டதின்பேரில் கடைசியாய், கவ்லாவின் சார்பாக நாயகம் (ஸல்.) அவர்கட்கு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்கள் தமது அருமைக்குமார்த்தியை விவாகம் முடித்துக் கொடுத்தார்கள். நானூறு திர்ஹம் மஹர் தொகையாக ஏற் படுத்தப்பட்டது. ஆனால் பொதுவாக நாய கம் (ஸல்) மனைவியர்கட்கு மஹர் தொகை 500-திர்ஹம் விகிதம் ஏற்பட்டு வந்ததென்று "முஸ்லிம்" என்ற கிரந்தத்தில் அறிவிக்கப் பட்டிருக்கின்றது.

இந்த விவாகத்துக்குப்பிறகு நபிகள்நாய கம் (ஸல்.) அவர்கள் 3-வருடம்வரை மக்கா வில் தங்கியிருந்தார்கள். 13-ம் ஆண்டில் நாயகம் (ஸல்.) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ் ரத்துச் சென்றபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்கள்மட்டும் கூட இருந்தார்கள். மனைவிமக்கள் யாவரையும் மக்காவிலேயே விட்டுச்சென்றார்கள்.

பின்னர்மதீனாவில் மனநிம்மதி ஏற்படவே, உம்முரூமான், அஸ்மா, ஆயிஷாநாயகி முத லியவர்களை அழைத்து வருமாறு அப்துல்லா பின் அரீகத் என்பவரை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.)அனுப்பிவைத்தார்கள். இவ்வாறே நபி கள் நாயகம் (ஸல்.) அவர்களும், பாத்திமா நாயகி, உம்முகுல்தூம், ஹஸ்ரத் ஸவ்தா முத

ஸியவர்களை அழைத்து வருமாறு ஜைத்பின் ஹாரிஸா அபூராபிஃ என்பவரை அனுப்பி வைத்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா நாயகி மதீனாவுக்கு வந்து கடுமையான ஜுரத்தால் பாதிக்கப்பட்டார்கள். இந்நோயின் கடுமையினால் தலைரோமமும் உதிர ஆரம்பித்தது. சரீரசுகமடைந்த பின், உம்முரூமான் அவர்கள் ஆயிஷா நாயகிக்கு சுபச்சடங்கு நிறைவேற்றிவைக்க வேண்டுமென்று கருதினார்கள். இச்சமயம் ஆயிஷாநாயகி 9-வயதுடையவராயிருந்தனர். தமதுதோழிகளுடன் ஊஞ்சலில் விளையாடிக் கொண்டிருந்தனர். உம்முரூமான் அவர்கள் ஆயிஷா நாயகியை கூவி அழைத்தனர். இச் சம்பவத்தைப்பற்றி ஆயிஷா நாயகிக்கு விஷயமே தெரியாமலிருந்தது. கூவி அழைக்கவே தம் தாயாரிடம் வந்து சேர்ந்தனர். தாயார் தம்மகளின் முகத்தை கழுவினர்; தலைமயிரைசிவி ஒழுங்கு படுத்தி வீட்டுக்குள் அழைத்துச் சென்றனர். "அன்ஸார்" வீட்டுப் பெண்கள் ஆயிஷாநாயகியின் வரவை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருந்தனர். இவர்கள் யாவரும் வாழ்த்துகூறினார்கள். காலையாகாரத்தின் நேரம் நாயகம் (ஸல்.) அவர்கள் வீட்டுக்கு விஜயம் செய்தார்கள்; இது சமயம் சடங்கு நிறைவேற்றப்பட்டது. ஷவ்வால் மாதத்தில்தான் விவாகம் நிகழ்ந்திருந்தது. ஷவ்வால் மாதத்திலேயேதான் இச்சடங்கும் நிறைவேற்றி வைக்கப்பட்டது.

ஹஸ்ரத் ஆயிஷாநாயகி, நபிகள்நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்களுடன் 9-வருடங்கள் வரை வாழ்ந்திருந்தார்கள். 9-வது வயதில் தான் ஆயிஷாநாயகி நபிபிரான் (ஸல்.) சமுகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். நபிகள்நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்கள் வபாத்தாகும்போது ஆயிஷாநாயகிக்கு வயது 18-ஆகியிருந்தது. நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்களது ஜீவியத்திற்கு பின்னர் ஹஸ்ரத் ஆயிஷா நாயகி சுமார் 48-வருடங்கள்வரை ஜீவித்திருந்தார்கள். பிறகு ஹிஜ்ரீ 57-ம் ஆண்டில் மரணித்துவிட்டார்கள். அதுபொழுது அவர்களது வயது 66-ஆகியிருந்தது. ஆயிஷாநாயகி 'வஸிய்யத்' செய்தவண்ணம் ஜன்னத்துல் பகீஇல் இரவில் நல்லடக்கம் செய்யப்பட்டனர். மய்யித்தை கப்ரில் இறக்கியவர்கள் காஸிம்பின் முஹம்மத், அப்துல்லாபின் அப்துர்ரஹ்மான், அப்துல்லாபின் அபீ அதீக், உர்வாபின் ஜுபைர், அப்துல்லாபின் ஜுபைர் ஆகியவர்களாவர். அதுகாலை ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி.) அவர்கள் மர்வான்பின் ஹகம் என்பவரின் சார்பாக மதீனாவின் அதிகாரியாகயிருந்தனர். ஆகவே இவர்கள் ஜனாஸா தொழுகை தொழவைத்தனர்.

நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்கட்கு ஹஸ்ரத் ஆயிஷா நாயகியின்மீது அதிக அன்யிருந்துவந்தது. இந்த அன்பின் காரணமாய் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் தங்கள் மரணசமயம் எல்லா பத்தினிமார்களிடமும் அனுமதி வாங்கிக்கொண்டு தங்கள் ஜீவியத்தின் கடைசி தினத்தில் ஹஸ்ரத் ஆயிஷா நாயகியின் வீட்டிலேயே தங்கியிருந்தார்கள். நாயகம் (ஸல்.) அவர்கள், இவ்வித விசுவாசத்தை வெளிப்படுத்தும் முறைகளைப்பற்றி ஹதீதுகளிலும், சியர்கிதாபுகளிலும் மிக விஸ்தாரமாக கூறப்பட்டிருக்கிறது.

ஆயிஷா நாயகியவர்களுடைய கல்வித் திறமையானது சிறப்புப்பொருந்தியதாயிருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர், (ரலி.) ஹஸ்ரத் உமர், (ரலி.) ஹஸ்ரத் உதுமான் (ரலி.) ஆகியவர்களுடைய காலத்தில் ஆயிஷா நாயகி 'பத்வா' அளித்து வந்தார்கள். பெரிய பெரிய சஹாபாக்களிடம்கூட மிக நுணுக்கமான விஷயங்களைப்பற்றி தர்க்கித்துள்ளார்கள். அந்த விவரங்களையெல்லாம் தொகுத்து அல்லாமா ஸுயூத்தி அவர்கள் ஒரு நூல் வெளியிட்டுள்ளார்கள்.

ஷரீஅத்தின் சட்டதிட்டங்களில் நான்கிலொருபாகம் ஆயிஷா நாயகி (ரலி) அவர்களால்தான் அறிக்கப்பட்டதென்று சில அறிஞர்கள் கூறியுள்ளனர். ஏதேனுமொரு விஷயத்தைப்பற்றி சந்தேகம் தோன்றுமாயின் அதை ஆயிஷா நாயகியிடம் கேட்டுத்தான் தீர்த்துக்கொள்வதென்று திர்மதீயில் கூறப்பட்டுள்ளது. "ஆயிஷா நாயகியின் பிரசங்கத்தைவிட நல்ல இனிமையானதை நாங்கள் கேள்விப்பட்டதே கிடையா"தென்று அவர்களது சிஷ்யர்கள் அறிவித்துள்ளனர்.

தப்ஸீர், ஹதீஸ், ஷரீஅத்தின் நுட்பங்கள், ஒழுக்கபோதனை முதலிய துறைகளில்

ஆயிஷாநாயகி (ரலி.) அவர்களுக்குநல்ல பாண்டித்தியமிருந்தது. கவிவாணர்களின் பெரும் பெரும் கவீதாக்களும் ஆயிஷா நாயகிக்கு மனப்பாடமாயிருந்து வந்தன. ஹாகிம் முஸ்தத்ரிக் என்னும் நூலிலும், இப்னுஸஅத் தபகாத் என்னும் நூலிலும் விளக்கமாக இவ் விஷயங்களைப்பற்றி எழுதியுள்ளார்கள். மஸ்னத் இப்னு ஹன்பல் முதலியவற்றிலும் ஆயிஷா நாயகியின் சிறப்பு - மேன்மைக்குரிய சிற்சில ஆதாரங்களும் அத்தாட்சிகளும் காணப்படுகின்றன.

(தொடரும்.)

இந்தியத்தொழில் நிலையும், முஸ்லிம்களும்.

(ஜனாப் அப்துல் மஜீது சாஹிப் கர்ஷீ வரைவது)

ஒரு வியாதியஸ்தன்:—(ஒரு நல்ல வைத்தியரிடஞ்சென்று:—)"பெரியீரே! எனது தேக நிறம் பஞ்சளாய் காணப்படுகின்றதே இதன் காரணமென்ன? என்று கேட்டான்.

வைத்தியர்:—"நல்ல இரத்தக் குறைவின் பலன்தான் இது."

வியாதியஸ்தன்:—"யான் இரவிலும் நன்றாய் அயர்ந்து தூங்கமுடிகிறதில்லையே!"

வைத்தியர்:—"அதுவும் நல்ல இரத்தக் குறைவின் பலன்தான்."

வியாதியஸ்தன்:—எனக்கு பசியும் சரியாய் எடுப்பதில்லை; கண்பார்வையும் குறைவாகிவிட்டது; ஹிருதயம் என்னேரமும் அயர்ந்து போயிருக்கிறதே.

வைத்தியர்:—"நல்ல இரத்தக் குறைவின் பலன்தான் எல்லாம்."

வியாதியஸ்தன்:—(சிறிதுநேரம் நிதானித்துவிட்டு) வைத்தியரே! எனது இடுப்பும் வளைந்துவிடுகின்றது. சிறிதுநேரம் எதையேனும் கண்ணோட்டமிட்டால் மூளை மயக்கமடைகின்றதே.

வைத்தியர்:—"நல் இரத்தக் குறைவின் பலன்தான் அதுவும்,"

மேற்படி சம்பாஷணையினின்று எல்லா நோய்கட்கும் மூலகாரணம் சரீரத்தில் நல்ல இரத்த மின்மையென்பதை உணர்கின்றோம். நம்முஸ்லிம்களுடைய தற்கால நிலைமைமுற்றும் இதையொத்து தானிருக்கின்றது. முஸ்லிம்களில் ஏதோ ஒரு குறைமட்டுந்தானிருக்கிறதென் முடிவுசெய்வதற்கில்லை. ஆயிரக்கணக்கான குறைகளிருக்கின்றன. ஒவ்வோர் அங்குலத்தி லொருகுறையும், ஒவ்வோர் அடியில் ஒரு சங்கடமும் ஏற்பட்டிருக்கின்றன.

உதாரணமாய், முஸ்லிம்களில் ஜன ஒற்றுமையும் சமூக புனருத்தாரண முயற்சியுங் கிடையாது. கல்வியில் நம்மவர்கள் மிகவும் பிற்போக் கடைந்திருக்கின்றனர். முஸ்லிம்களுக்குள் மார்க்கப்பற்று, மத உணர்ச்சி ஆகியவையும் பெரிதும் குறைந்து போய்விட்டன. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துவிட்டது. நமது முஸ்லிம் சமூகத்தாரனைவர்மீதும் சோம்பலும் வறுமையும் கவிழ்ந்துகொண்டிருக்கின்றன. சுருங்கக்கூறுங்கால்,முஸ்லிம்கள் விஷயமாய் எத்தனை குறைகள் வேண்டுமானாலும் எண்ணிக்கொண்டேபோய் இவற்றையெல்லாம் ஒரு பக்கல் எழுதிவைத்துக்கொண்டு, இதற்குரிய காரணமென்னவென்று தேடிப்பார்த்தால், யாவற்றிற்கும் மூலகாரணம் **வறுமை** என்றே திண்ணமாய் தெரியவரும்.

சூரியனை ஆராய்ச்சி செய்யும் கண்ணாடியில் சூரியனை பார்த்தால் அதன் சர்வ ஒளியும் கிரணமும் ஒன்றுசேர்ந்து மத்தியத்தில் காணப்படுவது போலவும், பஞ்சாபில் பரவியுள்ள நதிகளெல்லாம் நானாபக்கத்தினின்று வந்து ஏகமாகி "பஞ்சநதிதீர"த்தில்வந்து சேர்ந்துகொள்வது போலவும், முஸ்லிம் சமூகத்தின் கஷ்டங்கள், சங்கடங்கள், வேலையில்லா திண்டாட்டம் முதலியனயாவும் வறுமை யென்னும் மூலகாரணத்தின் மீதேவந்து சேர்கின்றன. மேலே கூறிய சம்பாஷணையில் அந்த வைத்தியர், நோயாளியின் ஒவ்வொரு

குறைக்கும் "நல்ல இரத்தக்குறைவின் பலனே இது" என்ற ஒரேவித பதிலைத்தான் கூறிவந்துள்ளார். இதேவிதமாகவே 'முஸ்லிம் சமூகம்' என்ற சரீரத்தில் காணப்படும் காயம், புண், படை, வீக்கம் முதலியயாவும், அதிலும் 'இந்திய முஸ்லிம்கள்' என்ற தேகத்தில் காணப்படும் குறை, நோய், பலமின்மை, அசதி முதலியனயாவும் அந்த "நல்ல இரத்தம்" என்ற செல்வம் இல்லாமையின் காரணமேயன்றி வேறில்லை.

பொருளின்மையின் தீமைகள்.

உயர்தரக்கல்வி விஷயத்தில் முஸ்லிம்கள் இதர சமூகத்தாருடன் போட்டிபோட முடியாது. வியாபாரத்துறையிலும் முஸ்லிம்கள் பிற்போக்கேயடைந்துள்ளனர். சில முஸ்லிம்கள் மிக படாடோபமாகவும் ஆடம்பரமாகவும் புதுக்கடைகள் திறப்பதுண்டு; ஆனால் போதிய மூலதனம் திறமை அனுபவம் முதலியன இல்லாக்காரணத்தால் சின்னாட்களிலேயே அக்கடைமுடிவடைந்தொழிவதுண்டு. இஃதொருபக்கமிருக்க, இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் வயிற்றுக்கே உணவில்லாமல் அவதிப்படுகின்றனர். தொல்லைகளின் காரணத்தால் அநேகமுஸ்லிம்கள் தங்கள் தீனுல் இஸ்லாத்தைவிட்டு ஹிந்து மதத்துக்கும், கிறிஸ்துவ மார்க்கத்துக்கும் போய் சகாயம் தேடிக்கொள்வது முண்டு. இதற்கெல்லாம் மூலக்காரணமாயிருப்பது பொருளின்மை, வறுமை, தொல்லை ஆகியவைகளாகும்.

ஆகவே எதுகாறும் முஸ்லிம்கள் தங்கள் கேவல நிலையை உற்றுணர்ந்து சமுதாயப் பொருளாதாரம், மூலதனம், குடும்பச் சொத்து, நிலஸ்வாதீனம், தனிப்பட்ட செல்வம் ஆகியவற்றையெல்லாம் பாதுகாத்துக் கொள்ள பெரிதும் சிரத்தையுங் கவலையுங் கொள்ள மாட்டார்களோ, அதுகாறும் இவர்களின் முயற்சிகளெல்லாம் நிலைத்து நின்று நற்பிரயோஜன மளிக்கமாட்டாதென்பது திண்ணம்.

இதற்கு என்ன பரிகாரம்?

உஷ்ணமான நல்ல இரத்த ஓட்டம் ஓர் இளைஞனுடைய சரீரத்துக்கு எத்துணை அத்தியாவசியமானதா யிருக்கின்றதோ, அவ்வாறே பொருளாதாரமானது சமுதாய வாழ்வுக்கு அத்தியாவசியமா யிருக்கின்றது. எந்த சமூக வாழ்வும், பொருளாதாரமென்ற இரத்த ஓட்டமில்லாமல் தன் ஜீவியத்தையும் முன்னேற்றத்தையும் நிலை நிறுத்திக்கொள்வதென்பது முடியாது. ஆகவே நாம் சமூக—குடும்ப பொருளாதார நிலைமையில் யாது செய்தால் முன்னேற்றமடையலாமென்னும் கேள்வி பிறக்கிறது.

(1) நாம் பத்திரிகைகளில் இலக்கணமும் இனிமையுமான வியாஸங்களை எழுதி வெளியிடுவதால் இந்த நோக்கம் நிறைவேறிவிடுமா?

(2) உருக்கமும் அழுத்தமுமான பிரசங்கங்களை செய்துகொண்டிருப்பதனால் நமது வறுமைத்தொல்லைகள் நிவர்த்தியாகிவிடுமா?

(3) வெறுமனே கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பதால் நமது சமூகத்தை பசி வேதனையினின்று காப்பாற்றிவிட முடியுமா? இல்லை.

இதுகாலையுங்கூட ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் உலகச்சாதனம் வேண்டுமென்பதற்காக பீர்களையும், பக்கீர்களையும், யோகிகளையும், ஆங்கிலேய அதிகாரிகளின் வாயலையும் அணுகி அலைந்து வேண்டுகின்றனர் என்பதை நாம் காணுகின்றோம். ஆனால் இவ்விதம் அலைந்து திரிந்து வேண்டிநிற்கும் ஆயிரம் பேர்களுள் ஓர் ஐந்து பேருக்குத்தான் காரியம் சித்தி பெறக்கூடும்? பொருளாதார முன்னேற்றத்துக்கு அவசியமான கல்வியை முஸ்லிம்கள் எதுவரை சரிவரக் கற்றுத் தேர்ச்சிபெற மாட்டார்களோ அதுவரை வெறும் அலைச்சல் முதலிய பிரயாசைகளால் மாத்திரம் கோரியபலன் கிடைக்கப் போவதில்லை.

ஒரு பெரிய தடை.

என்னதான் ஆயிரக்கணக்காய் பிரசங்கங்கள் செய்தபோதிலும், வியாஸங்கள் எழுதிப் படித்தபோதிலும், ஆங்கிலேயர்கட்கு எதிர்ப்புப்புரிந்தபோதிலும், ஹிந்துக்களை எதிர்த்து நின்றபோதிலும் நம் முஸ்லிம்கள் வர்த்தகம், உற்பத்தித்தொழில் காரியாதிகள் ஆகியவற்றில் பங்கெடுத்துழைக்க முன்வராத வரையில் அவர்கள் ஒருபோதும் வர்த்தக தொழில் துறைகளில் சங்கடம் நீங்கியவர்களாகவே மாட்டார்கள். இத் துறைகளில் இது காலை துணிந்து இறங்கிவிடலாமென்றாலோ 'தற்கால நிலையின் கிளர்ச்சியும், அதிருப்தியான நிலையும்' பெரிய தடைக்கல்லாயிருக்கின்றன.

முஸ்லிம் சமூகத்தின் தற்கால நிலையின் போக்கே சொல்லத்தரமன்று! முஸ்லிம்களில் பெரும்பாலோர் சுய உணர்ச்சியே அற்றுப்போனவர்களாய் காணப்படுகின்றனர். இவர்கள் காலமாறுதல்களை சிறிதும் கவனியாது மயங்கித்திரிகின்றனர். நம் முஸ்லிம்களில் ஒரு சிலர் தைரியங்கொண்டு துணிந்து சற்று முன்னுக்கு வந்து ஏதோ ஒரு வியாபாரம் அல்லது தொழில் துறைகளில் கூட்டாகப் பிரவேசிக்கின்றனர். எனினும், அவர்களுடைய கூட்டாளிகள்—நேசர்கள் ஆகியவர்களின் மோச எண்ணம், தீய செயல்களின் காரணத்தால் பெரிதும் நஷ்டமும் துயரமுமடைகின்றனர். இந்த சோதனையினின்று ஒரு பெரிய புத்திகற்றுக்கொண்டு பிறகு தம் ஆயுள்பரியந்தம் அத்துறைகளில் பிரவேசிக்கத்துணியாமலே சோம்பற்கொண்டிருந்துவிடுகின்றனர்.

பஞ்சாப் பகுதியில் இத்தகைய தன்மை வாய்ந்த ஆயிரக்கணக்கான செல்வந்தர்களும், ஜமீன்தார்களும் காணப்படுவர். அவர்கள் ஏதேனும் வருவாய் துறையில் இறங்கி பணஞ் சம்பாதிக்க ஆசைப்படுகின்றனர், எனினும், தங்கள் மூலதனத்தை தைரியமாக அந்த வர்த்தக தொழில் துறையில் வாரியிறைக்கதிட நம்பிக்கையில்லாமல் பின்னடைந்துவிடுகின்றனர். இதனால் இவர்கள் அதிக சம்பாத்தனையில்லாமல் வீட்டில் சும்மாயிருந்து தின்பவர்களாய் காணப்படுகின்றனர்.

பேருக்கு கம்பனிகளாயிருப்பவை, சாதாரண தொழிற்சாலைகளாயிருப்பவை ஆகியவற்றின் போக்கு மிகவருந்தத்தக்கதா யிருக்கின்றது. இவை ஆரம்பிக்கப்படுகின்றன; அடுத்தபடியாய் சொற்பதினத்தில் தொழிலாளர், குமஸ்தாக்கள், மானேஜர்கள் ஆகியோரின் மோசத்தனத்தாலும், ஒழுங்கற்ற நிர்வாகத்தாலும் பெரும் நஷ்டமடைந்து சர்வ நாசமாய் மறைந்து விடுகின்றன.

காலத்தின் கூக்குரல்.

இதுகாறும் கூறப்பட்டு வந்தவைகளெல்லாம் வியாபாரம், தொழில் நிர்வாகம், முதலியநிலைகளைப் பற்றியதாகும். இனி தற்கால உலகநிலை, காலத்தின் நெருக்கடி ஆகியவற்றைப் பற்றியும் சிறிது கூறுவாம். உலகத்தின் நாகரிகப்போக்கு, வாழ்க்காசார நிலை ஆகியவற்றை உற்று நோக்குங்கால், இவை மின்சார வேகத்தை விட மிக துரிதாகவே மாறுபட்டுச் செல்வதாய் தெரிகின்றது. நிலச்சுவாதீனக்காரர்கள்மீது சுமக்கமுடியாத கடன் பளு ஏறிப்போயிருக்கிறது. அநேக பிரபுக்கள் பொருளாதாரத்தில் தலை கீழாகக் கவிழ்ந்து விட்டனர். பூர்வீக பிரமுகக் குடும்பங்களின் நிலையோ மிக சீர்கேடாய் விட்டது. இக் குடும்பங்கள் சம்பாதிக்க வகையில்லாமல் இருந்து, சொத்து நிலம் முதலியவற்றை ஒன்றன்பின் ஒன்றாய் விற்று தின்று காலங் கழித்து வருகின்றன.

தவிர, முஸ்லிம் ஜமீன்தார்கள், தங்களுக்குள்ள நிலம், சொத்து ஆகியவற்றின் வரும்படியைக் கொண்டே காலக்ஷேபம் செய்து கொள்ள வேண்டியவர்களாயிருக்கின்றனர். எனினும் இவர்களின், குடும்ப நிர்வாகம் ஒழுங்காக யிருப்பதில்லை. உதாரணமாய், சில காணி நிலங்களை வைத்துக்கொண்டு அதன் வரும்படியைக் கொண்டு ஒரு பெரியவர் குடும்பம் நடாத்துகின்றார் என வைத்துக்கொள்வோம்; அவருக்குபின் அவருடைய நான்கு ஐந்து பிள்ளைகளும் அதே சொத்தை வைத்துக்கொண்டு அதே அந்தஸ்தில் காலம் கழிக்க முடியுமா?

தொழில், வித்தை, வர்த்தகம் ஆகியவை இந்நெருக்கடியான காலத்தில் முன்னேற்ற வழியினின்று வெகுதூரம் சென்று கொண்டு போய்விட்டது. முஸ்லிம்கள் இத்துறையில் ஈடுபட்டு போதிய பலனடைந்து விட்டதாய் சொல்லமுடியாது. இந்நிலைமையில் தற்கால அரிய சந்தர்ப்பத்தை வீணில் கழித்து விடக் கூடாது. நன்கு யோசித்து காரியங்களை ஒழுங்குடன் புரிந்து செல்லும் ஆற்றலுடைய முஸ்லிம்கள் காலதாமதஞ்செய்யாமல், கைத்தொழில், வித்தை வர்த்தகம் ஆகியவற்றில் பிரவேசித்து முன்னேற முயல வேண்டும்.

காலத்தின் புதுமை.

சட்டமறுப்புக்கிளர்ச்சி, பரதேசத்துணி பகிஷ்காரம் ஆகிய இயக்கத்தினால் இந்தியாவின்கண் உள்நாட்டுதொழில், பொருள், முதலியவற்றிலெல்லாம் ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. சமீபத்தில், அன்னிய நாட்டுத்துணிகள் விற்கக்கூடாதென்ற உணர்ச்சி கிளப்பப்பட்டபோது இவ்விந்தியாவிலுள்ள சுதேசத் தொழிற்சாலைகள் போதியவாறு

முன்னேற்றத்துக்குவந்தன. இந்நாட்டு கடை வீதிகளில் சுதேசப் பொருள்களை ஆதரிக்க வேண்டுமென்ற பற்றும்பேச்சும் அதிகரித்து விட்டன. இதைப்போன்ற நல்ல சந்தர்ப்பம் இதற்கு முன் ஏற்பட்டதில்லை. யாவற்றினும் பிரதானமான விஷயமாயிருப்பது எல்லா நாட்டுமக்களிடையேயும் இக்கோண முதல் அக்கோணம்வரையும், சுதேசப் பொருட்களையே உபயோகிக்க வேண்டுமென்ற பேருணர்ச்சி ஏற்பட்டுவிட்டதேயாம். ஆகவே, இவ்வரிய சந்தர்ப்பத்தில் நஞ்சமூகத்தினர் தொழில் துறையில் ஊக்கத்துடன் பிரவேசித்து முயற்சிப்பார்களாயின் முன்னேற்றத்துக்கு வருவார்களென்பதில் சந்தேகமில்லை.

திடஎண்ணமுள்ள முஸ்லிம்கள் முன்வருக!

இவ்வாறுள்ள நல்ல சந்தர்ப்பத்தை நம் முஸ்லிம்கள் வீண்பேச்சு, சேஷ்டை, குறை சொல்லல் ஆகியவற்றிலேயே கழித்துவிடுவார்களோ? அன்று. முஸ்லிம்காள்! வானத்தினின்று தேவத்தூதர்கள் இறங்கிவந்து உங்களுக்கு கடைகளை வைத்தும், தொழிற்சாலை ஏற்படுத்தியும் கொடுப்பார்களென்று காத்திருக்க வேண்டாம். ஒவ்வொரு சமூகமும் தனது சொந்தசக்தி, திறமை, அனுபவம், முயற்சி ஆகியவற்றை கொண்டே பெரிய பெரிய வியாபாரம், தொழில், வித்தை முதலியவற்றில் வெற்றிபெற்று சிறந்து விளங்குவதுண்டு. இவ்வாறே நம் முஸ்லிம் சமூகத்துக்கும் தம் சக்தி, திறமை, அனுபவம், ஊக்கம், முயற்சி ஆகியவற்றால் தான் ஜயம் கிடைக்கும். நேயர்காள்! இதற்குரிய காலம் வந்துவிட்டது. திறமையுள்ளோர் முன்னடிவைத்து துணிந்துவாருங்கள்! சமூகத்தை முன்னுக்குக் கொண்டுவாருங்கள்! கூட்டுக்கம்பனிகள் துவக்குங்கள். தொழிற்சாலைகளை ஸ்தாபியுங்கள்! உண்மை, வாக்குறுதி சத்தியம், சகிப்புத்தன்மை, பொறுமை இவற்றை கைப்பிடியாய்க்கொண்டு மேலுக்கு செல்லுங்கள்! பின்னடையாதீர்கள்! வஸ்ஸலாம்.

இஸ்லாமிய உலகம்

பால்கன் பிரதேச முஸ்லிம்கள்.

பால்கன் பிரதேசமானது ஐரோப்பிய சாதனங்களாலும், கிறிஸ்துவ விசேஷங்களாலும் சூழப்பட்டுள்ளதாயிருக்கின்றது. இவ்வாறிருப்பினும், ஆங்கு இஸ்லாமிய வழக்காசாரம், ஒழுக்காசாரம் முதலியன மிகப் பாதுகாப்பாகவே அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. முன்னர் நீண்டகாலம் வரைக்கும் இந்த பால்கன் நாடு முழுதும் துருக்கியர்களுடைய ஆளுகையின் கீழிருந்து வந்தது. இன்றைக்கு 50-வருடங்கட்கு முன்னர் அப்பாகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் துருக்கியரின் கொடியே பறந்து கொண்டிருந்தது.

பால்கனின் ஒவ்வோரிடங்களிலும் சிறிய பெரிய மஸ்ஜிதுகள் அநேகம் காணப்படுகின்றன. இவற்றின் உயரமான மினார்கள் மீது முஅத்தின்கள் நின்று அனுதினமும் இஸ்லாமிய வழக்கப்படி பாங்கு சொல்லி ஜனங்களை தொழுகைக்கு அழைக்கின்றனர். பால்கன் பிரதேசத்தில் முஸ்லிம் மகாஜனங்கள் முன்னைவிட தற்போது மிகக் குறைவாயிருப்பினும், அன்னோர் தம் இஸ்லாமிய வழக்காசாரங்களை நிலைநிறுத்துவதில் மிக ஸ்திரமானவர்களாய் இருக்கின்றனர். இன்னோர் குர்ஆனின் போதனைகளை சரிவர பின்பற்றி நடக்கின்றனர். தொழுகை, நோன்பு முதலிய சத்கருமங்களையும் சிரத்தையுடன் நிறைவேற்றி வருகின்றனர். மக்கா ஷரீபுக்குச் சென்றுவர சக்தியும் சாதனமு முள்ளோர் அவசியம் ஆங்குச் சென்று ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றி வருகின்றனர்.

பால்கன் பிரதேசத்தில் இஸ்லாத்திற்கு மிகப் பெரிய மத்தியஸ்தலமாயிருப்பது 'யுகோஸ்லாவியா' என்பதாகும். விசேஷமாய் போஸ்னா, ஹர்ஸங்க் ஆகியவற்றின் ஆட்சிகுட்பட்ட பகுதிகளில் ஸாராஜியோ, மோஸ்தார் முதலிய இடங்கள் முஸ்லிம்கள் பெருமிதமாய் வசிக்கும் வனப்புடைய ஸ்தலங்களாகும்.

இஃதல்லாமல், ஸரப், ஜப்லெ அஸ்வத் ஆகிய இடங்களிலும் முஸ்லிம்கள் ஏராளமாய் இருந்து வதிகின்றனர். அவர்களின் ஜனத் தொகையின் எண்ணிக்கை ஒரு கோடியே இரண்டு லக்ஷமாகும். அதாவது, அத்தேசத்து மொத்த ஜனத்தொகையில் பத்தில் ஒரு பாகத்தினர் முஸ்லிம்களாவர்.

பல்கானிய துருக்கிகள் நகர்களில் வசித்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் கற்றறிந்தவர்களாகவே வுள்ளனர். அன்னோர் இதுகாறும் கீழ்நாட்டுக் கல்விகளை பாது காத்து வந்துள்ளனர். இவர்களது பாஷை துருக்கி, பார்ஸி, அரபி ஆகியவைகளாம்.

பல்கேரியா, ரோமேனியா, கிரீஸ்.

பல்கேரியாவில் 30-இலக்ஷம் முஸ்லிம்களிருக்கின்றனர். இவர்களில் சிலர் ஆதித் துருக்கியர்களாயுள்ளனர். மற்றுஞ் சிலர் ஆதிஸலாவியர்களாயுள்ளனர். இம் முஸ்லிம்களுக்குரிய மத்தியஸ்தலம் ரயீஷீ, பிப்லெயிஸ் போபில் ஆகிய பகுதிகளும், அதைச் சூழ்ந்த இலாக்காகளுமாகும்.

ரோமானியாவிலுள்ள முஸ்லிம்களின் தொகை ஓரிலக்ஷமாகும். இன்னோரில் ஒரு பெருந் தொகையினர் கோன்ஸ் தாதா என்னுமிடத்தில் வதிகின்றனர்.

யூனான் — கிரேக்கிலிருந்து அநேகமாய் முஸ்லிம்கள் வெளியேறிச் சென்றுவிட்டார்கள். துருக்கியர்க்கும் கிரேக்கருக்கும் உடன்படிக்கை ஏற்பட்டு இருவகுப்பினரின் பரிவர்த்தனை ஏற்பட்ட காலந்தொட்டு இங்கு முஸ்லிம்கள் அதிகம் கிடையாது.

யுகோஸ்லாவியாவில் முஸ்லிம்கள் நிர்வாகம்

யுகோஸ்லாவியா முஸ்லிம்கட்கு விசேஷமான நிர்வாகமிருக்கின்றது. முஸ்லிம்கள் தம் மார்க்கக் கடமைகளை அனுஷ்டிப்பதில் அனுகூல மளிக்கப்பட்டுள்ளனர். முஸ்லிம்களின் மதத்தலைவருக்கு "ரயீஸுல் உலமா" என்னும் சிறப்புப் பதவியுமளிக்கப்படுகிறது. இந்த இஸ்லாமிய நிர்வாகத்தின் மத்தியஸ்தலம் ஸராஜியோ என்பதாகும். இஸ்லாமிய மத்ரஸாக்கள், மஸ்ஜிதுகள், வக்பு சொத்துக்கள் முதலியவற்றை "ரயீஸுல் உலமா" வே நிர்வகித்து பரிபாலித்து வருபவராவர். சர்க்காரின் நீதிஸ்தலங்களுடன் இஸ்லாமிய நீதிஸ்தல இலாக்காவு மிருக்கின்றது. முஸ்லிம்களுடைய தனிப்பட்ட விவகாரங்கள், நிகாஹ், தலாக், ஹிபா, பிதுரார்ஜித பாத்தியதை முதலிய மார்க்க விஷயங்கள் இங்கு கவனித்து முடிவு செய்யப்படும். 'ரயீஸுல் உலமா' அவர்கள் இந்த சர்க்கார் இலாக்காவிலும் தலைமைப் பதவியுடையவராவர். ரயீஸுல் உலமாவே காஜீகளை நியமித்து அவர்களது பெயர்களை சர்க்கார் இலாக்காவில் பதிவு செய்து வைக்கின்றார்.

யுகோஸ்லாவியா முஸ்லிம்களுக்குள் ராஜீய சம்பந்தமான ஒரு கட்சியினரும் இருந்தனர். இக்கூட்டத்தின் பெயர் "ஹிஸ்பெ இஸ்லாமீ-ஜுனூபே யுகோஸலாவியா" என்பதாகும். நாட்டின்மீது இந்தககூஷியாருக்கு போதிய செல்வாக்கிருந்தது. இதன் அங்கத்தினர்களில் சுமார் 20-பேர்கள் பல்கேரிய ராஜாங்க சபையில் ஸ்தானம் பெற்றுக் கொண்டார்கள். இன்னோரில் இரண்டொருவர் யுகோஸ்லாவியாவின் மந்திரிச் சபையிலும் மந்திரி ஸ்தானம் பெற்றிருந்தார்கள். இச் சமாச்சாரம் முதல் இஸ்கந்தர் அரசருடைய ஆட்சிக்கு முன்னிருந்த நிலையாகும்.

அவர்களின் குண ஒழுக்கம்.

அங்நாட்டு முஸ்லிம்கள் கீழ்நாட்டு இஸ்லாமிய வழக்கங்களை அனுஷ்டிப்பதில், கீழ்நாட்டாரைவிட மிக்க தீவிரமானவர்களாய் காணப்படுகின்றனர். உதாரணமாய், ஒரு முறை முஸ்லி மொருவர் ஸராஜியூத் ஆஸ்பத்திரியில் இறந்துவிட்டார், அரசாங்கத்தினர் அந்தமுஸ்லிம் பிரேதத்தைமோட்டாரில் ஏற்றி கபரிஸ்தானுக்கு கொண்டுபோகத் தொடங்கினர். இதை அறிந்த முஸ்லிம்கள் ஒரு முகப்பட்டு பெருங்கிளர்ச்சிச் செய்தார்கள். பிரேதத்தை தோள்மீது தான் தூக்கிச் செல்லவேண்டுமென்றும், இது தான் உலக் முஸ்லிம்களுடைய பரம்பரையான வழக்கமென்றும் வற்புறுத்திக் கூறினர்கள். (இதில் காரிய சித்திப்பெற்றூர்கள்.)

பெண்களின் நிலை.

அங்குள்ள முஸ்லிம் பெண்களின் நிலைமையும் மிகவும் நல்லவிதமாய்த்தானிருக்கின்றது. முஸ்லிம் சிறுமிகள் கல்வி கற்றுவருகின்றூர்

கள். படித்து பெரிய வகுப்புகளிலும் தேர்ச்சி யடைகின்றனர்கள்.

வராஸத்—அனந்தர பாத்தியதைகள் இங்கு குர் ஆன்ஷரீபின் கட்டளைப்படியே தீர்மானிக்கப்படுகின்றது. அதாவது, ஆண்பிள்ளை ஒரு முழுபாகமும், இருபெண்பிள்ளைகள் சேர்ந்து ஒரு முழுபாகமும் பெறுவது. வஸிய்யத்செய்பவர் ஷரீஅத்தில் கூறப்பட்ட வாரிஸ்களைத் தவிர்த்து இதரர்கட்கு அளிப்பதாயின் மூன்றில் ஒரு பாகத்திற்குமேல் அளிக்க இங்கு இடம்பாடில்லை.

முஸ்லிம் சிறுவர்கட்கு ஒராண்டிலிருந்து மூன்றாவது ஆண்டுக்குள் கத்னா (விருத்த சேதனம்) செய்விக்கப்பட்டு விடுகின்றது. பால்கன் முஸ்லிம்கள் பெருநாட்கள், இதரச்சுபகாரியங்கள், துக்கங்கள் முதலியன கொண்டாடுவதிலும், நோன்பு நோர்ப்பதிலும், நம்கீழ்நாட்டு முஸ்லிக்களை காட்டினும் அதிகப்பற்றுடனும் விசுவாசத்துடனும் இஸ்லாமிய வழக்காசாரங்களை அனுஷ்டித்து வருகின்றனர் என்று சுருக்கமாய் கூறிவிடலாம்.

பல்கிராத் முஸ்லிம்கள்.

பல்கேரிய முஸ்லிம்கட்டு அவ்வரசாங்கின் சார்பாக மதஸ்வதந்திரம் பூர்ணமாக அளிக்கப்பட்டிருக்கின்றது. சர்க்கார் சட்டப்படி, ஒரு தாரத்துக்கு மேல் அதிக மனைவிகளை மணந்துகொள்ள உரிமைகிடையாது. ஆனால் முஸ்லிம்கட்கு மட்டும் அந்த உரிமை அளிக்கப்பட்டிருக்கின்றது.

மஸ்ஜித்களின் இமாம்கள், முஅத்தின்கள், இதர வேலைக்காரர்கள் ஆகியோர்க்கு சம்பளங்களும், விரிப்பு மராமத்து முதலியவற்றிற்குரிய செலவுகளும் அரசாங்க பொக்கிஷத்தினின்றே அளிக்கப்பட்டு வருகின்றன. இத்துணை சவுகரியங்களிலிருந்தும் அவ்விடத்திய முஸ்லிகளிடையே சன்மார்க்க அனுஷ்டானத்தன்மை மிகவும் குறைவாகவே இருந்து வந்தது. எனினும் தற்போது 'தங்களிள் மத அனுஷ்டானத் தன்மை இல்லை' என்ற உணர்ச்சியும், இதன்காரணத்தால் அன்னிய மதஸ்தரின் மாயவலையில் வீழ்கின்றனர் என்ற உணர்ச்சியும் ஏற்பட்டிருக்கின்றன.

இத்தேசமுஸ்லிம்களுடைய வழக்கு விவகாரங்களுக்குத் தீர்ப்புக் கூறுவதற்காக 'முப்தீ' (மார்க்க தீர்ப்பாளர்) ஏற்படுத்தப்பட்டுள்ளனர். இன்னோர் சன்மார்க்க ஷரீஅத்தின் வழிப்படியே தீர்ப்புகள் செய்வர். அங்குள்ள முஸ்லிம்களில் சிலர், 'பூட்ஸ் சுத்தப்படுத்தல்' போன்ற தாழ்மையான தொழில் செய்து பிழைக்கின்றனர் என்பது உண்மையே. எனினும் இத்தொழில் புரிவதில் இழிவு இருப்பதாக அவர்கள் கருதுவதில்லை. எனவே இந்நற்குணத்தால் அம் முஸ்லிம்கள் என்றேனும் ஒருநாள் முன்னேற்றமடைகின்றனர்.

இஸ்லாமிய சங்கத்தின் அவசியம்.

இமாம் அஸ்கரீ அப்துஸ்ஸலாம் என்பவருடன் எனது (நிருபர்) சந்திப்பு ஏற்பட்டது. யான் கடைவீதியில் போய்க்கொண்டிருக்கும் போது அவர் என்பால் வந்து அன்பாக 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்றார். இந்த இஸ்லாமிய 'முகமன்' கூறும் வழக்கமானது எங்களிருவரையும் ஒன்றுசேர்த்துவிட்டது. பின்னர் இருவரும் ஹோட்டலில் உட்கார்ந்து, வெகு நேரம்வரை இஸ்லாமிய சம்பந்தமான பற்பல விஷயங்களைப்பற்றி சம்பாஷணைகள் புரிந்தோம். அந்த நாட்டுவிஷயமான நிலைமைகளை பேசியதில், அங்கு இஸ்லாமிய சங்கங்கள் அத்தியாவசியமாய் தேவைப்படுகிறதென்ற விஷயம் முடிவாயிற்று. ஏனெனின் அங்குள்ள முஸ்லிம்களின் நிலைமைகளை கவனிக்குமிடத்து, இஸ்லாமிய மத்திய சபை ஏற்படுத்தல், இதன் சார்பாக முஸ்லிம்கட்கு கல்வி மதசவுகரியம் பொருளாதாரவசதி முதலியனவெல்லாம் செய்து தரல், முதலிய ஏற்பாடுகளுக்காக திட்டம், தயாரித்து அதை அனுஷ்டானத்தில் கொண்டுவரவேண்டுமென்பதை விளக்கமாய் எடுத்துக்கூறினேன். அவரும் எனது அபிப்பிராயத்தை ஆமோதித்தார்..........."

ஒரு விநோதசம்பவம்.

உயர்தர கல்விபயின்ற இளவாலிபரான டாக்டர் பாரிக் நருச் என்பவரை போய் சந்தித்தேன். இவரது வாசஸ்தலம் பல்கேரிய நகரத்துக்கு வெளிப்பகுதியில் ஏற்பட்டிருக்கிறது. இவரும் என்னை மிக அன்பு விசுவாசத்துடன் வரவேற்றார். ஆனால் அவரது மனைவியாருடன் "கைகுலுக்க" யான் விரும்பாமல் நிராகரித்து விட்டேன். அவரது மனைவி ஐரோப்பிய வழக்காசாரத்தை

அனுஷ்டிக்கும் மாதாவள். அந்தப்பெண்ணுடன் யான் கைகுலுக்க மறுத்து விட்டது அப்பெண்ணுக்கும் அவளது கணவர் டாக்டருக்கும் யான் அவர்களது கண்ணியத்துக்கு பங்கம் விளைவித்துவிட்டதுபோல் காணப்பட்டது. அந்த டாக்டர்கூட ஐரோப்பியத் தோற்றத்திலேயே காணப்பட்டார்.

பிறகு யான் அவர்களுடன் சம்பாஷித்தேன். முதலில் இஸ்லாமிய நல்லாசாரம், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது நற்குண நல்லொழுக்கம், (உஸ்வயெஹஸனு) அழகிய முன்மாதி, ஆகியவற்றின் இனிய தத்துவங்களை எடுத்து போதித்தேன். இப்போதனை அவர்களுள்ளத்தில் நன்கு பதிந்ததுபோலும்! கோபக் கோலமாயிருந்த அவர்கள் முகம் சந்தோஷத்தால் மலர்ந்துவிட்டது. அவர் என்னை நோக்கி "லண்டனிலுள்ள இஸ்லாமியப் பிரசாரகர்கள் எவரும் இவ்விதம் போதிக்கவில்லையே. அவர்களும் வழக்கமாய் கை குலுக்குவார்களே" என்று கூறினர். அதற்கு நான் "எந்த ஒருவருடைய சொல்லையோ, செயலையோ நாம் பின்பற்றி நடக்கவேண்டியதில்லை. நமது ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்களின் "உஸ்வயெஹஸனு" வென்னும் 'அழகிய முன்மாதிரியே' நமக்கு சர்வ பாக்கியத்தையும் தரக்கூடியதாகும்" என உரைத்தேன். இதனல் அவர்கள் இன்னும் அதிக மலர்வதனம் பூண்டு, அன்புடன் என்னோடு பேசி நன்றி செலுத்தினர்கள். இந்நல்லுரைக்காக அவரது நாகரிக மனைவியாரும் என்னை நோக்கி "ஆம்! நாம் இஸ்லாமிய நல்லாசாரத்தை வாழ்விக்கச் செய்வதுதான் நமதுகடமை" என்று கூறி நன்றியும் செலுத்தினர்.

அதன்பிறகு யான் அவர்கட்கு இஸ்லாமிய ஒற்றுமையின் அவசியம், ஒவ்வொரு முஸ்லிமும் புரியவேண்டிய சமுதாயக் கடமை ஆகியவற்றைப்பற்றி எடுத்துக் கூறினேன். 'இஸ்லாமிய சங்கம் அவசியம் ஏற்படுத்த அடிப்படை போடவேண்டும். சமூக நல வேலைகளில் வெறுப்புக் கொள்வது தகாது. சமூக நலத்தொண்டின் அவசியத்தைப்பற்றிய விஷய ஞானமும், அத்தொண்டாற்றுவதற்குரிய சக்தியுடையவர்கள் வாளா யிருந்து விட்டால் அவர்கள் ஆண்டவனிடத்தில் பதில் சொல்லித் தீரவேண்டும்" என்றும் எடுத்தோதினேன். இவற்றையெல்லாம் அவர் ஒப்புக்கொண்டா ரெனினும், யான் தனிமையாயிருந்து என்ன செய்ய முடியும்? என்றூர். யான் அதற்கு தக்க சமாதானங்களைக்கூறி அவர்களுக்கு ஊக்கமூட்டினேன். எனவே டாக்டர் அவர்கள், இனி சமுதாயத் தொண்டு புரிவதற்காக தம்மாலானமட்டும் முயற்சிப்பதாக வாக்களித்தார்.

சீன முஸ்லிம்கள்.

சீனதேசத்துள்ள முஸ்லிம்களைப் பற்றி அறிஞர் சாஸ்திரி எழுதுவதாவது:—சீனக் குடியாகூஷியிலுள்ள முஸ்லிம்களின் சரியான கணக்கு எவருக்கும் தெரியாமலேதானிருந்துவருகின்றது. ஆனல் அந்நாட்டின் பொதுவான ஜனத்தொகை சுமார் ஒரு கோடியாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. ஜான்ஸோ, ஸிகிஞைகு, ஷேன்ஸீ முதலிய மாகாணங்களில் அபரிமிதமாய் வசிப்பவர்கள் முஸ்லிம்களே யாவர். தவிர ஷேங்டங், கியாங்கோ, சிலீ, காவ்னஸட்டங், சிக்கியாங் ஆகிய மாகாணங்களிலும் முஸ்லிம்கள் விசேஷமாய் வாழ்ந்து வருகின்றனர்.

சீனத்தில் பொதுப்படையாக முஸ்லிம்கள் உழைப்பாளிகளென்றும், நம்பிக்கையாளர்களென்றும், சட்டத்துக்கு கட்டுப்பட்டவர்களென்றும், உண்மைப்பேசுபவர்களென்றும் கருதப்பட்டு வருகின்றூர்கள். எனினும், உலகமெல்லாமுள்ள முஸ்லிம்கள் இவ்வாறே பொதுப்படையான நற்குணங்களுடையவர்களென்பது எனது அபிப்பிராயம். சீன முஸ்லிம்கள், அநேகமாய் விவசாயிகளாயிருக்கின்றனர். ஒரு சாரார் கைத்தொழிலிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

யுத்தமுறையில் பார்க்குங்கால், சீன முஸ்லிம்கள் சிறந்த சிப்பாய்களாகவும், யுத்தப் பயிற்சிகளில் தேர்ந்தவர்களாகவும் இருந்து வருகின்றனர்.

ஷாங்கி, பீக்கன், கன்ட்டன் ஆகியவிடங்களில் முஸ்லிம்கள் ஜும்ஆ தொழுவதற்காக கூட்டங் கூட்டமாகசெல்வதை யான்கண்டேன். இங்கு சில மஸ்ஜிதுகள் நிர்மாணரீதியிலும், விசாலத்திலும் மிக வனப்புடையதாகவும், மேன்மையானதாகவும் இருக்கின்றன. சீன முஸ்லிம்கள் தொழுதுக்கொள்வதை காண்பது மனச் சந்தோஷத்தை யளிப்பதாயும், மனோகரமானதாயு மிருக்கின்றது.

அவர்கள் முஸ்லிமல்லாதாருடன் மிகவும் நேர்மையான முறையில் கண்ணியமாய் நடந்துகொள்ளுகின்றரென்பது எனது அனுபவம். அவர்கள் விசேஷமாக சகிப்புத்தன்மையும், பரஸ்பர நோக்கமு முடையவர்களாயிருக்கின்றனர். நபிகள் நாயகம் இஸ்லாமியத்திருத்தூதர் (ஸல்.) அவர்கள் பூர்த்தியான முறையில் நற்குண நல்லொழுக்கம் சகிப்புத்தன்மை பரஸ்பரநேசம் முதலியவையுடையவர்களாயிருந்தனர். எனவே, அப்படிப்பட்ட மகானைப் பின்பற்றி நடக்கும் சீன முஸ்லிம்கள் சகிப்புத்தன்மை, தாராள நோக்கம் முதலிய குண ஒழுக்கங்களில் சிறந்திருப்பது ஆச்சரியப்படத்தக்க தன்று.

வியாபாரமும் தோழிலும்.

சீனதேசத்துத் தேயிலைவர்த்தகத்தில் ஒரு பகுதி சீன முஸ்லிம்களுடைய ஆதிக்கத்திலிருந்துவருகின்றது. சீனப் பட்டு உற்பத்தித் தொழிலும் பிரபலமடைந்த பல முஸ்லிம்களுடைய ஆதீனத்தில் தானிருந்து வருகின்றது. சீனப்பாத்திர வர்த்தகஞ் செய்யும் முஸ்லிம்கள் பல்லோரை யான் 'நாங்க் சங்க்நோ' என்னுமிடத்தில் கண்டுள்ளேன்.

சீனவர்த்தகத்துக்கு "ஷாங்க்ஹாய்" என்னும் நகர் மத்தியஸ்தலமாகும். இவ்விடத்தில் ஏராளமான முஸ்லிம்கள் வர்த்தகத் துறையில் ஏற்றுமதி - இறக்குமதி அபரிமிதமாய் புரிந்து வருகின்றார்கள். இங்கு பட்டுகள், நூல்துணிகள் ஏராளமாக தயார்செய்யப்படுகின்றன. இச்சரக்குகள் பிரிட்டானியா, ஜப்பான் முதலிய நாடுகளில் விற்பனையாகின்றன. யான் இஸ்லாத்தையும், இஸ்லாத்தின் நபியையும் கண்ணியப்படுத்துவதில் ஒரு சாதாரண ஊழியனாகயிருப்பினும், சதா காலமும் யான் சீன முஸ்லிம்களின் அனுகூலத்தில் அதிக விருப்பமே கொண்டிருந்து வருகின்றேன்.

(தொடரும்.)

சிங்கை முஸ்லிம் வியாபாரிகள் கவனிப்பார்களா?

("இரு நற்பாக்கியங்களையுமிழந்த துற்பாக்கியர்"

(ஜே. யம். ஏ. மரைக்காயர் எழுதுவது)

சோதரீர்!

இஸ்லாம் மார்க்கமானது ஓர் புதிய மதமல்ல வென்றும், அஃது தொன்று தொட்டுள்ள உலகோற்பத்தியின் முதலே சர்வ தயாபரனால் நிறுவப்பட்டதென்றும், இடைக்கிடை தோன்றும் அனுச்சார அந்தகாரமென்னும் மேகப்படலத்துள் அவ்விஸ்லாம் என்னும் ஞான சூரியன் மறைக்கப்படும் பொழுது, தெய்வத்திருத்தூதர்களென்னும் இருட்பிளந்தொதுக்கும் சண்ட மாருதங்கள் கிளம்பி, அஞ்ஞான விருளகற்றி இஸ்லாமென்னும் மெஞ்ஞான சூரியனை காலங்கடோறும் பிரகாசிக்கச் செய்து, அந்த மேகப்படலமானது இனி இச்சூரியனை கிட்டமுடியாத விதமாய் ஏகவொளிமயமாய், உலக சூரியனைப் பிரகாசிக்க வேண்டி அரேபியாவின் பாலைவனத்தின்கண் ஆயிரத்து முந்நூற்றுச் சில்வான வருடங்களுக்கு முன், உலகரக்ஷகரை, சற்குண வடிவை, கருணையங்கடலை, மோட்சகரைசேர்க்கும் மெய்வாசகரை, முஸ்தபா அஹ்மது முர்தலா முஹம்மது நபீ(ஸல்) திலகமவர்களைக் கடைசிதீர்க்கதரிசியாய் தோன்றச்செய்து உலகமாந்தர்களுக்கு(இஸ்லாம்) சாந்தி, சமத்துவ, ஏகதெய்வ வழிப்பாட்டின் மார்க்கத்தை புத்துயிர்ப்பித்து இன்றியமையாச் சாதனமாய் வேண்டுமட்டும் அள்ளிப் பருகச்செய்து, ஜகஜ்ஜோதி என ஒளிபரப்பி மாயக்கண்ணுக்கு மறைந்தும், ஞானக்கண்ணுக்கு திறந்தும் நிற்ப, இஸ்லாம் மத விரோதிகளும் அம்மம்ம! அத்தீர்க்க தரிசனமே தரிசனம்! அவர்கள் காட்டிய சத்வழியே மெய்வழி! அவர்களின் தயாள குணமே குணம்! அவரினின்று வெளிப்பட்ட தெய்வீகசக்தியே சக்தி! என இது காறும் இனியென்றும் மனதராது துதிக்கப்பெறும்

அந்நபிகள் திலகத்தின் அடிச்சுவட்டை பின்பற்றினோர்களின் மகத்துவமே மகத்துவம்!

(பனீ இஸ்ராயீல்) இஸ்ரவேல் கோத்திர நபிமார்களே இம்மகத்தான நபிகள் சிரோன் மணியின் உம்மத்தில் ஒருவராயிருக்க பன் முறை விரும்பினார்களென்றால் நமது கீர்த்தி என்ன கீர்த்தி!

இதனாலன்றோ திருமறைத் திருமொழியில் ("குன்தும் கைர உம்மத்தின்" என்ற வேத வாக்கியத்தில்) 'மனிதர்களில் நீங்கள் நல வான கூட்டத்தினர்' என்று இறைவன் பகர்ந்துள்ளான். ஆகவே, நபிகள் நாதரவர் களுக்களிக்கப்பெற்ற கண்ணியத்தால் அவர் களைப் பின்பற்றினோராகிய—நம்மை ஆண்ட வன் தன் கருணைவாக்கால் புகழ்கின்றான்.—தெய்வகடாக்ஷ வாழ்த்து நமக்கு உண்டா யிருக்குமேயானால் நாம் இகபரங்களில்ஈடேற் றமடைய என்ன தடையுண்டு? நாம் ஈடேற்ற மடைந்தோமா? அல்லது அடைவோமா? என்று கவனிக்கப்புகின் பரிதாபம்! பரி தாபம்!! ஓர் ஆர்ப்பேனும் ஈடேற்றமடைந் தோமல்லேம். இதற்கு காரணந்தானென்னை? என ஆழ்ந்து சிந்திப்போமாயின், அத்தெய்வ வாழ்த்துக்கும் நமக்கும் வெகு தூரமிருப்ப தையும் அப்பரம ஆசிகூறலுக்கு நாம் இலக் கியமாயிருக்க தவறிவிட்டோமென்பதையும் நன்குணர்வோம். அதனால் நாம் தலை குனிந்து வெட்கமடைய வேண்டியதாயிருக்கின்றது.

பேருக்கு மட்டில் முஸ்லிம்கள் என்றிருப் பதால் யாதுபிரயோஜனம்? இஸ்லாம் என்ற வார்த்தையின் தன்மையில் ஒரேயொரு அட் சரத்துக்குரிய பண்பில் குறைவு வருமாயின் இஸ்லாமென்னும் ஐந்து அட்சரம் கொண்ட வார்த்தையின் தொனி விகற்பமடைவது போல, இஸ்லாமும் விகற்பமடையுமென்பது ஆன்றோர் துணிபு. (இதை விரித்துரை செய் யின் பெருகும்.)

இது நிற்க, மாற்றப்பட்ட முன் வேதக்கார ரென அழைக்கப்பெறும் யூத கிருஸ்துவநண் பர்களின் ஆசாரத்தின் போக்கை கவனிக் கின்ற பேர்கள் அவரவரின் ஐதீகப்படி ஒவ் வொருநாளை ஒய்வு தினமென்பதாக குறிப் பிட்டு, தங்கள்தொழிலாதி வியாபாரஸ்தலங் களை நிறுத்தி அன்று கோயிலுக்கேகி பிரார்த் தனைப் புரியவேண்டுமென்று சொல்வதைக் காணலாம். (இதனால் அவ்வாறு பிரார்த்தனை புரிவது மேலென கூறுவதாக கருதிவிடலா காது)

தன்னுயிரினும் பெரிதெனக் கருதும் வேத முடையவராகிய முஸ்லிம்களோவெனின், தங் ளின் மகத்துவமுடைய வேதக்கட்டளையை யும், அவ்வேதத்தை அறிவித்துக் கொடுத்த நாயகமவர்களிட்ட ஆக்ஞையையும் கை நழுவவிட்டு தங்களது முற்போக்கை தாழ்த் திக்கொண்டுள்ளார்கள் என்று சொல்லும் பொழுது யாருடைய கண்களில் நின்றுந் தான் நீர்வடியாதிருக்க முடியும்?

"ஒ ஈமான் கொண்டவர்களே! உங்களை ஜும்ஆ உடைய நாளையில் தொழுகையளவில் கூப்பிடப்பட்டால், அல்லா(ஹ்) உடைய திக்ரு அளவில் நீங்கள் விரைந்து செல்லுங்கள். விற்பனை, கொள்வினையை விட்டு விடுங்கள். அப்படி விட்டுவிடுவது உங்களுக்கு மிகுந்த நன்மையாயிருக்கும். அஃது மேலானதென்று நீங்களறிந்தவர்களாயிருந்தால். (மேற்சொல் லியபடி) அதை செய்யுங்கள்." தொழுகை நிறைவேற்றப்பட்டால் நீங்கள் பூமியில் (காரி யத்தளவில்) பரந்து சென்று அல்லா(ஹ்) உடைய வருஷையில் நின்றும் (ரிஜ்கை) இரணத்தை தேடுங்கள். அல்லா(ஹ்) வாகிற வன் (ரிஜ்கு) இரணம் கொடுக்கிறவர்களி லெல்லாம் (கைறுன) மேலானவனாயிருக்கும்" என வேதம் அறைகிறது.

அந்த வேதத்தையும் அவ்வேத கர்த்தாவா கிய ஏக நாயனையும், அவனின் திருத்தூதரை யும், சத்தியசீலர் என்று ஒப்புக்கொண்ட மகளிற் சிலரோ! ஏதோ! சில நாழிகைக் குள் வாரி, வாரி, குவித்து விடுதல்போல் தன் தொப்பை வயிறு நிறப்பும் இம்சையி லேயே யுழன்று தன்னையும் தன் தலைவனை யும் மறந்து விடுகிறார்கள். ஒரு சில முஸ் லிம் (குத்பா தொழுகைக்கென்று) மஸ்ஜிது க்கு சென்றாலும் அவர்களது மனதும் தெய் வபக்தி ததும்பியதாயிருக்கக் காணவில்லை. அவர்கள் (தக்பீறுகட்டும்) தெய்வ தியானத் தின் பொழுது கடையிலுள்ளவர்கள் வியாபா ரத்தை செவ்வையாய் நடத்தி கல்லா பெட்டி யைச் சரியாய் நிறப்புவார்களா? இல்லையா? என்ற வியாகூலம் குறுக்கே விழுந்து தெய்வ தியானமும் கெட்டு உலக வருமானமுங் கெட்டு (இகபர சுகங்கள்) இரண்டுங்கெட்ட இருநற்பாக்கியங்களையுமிழந்த துற்பாக்கிய

ராய் விடுகிறுர்களென்பதில் எள்ளத்தனை தடையுமிராதென்றே விவேகிகள் உணர்வார்கள்.

ஊருக்கு முன்னெழுந்து கடை திறந்து ஊரடங்கி சந்தடியொழிந்தபின் கடைகட்டி நல்லநாள் பெருநாள் ஓய்வில்லாமல் தேடி இவர்கள் எந்த திரண்ட ஆஸ்திபூஸ்திகளை திரட்டி விட்டனரென்று பார்க்கும்பொழுது அவர்களின் மனமே இதற்கு நற்சாக்ஷியளிக்குமென விடுப்பாம்.

இதற்கெல்லாம் காரணம்(தவக்கல்)தெய்வ பரஞ் சாட்டலுடன் (இக்தியாறு) மானிட முயற்சியை சம்மந்தப்படுத்தி திரவியந்தேட முற்படாமற் மேலெண்ணமும் அதிக ஆவலாசையும் கொண்டுழல்வதால் "அறக்கபறக்கத் தேடியும் படுக்கபாயில்லாமல் போகிறது" என்னும் ஒரு முதுமொழிக்கு சான்ருகிறது.

இவ்வித முயற்சி பலனின்மைக்கு முஸ்லிம்களிடம்பிரதானமாயுள்ள ஐக்கியதிட்டத்தை எடுத்துக் கையாளாமற்போன தற்கால துரதிஷ்டமே காரணம்.

கூட்டுறவு ஐக்கிய சங்கங்களை முஸ்லிம்கள் சரியாய் நிறுவி அதற்கேற்ற நிருவாகிகளை ஏற்படுத்தாமல் வாளாவிருந்த தவறே இவர்களின் வீழ்ச்சிக்கும் பிற்போக்கிற்கும் காரணமென சொல்லினும் பொருந்தும்.

சிங்கை முஸ்லிம் வியாபாரிகள் இனியேனும் கவனித்து தங்கள் கடமைகளைச்செய்ய முன்வருவார்களா? தென் இந்திய முஸ்லிம் ஐக்கிய சபையை சரியான அஸ்திவாரத்தில் கட்டி முடித்து கடுங்கோடைக்கும் கொடுங் குளிருக்குமகப்பட்டு துன்புறுமல் தற்காத்துக்கொண்டு தன்னலம்பாரா பொதுநல ஊழியராய் திகழ்ந்து கண்ணிய முறுவார்களா?

மற்ற இதரநாடுகளில் முஸ்லிம்கள் அனுஷ்டிக்கும் முறைப்படி வெள்ளிக்கிழமையன்று குத்பாமுடியும் வரையிலாவது கடைகளை மூடிவியாபாரம் தொழில்களை ஆரம்பிக்காமல் இருப்பார்களா? அல்லது இதை பழங்கதை யென மதித்து கண்டதே காட்சி கொண்டதே கோலமென இன்னும் கெடுவேன் பந்தயம் போடென்பார்களா? புத்திசாலிகளுக்கு சமிக்கை போதுமானபடியால் இவ் வியாசம் நமது முஸ்லிம் சகோதரர்களின் மறதியைப்போக்கி ஞாபகமூட்டி உற்சாகமளித்து உழைப்பின் நற்பயனடையும்படி செய்ய எல்லாம் வல்ல இறைவன்பால் பிரார்த்திப்போமாக. வஸ்ஸலாம்.

சமத்துவ சுதந்தர போதகர்!

நபிகள் திலகம் (ஸல்.) அவர்களைப்பற்றி ஓர் ஆங்கிலேயரின் புகழுரை.

திரு. டேட் என்னும் ஆங்கிலேய அறிஞர் நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்களை நன்கு புகழ்ந்து எழுதிய அரிய வியாசத்தை "அல்ஹுதா" பத்திரிகை பின்வருமாறு வெளியிட்டிருக்கிறது:—

"கீழ்நாட்டு மேனுட்டு முஸ்லிம்களெல்லோரும் தங்கள் சற்குரு நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்.) அவர்களது புனித ஜனன தினத்தன்று ஒவ்வோரிடங்களிலும்சபைகள் கூடி சந்தோஷ விழா கொண்டாடினர்கள். 'இவ்வுலகத்தின்கண் முதன் முதலாய் சுயேச்சை—சமத்துவம் இவற்றை போதித்தவர் மாண்பும் மேன்மையும் மிக்க நபிபெருமானர் ரஸூல் (ஸல்.) அவர்களேயாவர். சிறப்பாக உலகத்தாருக்கு ஏகநாயனும், சாஸ்வதமானவனுமான ஆண்டவனுடைய வணக்கத்திற்காக ஜனங்களை அழைத்து, வழிகேடு - துன்மார்க்கம் ஆகிய ஆழங் காணுத அந்தகாரக் குழியினின்று மக்களை வெளியேற்றி, அவர்களை நாகரிக முன்னேற்றத்தின் உச்சஸ்தானத்துக்கு உயர்த்தியவர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களேயாவர். நபிகள் நாயகம் (ஸல்.) புகட்டிய போதனையானது உலகமக்களுக்கு இகபர மிரண்டிற்குமுரிய ஜயத்தையும் அனுகூலத்தையும் அருளக்கூடிய அரும்பெரும் ஆன்மார்த்தசாதனமாயிருக்கின்றது.

இஸ்லாத்தின் மேன்மை

தூய்மையான இறைவன் நம்மவர்களின் சன்மார்க்கத்துக்காகவும், நேர்வழி விளக்கத்துக்காகவுமென்று "சுத்த சத்திய மத"த்தை அருள்புரிந்தான். சிற்சில கஷ்ட சங்கடங்களினூடே உலகத்திலுண்டாய இதர மார்க்கங்களைப் பார்க்கினும் இதை மேலோங்கச் செய்தான். ஆதலின் இந்த சத்திய சன்மார்க்கம் உலகத்தின் சர்வமதங்களைக் காட்டினும் மிகமிக உயர்வானதாய் விளங்குகின்றது. பகைவர்களாயினும், நேசர்களாயினும் இச் சன்மார்க்கத்தின் சத்தியங்களை ஒப்புக்கொண்டு புகழ்வதனுல் இதன் சத்தியம் மேன்மேலும் ஓங்கி விளங்குகின்றது.

உலக சரித்திரமே மிகமிகப் போற்றிப் புகழும் நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்.) அவர்களைப் போன்று உலகில் வேறெந்த நபியும் விஜயஞ்செய்தது கிடையாதென்பது திண்ணம். சற்குண நற் சுபாவத்தில் மிகவும் க்ஷீணதிசை யடைந்திருந்த ஒரு சமூகத்தில் பிறந்து, ஒரு சொற்ப காலத்துக்குள் தங்களது அழகிய சற்குணத்தாலும், உத்தம ஒழுக்கத்தாலும், அரும் பெரும் போதனையாலும், உலக முழுதையுமே கவரும்படி செய்தவர் முஹம்மத் ரஸூல் (ஸல்.) அவர்களைவிட யாருமில்லை. எனவே உலகத்தாரின் புகழும் போற்றுதலும் இப்புனித பெருமானுர் (ஸல்.) அவர்களின் சொல்லொணு மகிமையை ஒரு சிறிது மாத்திரம் வெளிப்படுத்துகின்றன எனலாம்.

நபிகள் நாயகம் அருளிய அனுகூலங்கள்.

சத்திய சன்மார்க்கத்தின் நற்பேறுகளை பற்றி ஒன்றுமே தெரியாமல், விக்கிர வணக்கமென்ற தீய சங்கிலியால் பிணைக்கப்பட்டு அஞ்ஞான அந்தகாரக் காட்டில் ஒருவர்க்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு திரிந்தலைந்த கூட்டத்தாரை நேர் வழிக்குக்கொண்டுவருவதற்காக நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்கள் ஆண்டவனுல் ஏவப்பெற்றுர்கள். வழி கெட்டு சத்தியந்தெரியாது கெட்டலைந்த அராபிய ஜனங்களின் நிலைமையை சிலநாட்களுக்குள் ஆச்சரியகரமானவிதமாய் மாற்றிவிட்டார்கள். இதன்பலனுகஅந்த ஜனங்கள்புதிதாய் சிருஷ்டிக்கப்பட்டவர்களே போல் அத்துணை உத்தமர்களாக மாறிவிட்டார்கள். அவர்கள் உலகமுன்னேற்றங்களை யடைந்ததோடு பாரமார்த்திகபரம ஜயமும் பெற்று விளங்கினுர்கள். பல்லோர் பக்திமான்களாகவும், வணக்கத்தில் சிறந்தவர்களாகவும், சன்மார்க்க சீலர்களாகவும் திகழ்ந்தனர். உலக வாழ்கையில் மேன்மையடைவதுடன், சன்மார்க்கத்தையும் ஓங்கிவளரச் செய்யவேண்டும் என்ற நல்லெண்ணம் அவர்களை பிடர்பிடித்து உந்தலாயிற்று. இச்சக்தியவான்களின் செவிகள் என்னேரமும் தூயதொழுகையின் அழைப்பையே (அதானையே) எதிர்பாத்துக் கொண்டிருந்தன.

நாயகத்தை பின்பற்றிவர்களின் சிறப்பு.

நபிகள் பிரான்(ஸல்)அவர்களின் உத்தமத் தோழர்களின் சன்மார்க்க வாழ்க்கை, பக்தி, வணக்கம் முதலியன மிகமிக சிலாகிக்கத்தக்கதாயிருந்தன. உலகவிவகாரக்களில் அவர்கள் எத்துணை சிறப்புடன் நடந்து கொண்டார்கள் என்பதையும் ஈண்டு சிறிது கூறுவாம்:—

"நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் உத்தமத்தோழர்கள் உலகத்தின்கண்வல்லமையும், கீர்த்தியும் மிகுந்தவர்களாயிருந்தனர். அவர்கள் அரசாங்கத்தை தலைகீழாய் புரட்டிவைக்கக்கூடிய வல்லமை யுள்ளவர்களாயுமிருந்தனர். எனினும் அவர்கள் அரசாங்கங்களை ஒற்றுமைப்படுத்தி பூரணமான ஒரே ஐக்கியக் கட்டுப்பாட்டுக்குள்ளாக்கியும் வைத்தனர்."

இஸ்லாத்தின் போதனைகளில் எல்லாவித தத்துவங்களும் பூர்த்தியாக கூறப்பட்டிருக்கின்றனவென்பது உண்மை. ஆனுல் அதன் அந்தரங்க சக்திகளைநமது அனுஷ்டானத்தில்கொண்டுவர நாம் பக்குவமடைந்துவிட்டால் அதனுல் அபரிமிதமான அனுகூலங்களடையலாம். மேலும், முஹம்மத் நபி(ஸல்.) போதித்த ஷரீஅத்து—சன்மார்க்கத்தினுல் குணமாகாத ஆன்மார்த்தநோய் ஒன்றும் இத்தாரணியில் கிடையாதென்பது திண்ணம். உலகவியல், வழக்காசாரம், ஒற்றுமை, நாகரிக வாழ்க்கை ஆகியவற்றிற்குரிய தகுதியும் நேர்மையும், நுட்பமுமான சட்டதிட்டங்கள் யாவும் இஸ்லாத்தின் போதனையில் இருக்கின்றன. இவ்வரும் பெரும் போதனைகளே நம்மவர்களின் சர்வகாரிய சித்திக்கும், மேன்மைக்கும் போதுமானதாயும், பொருந்

தியதாயுமிருக்கின்றன. இதனல் சகலத்தையும் சாதிக்கலாம்.

சத்தியத்திருநபியை நன்கறிதல்.

ஒரு தேர்ந்த வைத்தியர் எங்ஙனம் எல்லா வியாதிகளையும் தீர்க்கமாய் கண்டுணர்ந்து சரியான சிகிச்சை செய்யவல்லவரோ, அவ்வாறே நமது நபிகள்நாயகம் (ஸல்.) அவர்கள் ஆத்மார்த்தத் தீங்குகள், நோய்கள் யாவற்றையும் தம் அரும்பெரும் போதனையால் சிகிச்சைப்புரிந்து நீக்கி ஆத்மார்த்த சுகமளிக்க வல்லவராவர்கள். இதனை ஊன்றி நோக்குமிடத்து, ஒவ்வொருமனிதரும் முஸ்லிமாயினும் முஸ்லிமல்லாதாராயினும் சரியே நபிகள்நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்கள் மஹாப்பெரும் சத்தியபோதகப் பெருமானயிருந்தார்கள் என்பதை ஒத்துக்கொண்டு தானகவேண்டும்.

பொதுவாக எவரேனுமொரு மனிதரின் பெருமை, மகிமை, மேன்மை இவற்றை மதிப்பிடுவதினல், அவரது சற்குண சத்தொழுக்கம், சீர்திருத்தச் சேவைகள், பொதுநலக்காரியங்கள் ஆகியவற்ருல் நன்குமதிக்கலாம். இதே முறையில் உலகரக்ஷகர் நபிகள்நாயகம் ரஸூல் (ஸல்) அவர்களை மதிக்குங்கால், இவர்களே சர்வலோகத்துக்கும் சிறந்த சிரேஷ்ட மகான் என நன்கு புலனகின்றது. எனவே நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு இணையாகக் கூறுவதற்கு இத்தாரணியில் எவரேனும் சமமானவராயிருந்தார் என்பதை எண்பிக்க எவராலேனும் முடியுமா? தூய்மைமிக்க இந்நபியவர்கள், தாழ்மையுற்று காட்டுமிராண்டிகளாயிருந்த அராபிய ஜனங்களை மேன்மைக்குக் கொண்டுவந்து, இவர்களின் வாயிலாய் உலகத்தின் இதர மனித சமூகத்தாரெல்லாம் அனுகூலங்களையும், சத்தியத்தையும் பெற்றுக்கொள்ளும் வண்ணம் கல்வி ஞானங்களையும் சத்தியதத்துவங்களையும் நாகரிக முறைகளையும் போதித்து உலகினரை உன்னதப் படுத்திவைத்த மாபெரும்காரியம் நபி பெருமானரின் அற்புதமேயாகு மன்ருே?

அகில உலக தப்லீக் பிரசாரத்தின் அவசியம்.

இஸ்லாமிய நடவடிக்கைகளை நீங்கள் சிறிது பொறுமையோடு சிந்தித்துப் பார்ப்பீர்களானல், இஸ்லாத்தின் அடிப்படையான கொள்கைகள் வாழ்க்கை நலத்துக்கும், மனித உணர்ச்சிக்கும், ஆத்மவளர்ச்சிக்கும் மிகவும் ஏற்றதென்பது உங்கட்கு நன்குதெரியவரும். ஆகையால், இஸ்லாத்தின் பால் விசுவாசமும் சகோதரத்துவமும் பூண்டு தீவிரமாய் பாடுபட்டு இஸ்லாத்தை உலகமுற்றும் பரவச்செய்வதற்கு திறமையுள்ள போதகர்களும், பிரசாரகர்களும் அதற்காக தனி ஸ்தாபனங்களும் தற்காலம் அத்தியாவசியமா யிருக்கின்றன.

இஸ்லாத்தின் மூலதத்துவ கொள்கைகள் இன்னின்ன தென்பதைத் தெரிந்துகொள்ளாமல், மறதியாலும், விசாரத்தாலும் வழிகெட்டு அலைந்து திரியும் கோடிக்கணக்கான முஸ்லிம்களை, இஸ்லாமிய போதனையால் சன்மார்க்கத்தில் கொண்டுவரவேண்டும். மேலும் சத்திய அனுஷ்டானங்களை ஏற்றுக்கொள்ளுமாறு அவர்களை வற்புறுத்தவேண்டும்.

இதுகாலை முஸ்லிம்களிலும், முஸ்லிமல்லாதாரிலும் எத்தனைபேர் இஸ்லாத்தை பற்றியும், முஸ்லிம்களின் நிலைமையைபற்றியும், நன்காலோசித்துப் பார்த்தனரோ அவர்களடங்கலும் இஸ்லாத்தை சிரஞ்சீவியாக ஜீவிக்கச் செய்வதற்கு ஐக்கிய உலக தப்லீக் பிரசாரம் அத்தியாவசியமானதென்றே கருதுகின்றனர். எனவே உலகமெங்கணும் இஸ்லாத்தைப் பரப்புவதற்காக தப்லீக் பிரசார ஸ்தாபனங்கள் ஏற்பத்தி, அவற்றின் பிரசாரகர்கள் பல நாடுகளிலுமுள்ள கிராமங்கள், ஊர்கள், நகர்கள் முதலிய இடங்களிலும் வதியும் முஸ்லிம்களிடம்சென்று இஸ்லாமிய போதனைகளைப் பரப்பவேண்டும். இஸ்லாத்தின் அரிய போதனைகளின்படியே வாழ்க்கை நடாத்த வேண்டுமென முஸ்லிம்களுக்கு போதிக்க வேண்டும்.

முஸ்லிம்களுடைய உள்ளங்களில் இதுகாலை இஸ்லாத்தின் விசுவாசம் ஆழவேரூன்றி யிருக்கிறதென்பதில் ஐயமில்லை.

ஆனல், முழு ஊக்கத்துடன் உழைக்கும் ஒரு பெருங் கூட்டத்தார் முன்வந்து தங்களுடைய உணர்ச்சிக்கேற்ப இஸ்லாம் மார்க்க அபி விருத்திக்காக சேவை புரியவேண்டும்.

ஆண்டவன் குர்ஆனில் அஹ்லெ கிதாபுகளைப்பற்றி கூறியிருக்கும் வாக்கியமே, நம் முஸ்லிம்களுடைய அசிரத்தை, அக்ஞானம் ஆகியவற்றின் காரணம் இன்னதென்பதைப் பற்றி நன்கெடுத்துக் கூறுகின்றது. அஃதாவது :—

"உங்களுக்குமுன் வேதம் அருளப் பெற்றிருந்த ஜனங்களைப்போல் நீங்கள் ஆகிவிடாதீர்கள். (வேதம் அருளப்பெற்றபின்) நெடுங்காலம் கடந்துங்கூட அவர்கள் (முந்தின) அக்ஞானத்திலேயே கிடந்தனர். அவர்களுடைய ஹிருதயம் கடினமாகி விட்டது. அப்படிப்பட்டோரில் வெகுபேர் (வேதத்துக்கு) மாறுபட்டவர்களாகி விட்டார்கள்."

தற்கால முஸ்லிம்களுடைய நிலைமையை இது சரியாய் எடுத்துக் காட்டுகின்றது. முஸ்லிம்கட்கு சென்ற பதின்மூன்று நூற்றுண்டுகட்கு முன் இருந்துவந்த உணர்ச்சியின் வேகமும், விசேஷகரமான பிரயாசையும் இப்போது காணப்படவில்லை. அவிவேகமே இதற்கெல்லாம் காரணமாகும்.

இதுகாலை முஸ்லிம்கள் சன்மார்க்கத்தின் உண்மையான தாத்பரியத்தை பாதுகாக்காமலிருந்து விட்டதுதான் இவர்கள் க்ஷீணத்துக்குரிய காரணமாகும். சன்மார்க்கத்தின் மூலத்தத்துவம் இன்னதென்பதை மேன்மை தங்கிய ஸஹாபாக்கள் நன்குணர்ந்திருந்ததனல், எக்காலமும் அவர்களுடைய உள்ளத்தில் இஸ்லாமிய உணர்ச்சி பொங்கி யெழுந்து கொண்டிருந்தது. இதுகாலை இஸ்லாமும், அதன் அனுஷ்டானங்களும் ஒரு சடங்கைப் போலாகி விட்டன. எந்தெந்த நோக்கத்தை கொண்டு இஸ்லாத்தின் தத்துவங்களும், அனுஷ்டானத்திட்டங்களும் ஏற்படுத்தப்பட்டனவோ, அவை முஸ்லிம்களுடைய அகப்பார்வையினின்று மறைந்துவிட்ட தென்றே கூறவேண்டி யிருக்கின்றது. ஆகவே, இதுகாலை இஸ்லாத்தின் அனுஷ்டானங்களை புரிந்து வருவோர் அதன் தத்து வார்த்தங்களை நன்கு உணராதவர்களாயிருக்கின்றனர். இதே விதமாகவே நம் சமூகத்தாரனைவர் மீதும் அக்ஞானம் மென்னும் இருள் மேகம் கவிந்திருக்கின்றது.

இந்த அக்ஞான இருளைப் போக்குவதற்கு சரியான பரிகாரம் இஸ்லாமிய பிரசாரம் புரிவதேயாகும். எனவே, புதிய ஊக்கம், புதிய அறிவு, புதிய உணர்ச்சி, ஆகியவை நம்முஸ்லிம்களில் பொங்கி யெழவேண்டும். இவை, நான்கு புறமும் மூடப்பட்டு நாற்றம் வீசும் பாத்திரத்துக்குள் கிடக்கும் தண்ணீர்போலிராமல், இருபுறமும் கரை புரண்டோடும் ஓர் ஆற்று வெள்ளத்தைப்போல் பிரவாகித்து இயங்கவேண்டும்.

இஸ்லாத்தின் ஆரம்ப சரித்திரத்தை ஊன்றி நோக்குமிடத்து, அக்காலத்திலுங் கூட இஸ்லாத்தின் நல் வாழ்வுக்கும் முன்னேற்றத்துக்கு முரிய மர்மம் இஸ்லாமிய பிரசாரத்தில் தான் அடங்கியிருந்தது. உதாரணமாய், எவரேனுமொரு புதிய மனிதர், அல்லது புதிய கூட்டத்தார், அல்லது ஒரு புதிய வகுப்பார் இஸ்லாத்தில் வந்து சேர்ந்து கொள்ளவார்களானல், இதர எல்லா முஸ்லிம்களுக்குள் புத்துணர்ச்சி, புதிய வாழ்க்கை, தியாக குணம் யாவும் தழைத்தோங்கி அச்சமூகம் முழுவதும் நிலவி விடும். அன்றியும் பழைய முஸ்லிம்களில் வந்து சேர்ந்துவிட்ட நவ்முஸ்லிம்களுங்கூட இஸ்லாத்தை முன்னிட்டு அநேக தியாகங்கள், அர்ப்பணங்கள் புரிந்து சிறந்து விளங்குவார்கள். இதேவிதமாய் அக்கால இஸ்லாமிய மக்கள் எல்லோர்பாலும் சமுதாய வாழ்வுக்கு அவசியமான புத்துணர்ச்சி அவர்களுள்ளத்தில் சதா தழைத்துக்கொண்டேயிருக்கும்.

ஒலித்தோடிக்கொண்டிருந்த (புத்துணர்ச்சி என்னும்) நதிநின்றுவிடவே முஸ்லிம்களுக்கு பலவித சங்கடங்கள் நேரிடலாயின. சிறுகச் சிறுக பற்பலவிதமான குறைகளும், பிணைக்களும் வந்து நுழைந்துவிட்டன.

முஸ்லிம் சோதரர்காள்! இஸ்லாமிய தத்துவங்களை நன்கு யோசித்துப்பாருங்கள்! தவ்ஹீத், தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ்ஜு, முதலிய அதன் ஒவ்வொரு அனுஷ்டானமும் ஆழ்ந்த தத்துவங்களுடையனவாய் காணப்படுகின்றது. ஆகவேதான், இவற்றை நன்கு சிந்தித்துப்பார்க்கும் அயல் மதவாதிகளும் இதன்பால் மனம் லயித்து இஸ்லாத்தை அங்கீகரித்துக்கொள்ள முன்வந்துவிடுகின்ற

னர். இங்ஙனம் இஸ்லாத்தின் தத்துவங்களை தாங்களே உய்த்துணர்ந்து பார்த்து மனஸ்பூர்வமாய் பிறமதஸ்தர்கள் இஸ்லாத்தைத் தழுவிக்கொள்ளுவார்களாயின், இஸ்லாத்தின் ஷரீஅத்து சட்டதிட்டங்களுக்கும், அரியபோதனை தத்துவங்களுக்கும் எத்துணை மதிப்பும் பெருமையும் ஏற்படுகிறதென்பதை யோசித்துப்பாருங்கள் !

இப்படிப்பட்ட மதிப்பும், கீர்த்தியும், அபிவிருத்தியும் இஸ்லாத்துக்கு நாம் தேடித்தர வேண்டுமாயின் அகிலஉலக தப்லீக் பிரசாரத்தினலல்லாமல், இப்பெருங்காரியத்தை எளிதில் சாதித்து விடுவது முடியாது. இவ்வித தப்லீக் பிரசாரம் ஏற்பாடு செய்வது முஸ்லிம்களேயோ வேறு எவரையோ நேர்மைக்கு கொண்டுவருவதற்கு மட்டுமென்றெண்ணி விடவேண்டாம். இப்பெரும் ஏற்பாடு இஸ்லாத்துக்கும் குப்ரியத்துக்கும் எதிரிடையாய் நிலைநிற்கும் சாதனமாகும். இவ்விஷயம் இஸ்லாமிய உலகம் முழுவதையும் பொறுத்ததாகும்.

இப்பெருங்காரியத்தை முஸ்லிம் உலக மக்களெல்லோரும் ஏகமாய் சேர்ந்தே செய்ய வேண்டுமென்பது ஒருபுறமிருக்க, இதில் இந்திய முஸ்லிம்களின் கடமை என்னவென்பதைமட்டும் ஈண்டு பரிசீலனை செய்யவேண்டும். இந்தியாதேசம், இஸ்லாமிய தப்லீக் பிரசாரத்தை ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் செய்வதற்கு தகுதியான மத்தியஸ்தலமாகும். இப்பெருங்காரியத்தை யாவரும் ஏகமாய்சேர்ந்து செய்யவேண்டுமெனக் கூறியதனல், இதர சிறிய இஸ்லாமிய தப்லீக் சபைகளை, சங்கங்களையெல்லாம் மூடிவிட வேண்டுமென்பது கருத்தல்ல. ஆனல், இச்சிறு ஸ்தாபனங்களையெல்லாம் நல்ல நிலையில் வைத்துக்கொண்டே, எல்லாவற்றிற்கும் தலைமைஸ்தாபனமாய் ஒரு பெரிய சங்கத்தை ஏற்படுத்தவேண்டும். இதனுடன் சிறிய சபைகளையும் இணைத்து எல்லா சபைகளினிடையேயும் ஒற்றுமையை முதலில் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். பிறகு இஸ்லாமியப் பிரசாரக்காரியத்தை ஆங்காங்கு ஆரம்பித்து ஊக்கத்துடன் அபிவிருத்திக்குக் கொண்டு வரவேண்டும். இத்தலைமை சபையானது அகில உலக இஸ்லாமிய சபைகள் யாவற்றினுடனும் பரஸ்பரநேச சம்பந்தம் பூண்டு இஸ்லாமிய பிரசாரவேலையில் பக்கபலமாயிருந்துழைக்கவேண்டும். இங்ஙனம் நம் சமூகத்தினர் செய்வார்களானல், இஸ்லாம் மதம் இத்தாரணியில் எல்லா மதங்களையும் விட மேலோங்கி பிரகாசிக்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

நஞ்சிறூர்கட்கு நன்மதி.

புத்தியின் பிரயோஜனம்.

ஒரு முறை அக்பர் பாதுஷா தமது மதி மந்திரியான பேர்பலை அழைத்து, "மந்திரி! மனிதருக்கு கஷ்டம் சங்கடம் நிகழ்வுறுங்கால் அவற்றினின்று எளிதில் காப்பாற்றும் அரிய ஆயுதம் எதுவாகுமெ"ன்று கேட்டார். அதற்கு மதிமந்திரி, "பாதுஷா! கஷ்ட சங்கடத்தின் நேரத்தில் மனிதனை காப்பாற்றும் அரியகருவி "புத்தியும், நிதானமும், ஆலோசனையும்" தான். ஏனெனின் ஆபத்து நேர்ந்தகாலை ஒருவன் தன் புத்தி, நிதானம், ஆலோசனை இவற்றை உபயோகிப்பானுகில், அவனுக்கு நேர்ந்த சங்கடம் எப்படிப்பட்டதாயினும் அதற்காக அவன் ஒரு சிறிதும் அஞ்சமாட்டான். தன் உயிரை அவ்வாபத்திலிருந்து வெகு எளிய முறையில் பாதுகாத்துக் கொள்வான்," என்று பதில் கூறினர். இப்பதிலைக்கேட்டு பாதுஷா திருப்தியடைந்தார்.

அருமைச் சிறுவர்களே! பேர்பல் மந்திரி கூறியது முற்றும் உண்மையே. ஒருவன் ஆபத்து நேரத்தில் தனது புத்தி நிதானம் ஆலோசனை இவற்றை உபயோகித்துக் கொள்வானுகில், எப்படிப்பட்ட விபத்தாயிருப்பினும் அதைவிட்டு எளிதில் தப்பித்துக்கொள்வானென்பதற்கு ஒரு சிறு கதை சொல்கிறேன். கேளுங்கள்!

"ஒருநாள் இரவு சில திருடர்கள் ஒரு வீட்டுக்குள் களவாட நுழைந்து விட்டார்கள்

அந்த வீட்டின் ஜனங்கள் எங்கோ விருந்துக்குச் சென்றிருந்தார்கள். ஆனல் ஒரு சிறு பெண்ணும், வேலைக்காரனும் மட்டும் தங்கியிருந்தனர். அந்தச்சிறுமி வீட்டுக்குள் படுத்திருந்தாள். வேலைக்காரன் வீட்டுக்கு வெளியே தூங்கிக்கொண்டிருந்தான். திருடர்கள் வீட்டுக்குள் நுழைந்து சாமான்களை எடுக்க ஆரம்பித்தனர். இந்த சப்தத்தினல் அந்தப் பெண் கண் திறந்து விழித்துக்கொண்டாள். கள்வர்களைக்கண்டு பயந்து நடுங்கினள். ஆனல், அந்த ஆபத்தான சமயத்தில் அவள் மனத்துள் ஒரு யோசனை தோன்றிற்று. அஃதாவது:—"நான் இப்போது சப்தமிட்டு கத்தினல் திருடர்கள் என்னை உயிரோடு கொன்றே போடுவார்கள். சப்தமிடாமல் பயந்திருந்துவிட்டாலோ வீட்டின் சாமான்களெல்லாம் களவு போய்விடும். ஆகவே இந்த சமயத்தில் புத்தி-நிதானம்-ஆலோசனை ஆகியவற்றை கொண்டுதான் உயிரையும் வீட்டு சாமான்களையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்ற முடிவுக்குவந்து, குழந்தைகள் தூக்கத்தில் "வாய்ப்பினத்து" வதே போல் பின்வருமாறு உளரலானள் :—

"நான் இப்போது பெரிய பெண்ணகிவிட்டேன். இன்னும், சில நாட்களில் என் அம்மா-அப்பா என்னை யாருக்காவது கலியாணம் செய்து கொடுத்து விடுவார்கள். அப்போது இந்த வீட்டைவிட்டு என் மாமியார் வீட்டுக்குப் போய் விடுவேன். அங்கு எனக்கு ஆண்பிள்ளை பிறக்கும் அந்த பிள்ளையை நான் அருமையாக வளர்த்து அதற்கு 'ஜெயராஜ்' என்றுபெயர் வைப்பேன் அந்தப்பிள்ளை வளர்ந்து பெரிய பையனகிவிடுவான். அவன் அங்கு மிங்கும் போய் விளையாடி விட்டு வருவான். நான் அவனுக்கு இன்பமான தின்பண்டங்களையும், திவ்வியமான உணவுகளையும் ஊட்டுவேன். அவன் வெளியில் போய் விளையாடுங்கால் என்றைக்கேனும் அவன் சாப்பாட்டுக்கு வர நேரமாகிவிட்டால் நான் வாசற்படியண்டைபோய் 'ஜெயராஜ்! ஜெயராஜ்!' என்று கூப்பிடுவேன். எனது சப்தம் அவன் காதில் விழாமல், அவன் வராவிட்டால், சற்று அதிகமாக உரத்து "ஜெயராஜ்! ஜெயராஜ்!" என்று இந்த மாதிரி கூப்பிட்டுவேன். பின்னும் அவன் வராவிட்டால், இன்னும் அதிகமான உரத்தசப்தத்தோடு 'ஜெயராஜ்! ஜெயராஜ்! சீக்கிரம் ஓடிவா' என்றுகத்துவேன். இந்த கடைசி சப்தத்தில் அவன் நிச்சயமாய், ஏன் அம்மா! என்று கூவிக்கொண்டு ஓடிவருவான். உடனே நான் அவனது கை முகம் கால்களை கழுவி உணவு ஊட்டிவிட்டு, யான் என் வீட்டு வேலைகளை பார்த்து கொண்டிருப்பேன்."

என்று அந்த சிறுபெண் உண்மையாகவே சப்தமிட்டு கூவிவிட்டு மௌனமாய் கண்ணை மூடிக்கொண்டாள், இவள் இவ்வாறு பேசுவதை அறிந்த திருடர்கள் இந்தச் சிறுபெண் தூக்கத்தில் என்னமோ உளருகிறள்! என்று கருதி அசட்டையாய் தங்கள் களவுத்தொழிலில் ஈடுபட்டிருந்தனர். ஆனல் அதன் உண்மைக் கருத்து வேறு. அதாவது:—வெளியே படுத்துத்தூங்கிக்கொண்டிருந்த வேலைக்காரனின் பெயர்தான் 'ஜெயராஜ்' என்பது. அந்தச்சிறுபெண் தன் புத்தி நிதானம் ஆலோசனைஇவற்றை யுபகோதித்து திருடர்களுக்கும் தெரியாத வண்ணம் வேலைக்காரனை கூப்பிடவேண்டுமென்றுதான் அத்தந்திரத்தைக் கையாண்டாள்.

நிற்க இந்தப்பெண் 'ஜெயராஜ்' என்று தன்னைத்தான் கூப்பிடுகிறளென்று அந்த வேலைக்காரன் தெரிந்துகொண்டு எழுந்துட்கார்ந்தான். பிறகு கடைசி முறை உரத்த சப்தத்தில் "ஜெயராஜ் ஜெயராஜ்! சீக்கிரம்வா என்று கூவியழைத்ததைக் கேட்டதும், வீட்டுக்குள் ஏதோ விபரீதச் சம்பவம் நடைபெறுகிறதென முடிவுசெய்து, துப்பாக்கியைஎடுத்துக்கொண்டு வீட்டுக்குள் போய் திருடர்களை மடக்கி, பிடித்துக் கொண்டான். (பிறகு நடக்க வேண்டியவை நடைபெற்றன.)

என தருமந்த சிறுர்காள்! பார்த்தீர்களா அந்தச் சிறிய பெண் ஆபத்து நேரத்தில், தன் புத்தி -நிதானம்- ஆலோசனை இவற்றை கொண்டு எவ்வளவுஅறுமையான தந்திரம் புரிந்து தன் உயிரையும் வீட்டுச்சாமான்களையும் காப்பாற்றிக்கொண்டாள்! இவ்வாறின்றி அந்தப்பெண் திருடர்களை கண்டு பயந்து நடுநடுங்கி அபயக் கூச்சலிட்டிருப்பாளாயின், அவள் திருடரால் கொல்லப்படுவதோடு, வீட்டுச் சாமான்களும் களவு போயிருக்குமல்லவா?

பிள்ளைகளே! இந்த உலகத்தில் புத்தி தான் மிகப்பிரதானமானது, புத்தியை கொண்டே மதனிதனானவன் சிங்கம், புலி, யானை முதலியவற்றை தனக்கு அடிபணியும்படி செய்துக் கொள்கிறான். ஆகவே நீங்களும் புத்தி-நிதானம்-ஆலோசனை இவற்றை கிரகித்துக் கொள்ளுங்கள். உங்கட்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் பயப்படாமல், புத்தியினால் ஆலோசனை செய்து ஏதேனும் தந்திரம்புரிந்து விபத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள்! புத்தியை உபயோகித்தால் எப்படிப்பட்ட பெரிய காரியமாயிருந்த போதிலும் வெகு சுலபத்தில் அக் காரியத்தை சாதித்து விடலாம்!

ஹிஜாஸ் தேச அபிவிருத்தி

இஸ்லாமிய உலகின் பிரசித்திப் பெற்ற ஓர் அறிஞரும் பிரபல வியாஸ கர்த்தருமாகிய அல்லாமா அமீர் ஷகீப் அர்ஸலான் அவர்கள் பரிசுத்த ஹிஜாஸின் பொருளாதாரம், நிர்மாணவேலைகள், நாட்டுவளம், நன்னிலை, பல துறை முன்னேற்றம் - இன்னோரன்ன பல முக்கிய விஷயங்களை விவரித்து ஒரு வியாசமெழுதியுள்ளார். அதன் சாரம், பின்வருமாறு:—

பரிசுத்த ஹிஜாஸில் விவசாய வசதிகள்.

பரிசுத்த ஹிஜாஸ் நாட்டிலே நிலங்களில் பெரும்பாகம் மிக எளியமுறையில் விவசாயம் செய்வதற்கு தகுதியுடையனவாகும். இதனால் ஹிஜாஸ் ஜனங்கள் மிகவும் சவுகரியமாகவும் சுலபமாகவும் பயிர்த்தொழில்செய்து சுக வாழ்க்கை நடத்த இடமிருக்கிறது. ஆனால், இவ்வேலைக்கு முதன் முதலாக வேண்டியது அதற்குள்ள கல்வியும் தொழிற்பயிற்சியுமாகும். இரண்டாவதாக வேண்டியது மூலதனமாகும்.

ஹிஜாஸில் ஆங்காங்கு கிணறுகள் வெட்டி நீர் பாசனத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொள்வது மிகவும் அவசியமாகும். கிணறுகளைவெட்டி, ஜலத்தை எளிதில் இறைப்பதற்குரிய இயந்திரங்கள் அமைக்கவேண்டும். காற்றின் விசையால் இயங்கி ஜலமிறைக்கும் இயந்திரங்களையான் மியூரிகாதீவில் பார்த்திருக்கின்றேன். இவ்வியந்திரங்கட்கு கரிச்செலவோ, எண்ணெய்ச் செலவோ கிடையா. ஹிஜாஸிலும் இவ்வகை யந்திரங்களை உபயோகத்துக்குக் கொண்டுவந்தால், அந்நாட்டுக்கு அளவிட முடியாத அனுகூலங்கள் ஏற்படும்.

முன்னேற்றத்துக்கு வழியென்ன?

இவ்விஷயங்களை நோக்குமிடத்து மிகவும் முக்கியமாய் வேண்டியது மூலதனமேயாகும். இதற்கு வழியாதெனின், ஹிஜாஸ் அரசாங்கத்தார் பொருளாதார நிர்வாகத்தை மிக விசாலமானதாக ஆக்கி அப்பொருளினின்று ஒரு பகுதியை விவசாய அபிவிருத்திக்காக ஒதுக்கிவைத்து விடவேண்டும். இதிலும் ஏதேனும் குறைவு ஏற்பட்டால் விவசாயத்தால் லாபமடையும் பொது மக்களின்பொருளினின்று வாங்கி அக்குறையை நிவர்த்திக்க வேண்டும். தவிர பொது மக்களிடமிருந்து சிறிது தொகையை கிஸ்தி மூலம் வசூல்செய்யலாம். இப்படிச் சொற்பதொகை வரிகொடுப்பதால் அவர்கட்கு கஷ்டமொன்றும் ஏற்படமாட்டாது.

இரண்டாவதுவழி யாதெனில், இந்தகாரியாதிகளை நடத்துவதற்காக இஸ்லாமிய கம்பனிகளை ஏற்படுத்தி, அவற்றின் வசத்தில் பொறுப்பை ஒப்படைத்து விடவேண்டும். இக்கம்பனிகள் ஹிஜாஸ், நஜத், எகிப்து, ஸிரியா, ஹிந்துஸ்தான் ஆகிய இஸ்லாமிய நாடுகளுடன் சம்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அரசாங்கத்தார் இக்கம்பனிகட்கு விசேஷகரமான உரிமைகளை அளித்தல் வேண்டும். ஆனால் இவ்வுரிமை சாஸ்வதமானதாயிருத்தலாகாது. ஒரு நீண்ட குறிப்பிட்ட காலம்வரை தானிருக்கவேண்டும்.

இக்கம்பனியார் முதலில் செய்யவேண்டிய காரியங்களாவன: விவசாய முன்னேற்றத்துக்கு அவசியமான வேலைகளையெல்லாம் நடத்தவேண்டும். கிணறுகள் வெட்டும் வேலையை தகுந்த திட்டம்போட்டு ஆரம்பிக்க

வேண்டும். இதற்காகும் செலவு தொகைகளை பிறகு கிடைக்கும் இலாபத்திலிலிருந்தேனும், அல்லது வேறு ஏதாவதுநிதியிலிருந்தேனும் பெற்றுக்கொள்ளுவதென்று ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

அராபியா பூபாகத்தில் உலோகச் சுரங்கங்கள்.

அராபிய பூபாகத்திலுள்ள பல பாகங்களிலே உலோகக்கனிகள் இருக்கின்றன. பூமியினின்று உலோகமெடுப்பது மிக முக்கியமான விஷயமாகும். இதனால் அரசாங்கம் முன்னேற்றமடையவும், பணக்கஷ்டமின்றி செழிக்கவும் சவுகரிய முண்டாகும்.

அராபிய தேசத்தில் உலோகக்கனிகள் மிகுதியாய் இருக்கின்றனவென்பது பிரபலமான விஷயமாகும். இவ்விஷயம் பண்டைக் காலத்திலிருந்தே எங்கும் பிரசித்தியாயிருக்கின்றது. இதையொட்டி சரித்திராசிரியர்கள் ஏகமாய் கூறுவதாவது:—பண்டைக்காலந் தொட்டே அராபியாவின் செழிப்பு இரு பொருட்கள் மீது சார்ந்திருந்தது (1) இந்தியா, மக்ரிபெ அக்ஸா, மஷ்ரிகெ அக்ஸா முதலிய நாடுகட்கு அராபியாவே வியாபாரஸ்தலமாகவும், கொள்ளல் விற்றலுக்குரிய பெரிய பஜாராகவு மிருந்தது. (2) அங்கு உலோகக்கனிகள் ஏராளமாயிருக்கின்றனவென்பது உண்மை. ஆனால் இவ்விஷயம் மறைப்பொருளா யிருந்துவருகின்றது.

போரில் வெற்றி அடைதல், பிறநாடுகளை பிடித்துக்கொள்ளல் முதலியவற்றிற்குரிய காலம் கடந்துபோய்விட்டது. இதுகாலை நம்மவர்களுக்கு இவ்வித ஆசையுங்கிடையாது. அது வேண்டவும் வேண்டாம். நமது ஆதீனத்தில் இருப்பதை நல்லவிதமாய் பாதுகாத்துக்கொள்ளுவதும், அராபிய தேசத்தை அன்னியவர்கத்தாரின் ஆதிக்கத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதாய் செய்துகொள்ளுவதுமே நமக்கு வேண்டற்பாலதாகும். இதற்குரிய சரியானவழி, அராபிய தேசத்தைச் சேர்ந்த இயற்கைவளமுள்ள தீவுகளை நமதாதீனத்தில் கொண்டுவரவேண்டியதும், இவற்றை நமது சொந்த உபயோகத்திலாக்கிக் கொள்ளவேண்டியதுமே யாகும். இந்த வழி நமக்கு ஏற்பட்டுவிடுமாயின், அராபிய நாட்டின் மீது அன்னியர்கள் எதிர்க்கவோ தாக்கவோ முடியாது என்ற தைரியம் நமக்கு நிச்சயம் ஏற்பட்டுவிடும். அராபிய தேசமும் முன்னுக்கு வரும்.

அன்னியர் ஆதிக்கத்தின் அபாயம்.

நமது முன்னோர்கள் எவ்வித சாதனத்தை பெற்று விடுதலையும் முன்னேற்றமும் அடைந்தார்களோ அவ்வித பொருட் சாதனத்தையே நாமும் தேடி அடைந்து எல்லாவித விடுதலையும் முன்னேற்றமும் பெறுதல் வேண்டும். சென்றகாலத்தில் அராபியப் பிரதேசத்தின் சமூகத்தினர் முன்னேற்றமும், செழிமையும், சந்தோஷமும் பெற்று வாழ்ந்தமைக்கு அரும்பெரும் சாதனமாயிருந்தது உலோகக்கனிகளேயாகும். இதனால் முன்னோர்கள் கண்ணியமும்,நலனும்,முன்னேற்றமும் அடைந்து விளங்கினர். இதற்கான எல்லா காரியங்களையும் சாதித்தனர்.

சுரங்கந்தோண்டி உலோகம் எடுத்து பிரயோஜனமடைவ தென்பது இலேசான காரியமல்லவென்று சிலர் கூறுகின்றனர். இதை நம்பிஇச்சாதனத்தை அநுபவித்துக்கொள்ள அன்னிய வர்க்கத்தாருக்கு நாம் அனுமதி கொடுத்து விடுவோமாயின், அதனால் அன்னியர்கள் செல்வாக்கும் ஆதிக்கமும் பெற்றுவிடுவார்கள். அதன்பின்நாம் இழிவும் வருத்தமும் தவிரவேறெந்த நலனையும் அடைய முடியாது. "பிறர்க்கு அடிமைப்பட்டிருக்கும் அமீரைவிட சுயேச்சையாயிருக்கும் பக்கீர் மேல்" என்னும் முதுமொழியை நாம் அனுஷ்டிப்போமாக.

மேலும், அல்ஜீரியா, டியூனிஸ், மக்ரிபெ அக்ஸா ஆகிய நாடுகளில் விலையுயர்ந்த உலோகச் சுரங்கங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் இவற்றை அங்குள்ள சுதேசமக்கள் எடுத்து அனுபவித்துக் கொள்ள முடியாதவர்களாயிருக்கின்றனர். ஏனெனின், அன்னிய வர்க்கத்தின் கிளர்ச்சியும் ஆதிக்கமும் அங்கு வாள்வீசிக் கொண்டிருக்கின்றன.

இஸ்லாமிய வியாபாரக் கம்பெனிகளின் ஸ்தாபனம்.

இஸ்லாமிய வர்த்தக கம்பனி ஏற்படவேண்டுமென்பது அத்தியாவசியமான விஷயமாகும். இதை ஆட்சேபிக்க எவருக்கும் பாத்தியதை ஒரு சிறிதும் கிடையாது. சுகமான அடிமைத்தனத்தைப் பார்க்கினும் சுதந்திரமுள்ள பக்கீர் தனமே நமக்கு விருப்பமானதாயிருக்கின்றது.

"ஹிஜாஸின் உலோகச் சுரங்கங்களிலிருந்து பிரயோஜனமடையவேண்டும் என்று கூறுவோரின் நோக்கம் இதன் ஒரு பாகத்தை முஸ்லிமல்லாத (அன்னிய) கம்பனிகட்கு கொடுத்துவிடவேண்டு மென்பதல்ல. அல்லது, அன்னியவர்க்கத்தின் ஆதிக்கத்தில் அமுங்கிக்கிடக்கும் ஏதேனுமொரு முஸ்லிம் கமிட்டிக்கு கொடுத்துவிடவேண்டுமென்பது மல்ல. ஆனல், எல்லாக்காரிங்களையும் இஸ்லாமியக்கம்பனிகளே நடத்திச்சென்று நலன் பெறவேண்டு மென்பதேயாகும்.

நிற்க, "இஸ்லாமிய நாடுகளில் இஸ்லாமிய வர்த்தக கம்பனிகள் மிகக்குறைவாகவே இருக்கின்றன. எங்கோ ஒவ்வொன்றிருப்பினும், அவற்றின் மூலதனம் மிகவும் குறைவானதாகும்; இஸ்லாமியக் கம்பனிகளை ஏற்படுத்துவது கூடுமான காரியமே யாகும்; ஆனல் இவற்றினிடம்போதுமான மூலதனச் செல்வம் இல்லாதிருப்பதே வருந்தற்குரியதாகும்," என்றெல்லாம் குறைகூறப்படுகின்றது. ஆனல் எனதபிப்பிராயம் யாதெனின், "தேடிப்பார்ப்போர் இஸ்லாமிய நாடுகளில் இஸ்லாமியக் கம்பனிகள் அநேகம்மலிந்திருப்பதை கண்டுகொள்வர். இவற்றின்மூலதனங்களும் அற்ப சொற்பமானவையல்ல, இவ்வித இஸ்லாமியக் கம்பனிகள் வர்த்தகத்துறையல்லாமல், இதர பொருளாதார விவகாரத் துறையிலும் போதிய திறமையுடையனவாய் காணப்படும்.

பேராசைக்காரர்களின் பயம்.

"அராபிய தேசத்தில் உலோகக்கனிகள் எராளமாயிருப்பினும், அவற்றை எடுத்து நாம் பிரயோஜன மடைவதென்பது சிங்கத்தைத் தேடிப்பிடித்துக் கொண்டுவருவதற் கொப்பாகும். இவ்விஷயம் ஐரோப்பிய வர்க்கத்தாருக்குத் தெரிந்துவிட்டால் உடனே அவர்கள் பேராசைகொண்டு அவற்றின் மீது ஆதிக்கங்கொள்ள பகீரதப் பிரயத்தனப்படுபடுவர். உலோகச் சுரங்கத்தின் பேராசையினல் அவர்கள் தங்கள் சமாதான ஒப்பந்தத்தைக்கூட பொருட்படுத்தமாட்டார்கள்" என்று சில ஜனங்கள் கூறுகின்றனர். எனவே இந்தக் கூற்றைக்கொண்டு நாம் பயப்படத்தேவையில்லை. அந்தஜனங்கள், நம் அராபியதேசத்தின் உலோகச் சுரங்கங்களைப்பற்றி நல்லவிதமாய் தெரிந்தே தானிருக்கின்றனர். ஆங்கு எத்துணைவிலைபெறும்படியான உலோகங்கள் அகப்படுமென்று ஒருவாறு அவர்கள் உணர்ந்தேதானிருக்கின்றனர். இவ்விஷயங்களை விபரமாக அவர்கள் தெரிந்தில்லாவிடினும் சுருக்கமாகவேனும் தெரிந்துள்ளார்களென்பது உண்மை. பூமி சாஸ்திர ஆராய்ச்சியைக்கொண்டு ஒவ்வோரிடத்து இரகசியங்களையும் அவர்கள் தெரிந்தேதானிருக்கின்றனர். இன்னும் அவற்றை எப்படி வெளியிலெடுப்பது? என்ற முறையையும் அவர்கள் தெரிந்துள்ளனா.

அராபியப் பிரதேசத்தின் மீது ஆதிக்கங் கொண்டுவிடுவதென்பது அவர்களால் முடியக்கூடிய இலேசானகாரியமல்ல. அஃது ஒரு ஸ்திரமான மலைக்கொப்பாகும். இதை அசைப்பதென்பது அசாத்தியம். உஷ்ண மிகுந்த அராபிய நாட்டுமக்களின் இணையற்ற வீரதீரமும், அவ்விஸ்லாமிய மக்களின் நற்குண நல்லொழுக்க மேன்மையும் உலகமறியக் கிடக்கின்றன. இஸ்லாத்தின் எதிரிகளால் கட்டிவிடப்படும் பொய்யுரைகள் ஒழிந்து போவதற்கு மேற்படி சிறப்புகளே போதுமானதாகும்.

அராபிய தேச சரிதப் பெருமை.

அராபிய தேசம் உலகமனைத்திலும் மிக ஏழ்மையும், வறுமையும் மிகுந்த நாடென்பதாக சில ஜனங்கள் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். உண்மை நிலையோ இதற்கு நேர் மாருயிருக்கின்றது. மத்திய கால நிலைமையை நாம் உற்று நோக்குமிடத்து, அராபிய தேசம் செல்வத்திலும் வனப்பிலும் சிறந்த நாடாக யிருந்த தென்பதை தெரிந்து கொள்ளுகிருேம். இதன் செல்வப் பெருக்குக்கு வர்த்தகம், சுரங்க உலோகச் செல்வம் இவ்விரண்டும் மூல காரணமாயிருந்த தென்பதும், சிறப்பாக இங்கு தங்கம் ஏராளமாக எடுக்கப்பட்ட தென்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

அதுகாலை மக்கமாநகர், குடியரசாங்கத்தின் மத்தியஸ்தலமாயிருந்தது. வர்த்தக ஸ்தலமாகவு மிருந்த பெருமையும் அதற்குண்டு. உலகத்தின் எல்லா நாடுகளுடனும் மக்காவின் வர்த்தக சம்பந்த மிருந்து வந்தது. சிறப்பு மிக்க மக்காவின்கண் ஆபரணங்களின் தொழில் மிகமிக உச்சஸ்தான

மடைந்திருந்தது. "அராபிய தேசமானது சுத்தமான தங்கத்தின் புதையிடமாகும்" என்று பண்டைய கிரேக்க சரித்திரக் காரர் எழுதி வைத்துள்ளார்கள்.

ஆகவே நாம், முதன் முதலாய் அராபிய சுரங்க உலோகங்களை பயன்படுத்திக் கொள்ளும் வழியில் செல்லவேண்டும். இப்படிச் செய்தாற்றான் நமது சர்வ நிர்மாண திட்டங்களும் நிறைவேறி பயன் உண்டாகும். துருக்கியர் மோஸுல் எண்ணெய் ஊற்றுகளினின்று எத்தகைய பிரயோஜனத்தையும் அநுபவித்துக் கொள்ளவில்லை. இந்தப் பிரதேசம் அவர்களுடைய ஆதீனத்தைவிட்டும் அன்னியர் ஆதிக்கத்திற்குப் போய்விடவே அன்னிய வர்க்கத்தார் அதனை தங்களுக்கு மிகப் பிரயோஜனகரமானதாய்ச் செய்து கொண்டார்கள். ஆகவே, நஜத்—ஹிஜாஸ் அரசாங்கத்தார் தம்நாட்டு உற்பத்திப் பொருளை உபயோகப்படுத்திக் கொள்வதில் தீவிரமாய் பிரவேசித்தல் வேண்டும். இன்னும் ஒழுங்காகவும், பொறுப்பாகவும் காரியங்களை சாதிக்கும் இஸ்லாமியக் கம்பனிகளையும் ஏற்படுத்தல் வேண்டும். ஆனால், இக்கம்பெனிகள் அன்னிய வர்க்கத்தாரின் சக்திக்குட்பட்டதாய் இருத்தல் கூடாது. தைரியமும் ஊக்கமுங் கொண்டு இக்காரியத்தில் இறங்கிவிட்டால் பிறகு இஃதொரு சிரமமானதாய்க் காணப்பட மாட்டாது.

தாடியின் கண்ணியம்.

நவீன நாகரிகத்துக்கும், புதுநடைமுறைக்கும் பிரான்ஸ் தேசம் பெயர்பெற்றதாகும். இவ்வாருள்ள பிரான்ஸுக் குடியரசாங்கத்தில் "மோஷியதாவீ" என்பார் பிரதமத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படவே தாடி வைக்கும் புனித வழக்கத்துக்கு நல்லதிருஷ்டமும் கண்ணியமும் ஆங்கு எற்பட்டுவிட்டது. மோஷியதாவீ என்பாரின் தாடி மிக அடர்ந்ததும், நீண்டுவளர்ந்ததுமாகும். இதுமட்டுமல்ல, அவர் தமக்கு தோழர்களாக நியமனஞ் செய்துகொண்டுள்ள கனவான்களும் தங்களின் நீண்டுவளர்ந்த அழகிய தாடிகளினாலேயே மிகப் பிரசித்திபெற்றிருந்து வருகின்றார்கள். இராஜரீகத் துறைகளிலுள்ளோரில் தாடிவைக்கும் வழக்கமானது அங்கீகரிக்கப்பட்டதாகவும், புதுநடைமுறை யுலகுக்கு மிக அவசியமானதாகவுமே இருந்து வருகின்றது. மேற் கூறப்பெற்ற சம்பவம் நிகழ்ந்த பின்னரேதான் பிரான்ஸிலுள்ள பிரபல நகரமாகிய நான்ஸீயின் வாலிபர்கள் "பிரஞ்சுக் கட் தாடி" வைத்துக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றனர்.

தாடிக்கு 'பிரஞ்சுகட்' என்று பெயர் ஏற்பட்டதனால் ஒன்றும் பாதகமில்லை. எவ்வாறாயினும் பிரான்ஸு தேசத்திலுங்கூட தாடியின் மகிமையும் அவசியமும் தோன்றியதைமட்டுமே நாம் கவனித்தல் வேண்டும்.

மேலும், மேனாட்டாருக்கும் கீழ்நாட்டாருக்குமிடையே கண்ணியமான வித்தியாஸங் காட்டுவது தாடியேயாகும். சிப்பாய்கட்கும், ஆண்டவனுக்கு பயந்து வணங்கும் நல்லடியார்கட்கு மிடையே வித்தியாஸம் காட்டுவதும் தாடியாகவே யிருக்கிறது.

தாடி வைப்பதிலுள்ள பிரயோஜனத்தையும் தத்துவத்தையும், தாடியை சிறைத்துக் கொள்ளும் "தாடிமுண்டா" க்கள் எளிதில் அறிந்துகொள்ள மாட்டார்கள். நவீன நாகரிகத்தில் ஆழ்ந்துக்கிடப்பவர்கள், தாடிவைக்கும் ஆசாரத்தை என்னமோ ஒரு கட்டுப்பாடென்றும், பண்டைக்காலத்தவர்களின் ஏதோ ஒரு ஞாபகார்த்த மென்றுமே எண்ணிக்கொண்டுள்ளனர். இந்த விதத்தில் பார்த்தபோதிலும், தாடிவைப்பது பெருந்தகைக்கும் பரிசுத்த வாழ்க்கைக்குமுரிய அத்தாட்சியென்பது நன்குவிளக்கமாகின்றது.

பண்டைகாலத்து வணக்கஸ்தர் (ஆபித்)களும்யோகிகளும், தபசிகளும், மகான்களும் நீளமான தாடிகள் வளர்த்துக் கொண்டிருந்தனர் என்பது மதக்கிரந்தங்களில் காணக்கிடக்கின்றது. இதற்கு அஞ்சிக் கொண்டுதான் இக்கால இளவாலிபர்கள் தாடிவைக்க வெட்க முறுகின்றனர் போலும்! அநேகமாய் எங்கும் பாதிரிகளும், கிறிஸ்துமதப்

போதகர்களுங்கூட தாடி வளர்த்துகொண்டிருப்பதை காண்கின்றோம்.

பிரசித்திப்பெற்ற மதங்களுக்கு மத்திய ஸ்தலமாகயிருப்பது நமது ஆசியா கண்டமாகும். இங்கு பொதுப்படையாக தாடி வைக்கும் நல்வழக்கம் பண்டைகாலமுதல் இதுகாறும் நடைபெற்றே வருகின்றது. ஆனல், ஐரோப்பா தேசம் அப்படியல்ல. எனெனின், அங்கு எத்தனையோ வீராதி வீரர்கள் பிறந்துச் சென்றுள்ளார்கள். எனினும் இன்னேரெல்லாம் "தாடிமுண்டா"க்களாகவே இருந்துள்ளனர். நிற்க மகா சிகந்தர், ஸேர்ஸ், ஸுல்தான் ஸலீம், மகா பெட்டர், நெப்போலியன், ஹிண்டன்பர்கு முதலிய கீழ்நாட்டு, மேல்நாட்டு வீரர்கள்—மன்னர்கள் முதலியோர் (தாடி வைப்பதின் தத்துவத்தை உணராது போனதால்) தாடியை சிறைத்துக் கொள்ளும் வழக்கமுடையவர்களாயிருந்தனர். கௌதம புத்தர் போன்ற மதப்போதகர்கள் தாடியை வளர்த்துவைத்து கொண்டிருந்தனர்.

இவ்வுலகத்தின்கண் உதித்த போதகர்கள் யாவரும் (ஒரு சிலரை தவிர்த்து) தாடிசிறைத்துக் கொள்வதை ஒரு கெட்ட காரியமென்றே வெறுத்துத் தள்ளி வந்தார்கள். யூனனியர் (கிரேக்கர்)களின் மிகப்பெரிய ஸனம் - டியூயஸ் என்பாரும் அடர்ந்த நீண்ட தாடி யுடையவரா யிருந்துவந்தார். பக்ராத், அப்லாத்தூன் முதலியோரும் மிகப்பிரியத்தோடு தாடி வைத்துக்கொண்டிருந்தார்கள். தாடியை வெறுத்து, தாடிக்காரர்மீதுக் கொடுமை புரிந்தோரு மிருக்கின்றனர். யூனன் தேசத்து கீர்த்திவாய்ந்த ஹோமர் என்பார் தாடி வைத்தில்லாத நிலையிலேயே தமது பிரசாரவேலையில் ஜயமடைந்தார். இவரைப்போன்ற இதர ஜயசீலர்களும் தாடியை வெறுத்திருந்து வந்துள்ளனர். மகா சிக்கந்தர், தனது சிப்பாய்களை தாடி சிறைத்துவிடவேண்டுமென வற்புறுத்தி வந்தார். இவர் இங்ஙனம் செய்ததற்கு காரணம் கனீம் என்பான் தாடிவைத்துள்ள ஜனங்களிடமிருந்து தாடிக்காக வரி வசூல் செய்துவந்தான் என்பதாகும். முதல் ஸலீம் என்பாரும் தாடியை அதிருப்தியாகக் கருதி வந்தார். இவர் தம் குடிஜனங்களையும் தாடி சிறைப்பதைப்பற்றி தூண்டி வந்தார்.

தாடி இல்லாதிருந்தால் தங்கள் காரியங்களில் ஜயமடைய முடியாதென உறுதிகொண்டு இதன் கண்ணியத்தால் உலக இராஜீயத்துறையில் பெரிய மாறுதல்களை உண்டுபண்ணிய ஜெயசீலர் இன்னும் எத்தனையோ பேர்கள் சரித்திரத்தில் காணப்படுகின்றனர்.

கம்யூனிஸம் (பொதுவுடமை) இயக்கத்தை ஸ்தாபித்தவரான கார்ல் மார்க்ஸ் என்பாரை கவனிப்போம்; இவரது நண்பரான லாஸால் என்பார் ஸோஷலிஸம் என்னு மியக்கத்தில் இணையற்ற பேரறிஞராயிருந்தார். கார்ல் மார்க்ஸுடைய கண்ணியமும் கீர்த்தியும் பின்னையவருடைய கீர்த்திப் பிரல்யத்தைவிட அதிகமாயிருந்தது. நாம் ஈண்டு கவனிக்க வேண்டியது யாதெனில், இன்னேர் கண்ணியமான முறையில் தாடி வைத்துக்கொண்டிருந்தார்களென்பதே.

தாடியினல் பல்விதமான பிரயோஜனங்களிருக்கின்றன. தாடியின் மத்தியத்தில் முகத்தோற்றமானது அழகானதாகவும் தாழ்மையான சுபாவமுடையதாகவும் காணப்படுகின்றது. இது ஒருபெரிய அற்புத மர்மமல்லவா? தாடியானது சில சமயத்தில் முகமூடியைப் போலும் காணப் படுவதுண்டு. ருஷ்யதேசத்துப் பிரபல மந்திரவாதியாயும் பல ரகஸ்யங்கட்கு உறைவிடமாயுமிருந்த "ராஸ்போட்டன்" என்பானுடைய தாடி முகமூடியைப்போன்று தானிருந்தது. இவனொரு அறிவிலியும் கொடுமைக் காரனுமாயிருந்தா னெனினும், அழகிய தாடியின் வசீகரக் காரணமாக பொது மக்களிடையே பிரசித்திப்பெற்றமதப்போதகனென கருதப்பட்டு வந்தான்.

நிற்க. டால்ஸ்டாய் என்ற மாபெரும் தத்துவ ஞானி தமது தாடியின் மகிமையால் ருஷ்யாதேசத்தில் ஒருமதத்தை உண்டாக்கிவிட்டார். ராஸ்போட்டன் என்பார் தாடியின் மகிமையாலேயே ஒருதலைவராகயிருந்து கொண்டு ஜார் குடும்பத்து ஆட்சியை நிலைக்குலையச் செய்துவிட்டார்.

பண்டைய எகிப்தின் மாயாமோஹினி போலிருந்த இராணி "கிலியோபிட்ரா" என்பவளுக்கு மூக்கு மட்டும் சப்பையாகயிருந்திருந்தால் ரோம அரசாங்கத்துக்கு

அழிவு ஏற்பட்டிராது என்று பல ஜனங்கள் பரிகாசமாய் கூறுவர். இதன் கருத்தாவது, அந்தப் பெண்ணுக்கு மூக்கு சப்பையாக யிருந்திருந்தால், மார்க் அன்தோணி என்ற அதிபன் அவள்மீது காதல்கொண்டிருக்க மாட்டானும்; இன்னும் இவன் தனது ரோம ராஜ்யத்தை விரோதிகளின் எதிர்ப்பு களி னின்றும் எளிதில் தற்காத்துக்கொண்டுமிருப் பானும். இவ்வாறே இன்னொரு விஷயமும் கூறப்படுகிறது. அதாவது:— ராஸ் போட் டனுக்கு தாடிமட்டும் இல்லாதிருந்தால் ஜார் மன்னன்குடும்பத்துக்கு அழிவு ஏற்பட்டிருக் காதாம். ஏனெனின், அவனுக்கு மதிப்பும் செல்வாக்கும் ஏற்பட்டது தாடியினல் தானும்! எனவே தாடியின் மகிமைகளை உற் றுணர்ந்து பாருங்கள். இவ்வளவு கீர்த்தியும் மேன்மையும் அளிக்கக்கூடிய தாடியின் மகி மையை நம்மவர் அறியாது வழுக்க சிறைத்து உருவை மாற்றிக்கொண்டு திரிவதேனே? மேல்கூறப்பட்டவைகளிலிருந்து தாடி வைப் பதின் சிறப்பை நன்குணர்ந்து சிறப்புற்று வாழ்வார்களாக!

மங்கையரின் ஆபரணம் பர்தாவே!

கோஷாமுறை, பெண்கட்கு பாதுகாப்பே யல்லாது சிறைவாசமல்ல!

"எவர் ஆண்டவனுடைய ஹத்தை (வரம்பை)க் கடந்து விடுவரோ அவர் தம்மீதே கொடுமை செய்து கொண்டவராவர்." (குர்ஆன்).

[முஸ்லிம் சமூகப் பெண்களின் கோஷா முறையானது இஸ்லாத்தின் கட்டளையும், மாதர் இனத்துக்கு பற்பல அனுகூலந்தரும் ஆசாரமும், கற்புக்கு அரும்பெரும் பாது காப்பும், பல நல்லொழுக்கத்துக்கு அரணுன கோட்டையுமாகும். இதனை உணர்ந்து ஒழு காமல், நவீன நாகரிகச் சேற்றில் மூழ்கிய ஒரு சிலர், பெண்களின் கோஷாமுறை சிறைவாசம் போன்றதென்றும், பெண்கள் உரிமைகளைப் பறிப்பதென்றும் பிதற்றித் திரிகின்றனர். முஸ்லிம் மாதர்கள் அனுஷ்டிக்கும் பர்தா வழக்கத்தில் எண்ணற்றதத்துவங்களும் அனு கூலங்களும் அடங்கியுள்ளன வென்பதிலைய மில்லை. கோஷாமுறையை அனுஷ்டிக்காத தால் கெட்டழிந்த பெண்களும், இப்பெண் களினுல் ஒழிந்துப்போன அரசியல்களும் அளவிறந்தனவாகும். எனவே ஈண்டு பர்தா அனுஷ்டானத்தின் மாண்புகளையும்அதில்லா விடின் ஏற்படும் தீங்குகளையும்பற்றி சிறிது ஆராய்வோம்:—]

"பெண்களுக்கு அனுகூலமும், சுதந்திர மும், ஆடவரின் அதிக்கிரமப் பிரவேசத்தி னின்று பாதுகாப்பும் அளிக்கவல்ல சாதனம் "பர்தா" வேயாகும். இது சிறைவாசத் தைப்போன்றதென்று கூறுவது சரியன்று: ஒவ்வொரு விஷயத்தையும் சரியானபடி ஆராய்ந்து உண்மையைத் தெரிந்து கொள் ளாமல் அதைப்பற்றி அபிப்பிராயங் கூறு தல் தகாது.

ஐரோப்பியப் பெண்கள் கோஷா ஆசாரம் அனுஷ்டிக்காமல் தங்கள் அழகு சவுந்திரியத் தை பிறர்பால் செலுத்தி மயக்கி ஆசாபாசங் களில் ஈடுபட்டுழலும் அநாகரிகத்தை நல்ல நாகரிகம் என்று கூறுவது அறியாமையே யாகும். ஐரோப்பிய ஜனங்களின் இத்தகைய தவருன வழக்கத்தால் ஆடவர்—பெண்டிர் இருசாராரும் தங்கள் மனதை அடக்கி யாளுதற்கு ஆற்றலின்றி வழிகெட்டுப் போக நேர்கின்றது. பர்தா ஆசாரம் அனுஷ்டிக் காத ஒரு சிலர் இச்சமயமே துன்மார்க் கத்தில் வீழ்ந்து கெடாதிருப்பினும், பின்னர் அவர்களது சந்ததிகளேனும் துராசாரத்தில் வீழ்ந்துக் கெட்டுழல்வார்க ளென்பதில் ஐய மில்லை.

கோஷா முறையை திரஸ்கரித்து மனம் போனபடியலையும் பெண்கள், மாதர் இனத் தின் இயற்கை வரம்பைக் கடந்து செல்பவர் களாவர். இங்ஙனம் பெண்களை இயற்கை யை விட்டு வெளியேறி யலையவிடும் ஆடவர் கள் ரோஷமற்றவர்களென்பதில் சந்தேக

மில்லை. அத்தகைய ஆடவர்களின் மரித்த ரோஷம் இன்றில்லாவிடினும் பிறகேனும் புத்துயிர் பெற்று பெண்களின் எதேச்சாதிகாரத்தை வெறுக்கு மென்பது திண்ணம். இவ்வாருள்ள நல்லாசார புத்துணர்ச்சி ஏற்பட்டால் மேனாட்டுப் பெண்களின் எதேச்சாதிகாரம், தான்தோன்றித்தனம் ஆகியவை யெல்லாம் அழிந் தொழிந்து மண்ணாகிவிடும். தற்கால நிலையை சீர்தூக்கிப்பார்த்து பிற்காலத்தில் இது என்னவாக மாறுபடும் என்பதை தீர்க்காலோசனை செய்யும் அறிவாளிகள் இவ்விஷயங்களை ஏற்றுக் கொள்ளாமலிரார்,

கோஷாவின்மையால் அழிந்த ரோமராஜ்யம்.

பண்டைப்போது உலகத்தில் மிகவன்மைப் பொருந்தியவல்லரசா யிருந்தது ரோம ராஜ்ஜியமேயாகும். ஐரோப்பிய நாட்டார் அக்கால ரோமர்களை கண்டே ஆசாரமும் ஒழுக்கமும் கற்றுக்கெள்ளலானார்கள். ரோம ராஜ்ஜியமானது கிறிஸ்து பிறப்பதற்கு அறுநூறு வருடங்கட்குமுன் ஏற்பட்ட பூர்வீக ராஜ்ஜியமாகும். இது ஆரம்பத்தில் மிகச்சிறிய ராஜ்யமாயிருந்தது ; பிறகு சிறுகச்சிறுக வலுத்து, ஒழுக்காசாரத்திலும், நாகரிகத்திலும், பெண்பாலாரின் அடக்க ஒழுக்க நன்னடத்தையிலும் சிறந்து விளங்கிற்று. அக்காலத்தில் ரோமப் பெண்கள் பிற ஆடவர்களின் திருஷ்டியை விட்டு பர்தாவுக்குள் வைத்து பாதுகாக்கப்பட்டனர். ஆனால் இப்பெண்கள், வீட்டுக்குடித்தன வேலைகள், நூல் நூற்றல், உல்லன் நூல்களை சுத்தப்படுத்தல், பின்னல், துணி நெய்தல் ஆகிய காரியங்களைச் செய்துவந்தார்கள்.

ஒழுங்கான முறையில் பர்தா அனுஷ்டித்துவந்த ரோமானியப் பெண்கள் மருத்துவத்தொழிலும் புரிவர். இத்தகைய பெண்கள் வெளியில் செல்லுங்கால் உயர்ந்த முகமூடியால் தங்கள் முகத்தை மறைத்துக்கொள்வர். அதன்மேல் அழுத்தமான துப்பட்டியொன்றால் கணுக்கால் உட்பட தங்கள் சரீர முழுதையும் மறைத்துக்கொள்வர். இந்த துப்பட்டிமீதுங்கூட சிலர் மேற்மோர்வை போட்டுக்கொள்வதுண்டு. ஆகவே அவர்களது சரீரத்தின் இயற்கைவனப்பு ஒருபக்க விருக்கட்டும், செயற்கை அழகுங்கூட வெளிக்கு தெரியவேமாட்டாது.

ரோம தேசப்பெண்கள் பர்தாவில் இருந்துவந்த வரை அந்தவர்க்கத்தார் பற்பல கலைகள், வித்தைகள், தொழில், கல்வி, ஞானம், சிற்பம், நிர்மாணம், அரசியல், ஆட்சித்திறம், யுத்தம், கீர்த்தி, ஜெயம் யாவற்றிலும் சிறந்து கீர்த்திப்பெற்றிருந்தனர். ரோமர்கள் இங்ஙனம் சகலத்துறையிலும் முன்றேற்றமடைந்து விளங்கிவிடமே அவர்கள் உள்ளத்தில் மமதையும், ஆசாபாச இச்சையும் குடிகொண்டன. வீண் விளையாட்டிலும், மாதரிச்சையிலும், மாற்சரியத்திலும் வீழ்ந்து கண்மூடித்தனமாய் உழலலானார்கள். பெண்கள் பர்தாவினுள்ளிருந்தால் காமாந்தகாரமான ஆசாபாசங்களை பகிரங்கமாய் அனுபவிக்க முடியவில்லையெனக் கருதி பெண்களை பர்தாவை விட்டு வெளியே கொண்டு வரவும், நர்த்தனக் கூடங்கட்கும், ஜனக்கூட்டங்கட்கும், விளையாட்டு மேடைகட்கும், சந்தைச் சாவடிகட்கும் பகிரங்கமாய் அழைத்துச் செல்லவும் தலைப்பட்டார்கள். ‘கட்டிவைத்திருந்த மாடுகளை அவிழ்த்து விட்டால் என்ன நடக்கு’ மென்று சொல்லவும் வேண்டுமோ? அதைப்போல் துராசாரத்தில் மேயவிடப்பட்ட அவிவேகப் பெண்கள் தங்கள் பெண் தன்மை, நாணம்-மடம்-அச்சம்-கற்பு ஆகிய யாவற்றையும் துறந்து எதேச்சாதிகாரம் பூண்டு உழல்வதானார்கள்.

எதேச்சாதிகாரம் பெற்ற ரோமப் பெண்கள் அனாச்சாரங்களில் ஆடவர்களை விட ஒருபடிமேலேறவும், நாட்டியங்களாடவும், அரசாங்க விஷயங்களில் தலையிடவும், இராஜசபைகளில் அங்கம் வகிக்கவும், தேர்தலில் பொதுமக்களிடம் பகிரங்கமாய்ச் சென்று ஒட்டுப் பெறவும் தலைப்பட்டுவிட்டார்கள். பெண்கள் ஆதிக்கத்தில் ஆட்சிமுறை வந்துவிடவே அரசுபரிபாலனம் “மந்தி கரத்தில் கிடைத்த புஷ்பஹாரமே” போலாகிவிட்டது. ரோமப் பெண்களின் அவிவேக அனாச்சார தான்றோன்றித் தனத்தாலேயே அவ்விராஜ்ஜியம் அழிந்தது.

ரோமாபுரிக்கு ஆரம்பத்தில் பெண்களாலேயே கீர்த்தியும் மகிமையும் கிடைத்தன. பின்னர் பெண்களாலேயே அவ்வரசு குலைந்து ஒழிந்து போவதாயிற்று. (இது பெரிய சரித்திரம். சுருங்கக் கூறுமிடத்து, “ஆக்குவதும் பெண்ணே, அழிப்பதும் பெண்ணே”

என்னும் வாக்கு இவ்விஷயத்தில் சரியா யிருக்கிறதல்லவா ?'')

பெண்கள் ஒழுக்கத்தை கெடுப்பவர் யார்?

பெண்கள் கெட்டுவிட்டால் யாவும் கெட்டுப் போகின்றனவென்று கூறப்படுகின்றது. நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு என்னும் அருங்குணங்களை இயற்கையாகவே பெற்று மறைவில் (பர்தாவில்) இருக்க விரும்பும் பெண்களைக் கெடுத்துப் பகிரங்கத்தில் கொண்டுவந்து கெட்டலையச் செய்பவர்யார்? மதி இழந்த ஆடவர்களே யாவர்!

பண்டைய அரசாங்கங்களில் பெண்கள் தலையிட்டு சூழ்ச்சியும், விஷமமும் புரிந்து ராஜ்ஜியத்தை ஒழித்தனர் என்று சரித்திரங்களில் கூறப்படுகின்றது. இதில் ஆடவர்களே உண்மையான குற்றவாளிகளாவர். அரசாங்கத்தைக் குலைக்கச் செய்யவேண்டுமென்ற கெட்டெண்ணங் கொண்டோர் தங்கள் காரியத்தை சாதிப்பதற்கு பெண்களை தகுந்த கருவியாக வைத்துக்கொள்வர். பெண்கள் வாயிலாகவே சூழ்ச்சித் தந்திரம் முதலியன எளிதில் புரிந்து அனர்த்தத்தை விளைவிக்கச்செய்வர்.

இவ்வாறேதான் ஆடவரால் பெண்கள் கோஷா பர்தா வழக்கத்தை விட்டும் வெளியேற்றப்பட்டு ஏதேச்சாதிகாரமளிக்கப்பட்டதினால் ரோமராஜ்ஜியம் அழிந்ததென்பது உண்மை. ஆனால் இதற்குப் பொறுப்பாளிகள் ஆடவர்களேயாவர்.

பிறகு ரோமராஜ்ஜியம் சீர்பெற்றவழி.

பெண்களின் ஏதேச்சாதிகாரத்தாலும், அரசியல் விவகாரத் தலையீட்டாலும் ரோம ராஜ்ஜியம் கெட்டொழியத் தலைப்படவே, ரோமர்கள் தங்கள் அவிவேக மயக்கந்தெளிந்தனர். தங்கள் அரசாங்கம் சீர்குலைந்ததற்கு காரணம் பெண்களின் அடாச்செயல்கள் தான் என்பதை உணர்ந்தனர். உடனே விஷமப் பெண்களை வதைசெய்யவும், ஏதேச்சாதிகாரம்பெற்ற பெண்களை அடக்கவும்,சிங்காரத்தாலும் அழகுசௌந்திரிய மினுக்காலும் ஆடவரை வசப்படுத்தும் பெண்களின் அழகு சிங்காரத்தைக் குலைக்கவும், ஒரு சிறிதும் இரக்கமில்லாமல் பெண்வர்க்கத்தின் மீது அநியாயம் புரிய முற்பட்டனர். (அன்னோர் பெண்களுக்குப்புரிந்த கோரக்காட்சிகளை கூறுவதெனின் ரோமங்கள் சிலிர்த்து விடும்.)

இங்ஙனம் ரோமர்கள் பெண்களை அடக்கி ஒடுக்கி பழைய நிலைக்குக் கொண்டுவரவே அவர்கள் ராஜ்ஜியமும் ஒழுங்குப்பெறுவதாயிற்று. பெண்களின் பர்தா ஆசாரமில்லாத ஏதேச்சாதிகாரத்தால் எத்துணை நாசங்கள் நேரிடுகின்றனவென்பது இதனால் நன்கு விளங்குகிறதல்லவா ?

ஐரோப்பியப் பெண்களும் தற்காலை, சீர்கெட்ட ரோமப் பெண்களைப்போல்தான் காணப்படுகின்றனர். மேனாட்டுப் பெண்கள் ஏதேச்சாதிகாரம் பெற்று விளங்குவதோடல்லாமல், ஆடவரையும் உலகையும் மயக்க என்னென்னவிதமான அனுச்சாரங்கள்—உடைமாற்றங்கள் — சிங்காரங்கள் — நடைமுறைகள் — தந்திரங்கள் முதலியனவெல்லாம் அனுஷ்டித்து வருகின்றனர். ஆகவே இன்னும் சிலகாலத்தில் இவ்வைரோப்பிய வனிதாமணிகளால் உலகுக்கு என்னென்ன தீமைகள் நேரிடப்போகிறதோ தெரியவில்லை. அவ்வித தீமைகள் நேரிட்ட பின்னர் தான் இக்கால ஐரோப்பியரும்—இவர்களது நவ நாகரிகத்தைப் பின்பற்றும் இதரநாட்டவரும்—பண்டைய ரோமர்களைப் போல் நல்லுணர்ச்சிப் பெற்று, தங்கள் மாதர்களை கோஷாவுக்குள் வைத்து பெண்ணினத்தைப் பாதுகாப்பர் போலும் !

முஸ்லிம் பெண்களின் பர்தா.

ரோமப் பெண்கள் கெட்டழிந்ததைப் போலும், ஐரோப்பியப் பெண்கள் கெட்டழிவதைப்போலும் நம் முஸ்லிம் பெண்மணிகள் கெட்டழியாமல் பாதுகாப்பது, பரிசுத்த இஸ்லாமிய பர்தா-கோஷா முறையேயாகும். கோஷா அனுஷ்டிக்கும் நம் இஸ்லாமிய வனிதாமணிகள் ரோமப் பெண்களைப்போல் கெட்டுப்போவதுமில்லை; பின்னர் கொடுமைக்கும் படுகொலைக்கும் அடக்கு முறைக்கும் ஆளாகப்போவதுமில்லை. பரிசுத்த இஸ்லாம் மதமானது பெண்களை தனது அரும் பெரும் தத்துவங்களும், பிரயோஜனங்களும் நிறைந்த சிறந்த ஆசாரத்தினால் பாதுகாத்து வருகின்றது. அந்த ஆசாரம் எது வெனில் "புனிதமான கோஷாவே" யாகும். முஸ்லிமாகப் பிறந்த ஒவ்வொருபெண்ணின் உள்ளத்திலும் கோஷா அனுஷ்டான ஆசாரமானது பசு

மரத்தாணிபோல் பதிந்து, அவர்களது உள்ளம் புறம் இரண்டையும் பரிசுத்தப்படுத்தி பதிவிரதைகளாகச் செய்து விடுகின்றது.

உண்மையான முஸ்லிம்கள் எவரும் புனிதமான கோஷா பர்தா முறையை எதிர்க்கவே மாட்டார்கள். ஆனால் சன்மார்க்கப்பற்றற்றவர்களும், மதப்பிரஷ்டர்களும் தான் ஒருகால் எதிர்ப்பு புரியலாம். இவர்களின் விஷமக் கூற்றுகளையும் தீய பிரசாரங்களையும் அடக்கி நம் இஸ்லாமிய கோஷா முறையை மேன்மேலும் ஓங்கச்செய்வது உண்மை முஸ்லிம்களின் கடமையாகும்.

சென்ற பதின்மூன்றரை யாண்டுகளாக புனித பர்தா ஆசாரத்தால் நம் முஸ்லிம் பெண்கள் கற்பும், குணமும், ஒழுக்கமும், பாதுகாக்கப்பட்டுவருதற்கு மூலாதாரமாகவுள்ள இஸ்லாத்தின் மகிமைதானென்னே! ஆகவே பெண்மணிகளை பிற ஆடவர்களின் காமாந்தகாரக்கிருத்தியங்களினின்று பாதுகாத்து புனிதமாக்கும் அரும்பெரும் சாதனம் "பர்தா—கோஷா முறையே யல்லாது வேறொன்றுமில்லை. பர்தாவின்மையால் மேனாட்டு ஐரோப்பிய பெண்கள் ஆடவர்கள் ஆகிய இருசாராரிடையேயும் நேரிடும் அனாச்சார ஆசாபாசச் சீர்கேடுகளை நாம் நித்தம் கண்டும் கேட்டும் வருகின்றோமன்றோ? எனவே இவ்வாறுள்ள அரும் பெரும் புனிதத்தன்மையும், மகிமையும், சீரும் சிறப்பும் மிக்க "கோஷாபர்தா" முறையை எடுத்துத்தெறிந்து பெண்களை தம்முடன் வெளியே இழுத்துத்திரியவேண்டுமென்று வீண் பிரயத்தனப்படுவோரை என்னென்று கூறுவது?

பெண்களை பாதுகாக்கும் சாதனம்.

இயற்கையாகவே பெண்கள் சீரிய குணமும், நாணும் தன்மையும், அன்னியர்முன்வர வெட்கப்படும் சுபாவமும், தூய்மையான எண்ணமும், நன்மை செய்யும் சிந்தையும் உடையவராவர். நற்குணத்திலும், சத்தொழுக்கத்திலும் அன்பு விசுவாசத்திலும், ஆடவர்களைக்காட்டினும் பெண்களே பன்மடங்கு சிறந்தவர்களாவர். பெண்களுடைய தன்மைகளில் மிகமிக உயர்ந்து விலைமதிக்கொணாதது "கற்பு" என்னும் ஆபரணமேயாகும். பெண்களின் மானம் ஆடவரின் மானத்தை காட்டினும் மிகத்தூய்மை வாய்ந்ததாகும். ஆகவே பெண்மணிகளை பர்தாவுக்குள் வைத்து அவர்களது கற்பு, மானம், குணம், ஒழுக்கம் முதலியவைகளை பாதுகாக்கவேண்டியது ஆடவர்களின் கடமையாகும். பெண்கள் பார்த்தாவுக்குள் பாதுகாக்கப்படாமல் வெளியே எதேச்சையாய் அவிழ்த்து விடப்பட்டுவிடுவார்களாயின், அன்னிய ஆடவர்களின் விஷமச்செயலாலும் தகாதகாரியத்தாலும் கெடுதி விளைவிக்கப்பட்டு கற்பு, மானம் குணம் யாவும் குலைந்து போமென்பது திண்ணம்.

பெண்கள் சுயமே மானமிழந்து கற்புக் குலைந்து கெட்டுப்போவதுகிடையாது. பெண்களை ஏமாற்றி வஞ்சித்து கற்பையும் மானத்தையும் கெடுப்பவர் துர்நடத்தையுள்ள ஆடவர்களே யாவார்கள். எத்தனையோ ஆடவர் வெளிக்கு உத்தமர்களாக இருந்துகொண்டு அந்தரங்கத்தில் பிற பெண்களை கெடுக்கும் லோலர்களாயிருக்கின்றனர். ஆகவேபிற ஆடவர்களுடன் எதிர்த்துப் போராடாமல், சாத்வீக முறையில் நம் பெண்களை பாதுகாத்துக் கொள்ளும் முறையானது எது? அதுதான் இஸ்லாம் மதப்போதனைப்படி நம் முஸ்லிம்கள் முன் ஆலோசனையுடன் பல்லாயிரம் ஆண்டுகளாக அனுஷ்டித்துவரும் கோஷா-பர்தாவாகும்.

குடும்பவாழ்க்கையில் பெண்மணிகளின் பதிவிரதாத்தன்மையை பாதுகாக்கும் சாதனம் "பர்தா"வை விட சிறந்தது வேறெதுவுமே கிடையாதென்று அறிஞர்கள் கூறியுள்ளனர்.

இஸ்லாமிய கோஷாவின் கருத்து.

முஸ்லிம்கள் தங்கள் மனைவிகளை பூட்டி சிறையில் வைக்கவேண்டுமென்றோ, அல்லது கேவலப்படுத்தி அடக்கி ஒடுக்கவேண்டுமென்றோ, அல்லது இதைப்போன்ற வேறு இழிவான எண்ணத்தை கொண்டோ பர்தாவுக்குள் பெண்களை வைப்பதில்லை. ஆனால், அப் பெண்மணிகளின் நடவடிக்கைகளை தூய்மைப்படுத்தவும், அன்னிய மூர்க்க ஆடவர்களின் பிடியினின்றும் பாதுகாக்கவும், பெண்களின் மானம் கற்பு முதலியவற்றை அழியாமல் நிலைநிறுத்தவுமேதான் பர்தா அனுஷ்டிக்கப்படுகின்றது. எனவே முஸ்லிம் பெண்ணொருவள் எத்துணைக்கெத்துணை பூர்ணமான பர்தா அனுஷ்டிப்பாளோ,

அவள் அத்துணைக்கத்துணை தூய்மையும், பதிவிரதாத்தன்மையும், மதப்பற்றும், பக்தியுமுடையவளாவாள். பர்தாவைவிட்டு வெளியேறி மூர்க்கத்தனமாய் அலைந்து திரியும் பெண்கள் அதற்கேற்ப துர்க்கிருத்தியமும், மாசுபட்டமனமும், இழிகுணமும் உடையவர்களாய் விளங்குவர்.

பெண்மைக்கு கண்ணியமும் புண்ணியமும் அளிக்கவல்லது பர்தா தான். தன்மானத்தையும், கற்பையும் காத்துக்கொள்ள விரும்பும் பெண்கள் எவர்களாயிருப்பினும் அன்னோர் பர்தா அனுஷ்டித்துத்தான் தீரவேண்டும். இதுதான் பெண்கட்கு பாதுகாப்பாகும். இதுவே ஆசாரசீர்திரித்தமாகும். வெளியே சென்று ஒழுக்கங்கெட்டு நவீனக் கல்விகற்றுக்கொள்வதைக் காட்டினும், வீட்டுக்குள் பர்தாவில் இருந்து நல்லவிதமாய் சன்மார்க்க கல்விகற்பது சிலாக்கியமல்லவா? 'பதிவிரதைக் கழகு பர்த்தாவிலிருத்தல்' என்பதே ஈண்டு முடிவான விஷயமாகும். ஆகவே, பர்தாவை அனுஷ்டித்து இகபர ஜயம் பெற்றுய்வார்களாக!

மதியின் மணியே மைதீனே!

(அபுல் ஹஸன் மதராஸீ)

விபரீத அறிவு படைத்த அருமைத் தம்பி! இதுபொழுதுதான் கும்பகர்ண தூக்கத்தை விட்டு விழித்தாய்போலும்! யான் வெள்ளைத் தாள்களை கருப்பாக்கி ஹி. இ. ல். பிரசுரிக்கச் செய்வதாக என்மீது குற்றம் கண்டுபிடிக்க முயன்ற நீராவது அங்ஙனம் செய்யாது வெள்ளேட்டை வெண்மையாகவே வைத்திருக்கலாகாதா? தா. இ. ஆசிரியர்களின் கல்வித் திறமையிலும் வசன நடையிலும் குற்றங் கண்டுபிடிப்பதே என்வேலை என்று சொன்ன நீர், என் அருமை வியாசத்திலேயே "கோழி" வேலை செய்திருப்பது விந்தைக்குரியதல்லவா? இதரர்களைக் குறைகூற முன்வருவோர் தாமாகிலும் அவ்விதக் குற்றத்திற்கு உடன்படாதிருக்க முயற்சிக்க வேண்டாமா? தம்பி! இது உனக்கு புலனாகாமற்போனதேனோ? என்னே நின் புத்தியின் நுட்பம்! மதியின் துலக்கம்!! மூளையின் தெளிவு!!! உன் மூளை விளக்கத்தின் பேச்சு எழுந்தவுடன் அதினுதித்த வேறு ஒரு விஷயத்தைப்பற்றி இங்கு குறிப்பிட நேரிடுகிறது. மதியின் மணியே! நான் சிலைவணக்க விஷயமாய் எழுதிய வியாசம் சென்ற மேமாத ஹி.இ-ல் வெளிவந்திருக்கிறது. அதற்கு இதுபொழுது அக்டோபர் 16-ம் தேதி தா. இ-ல் என்னென்னவோ உளறிக்கொட்டி நீயும் ஒரு கண்டனம் வரைந்திருக்கின்றாய் என்பதை இதரர்களுக்கு காண்பிப்பதற்காக வெள்ளி மலரை கருப்பாக்கி விட்டிருக்கிறீர்போலும்! ஆறுமாதம் சிந்தனை செய்து பெற்றுக்கொண்ட பலன் இதுதானோ? இதனை சிந்தித்துத் தெரிந்துகொண்ட மூளையின் விளக்கமே விளக்கம்!

என் அன்பே!

என்மீது குற்றங்கண்டு பிடித்து வசை புராணம் தொடுப்பதற்காக ஆறுமாத காலம் அருங்கஷ்டப்பட்டு புத்தியைச் செலுத்தி யோசனை செய்து தா. இ. க்கு எழுதி அனுப்பிய லிகிதத்தில் அருத்தமும் பொருத்தமுமற்ற அபாண்ட குற்றச்சாட்டுகள் காணப்படுகின்றனவேயன்றி, அர்த்த புஷ்டியுள்ள நியாயதோரணைகள் ஒன்றுமே காணப்படாமலிருப்பதுதான் விந்தைக்குரியதாகும். "இஸ்லாத்தில் புனித புத்திக்கு வேலையில்லை என்பதுதான் இவர் போன்றாரின் கொள்கையாயிற்றே!" என அபாண்டமாய்க் கூறி விதண்டாவாதம் செய்கின்றீர். அவ்வாறு இஸ்லாத்தில் புத்திக்கு வேலையில்லை என்று எவரேனும் சொல்வாரா? நம் தூய்மை இஸ்லாம் மார்க்கமானது பகுத்தறிவுக்கு ஒத்த மதமென ஹி. இ, ஸை. இ. ல் எத்தனையோ அறிஞர்களின் கட்டுரைகள் வெளிவந்திருப்பது உமக்கு தென்படாது போனதேனோ? முழு பூசனிக்காயையும் சோற்றில் அமுக்க பார்த்த கதைக்கல்லவோ இஃது ஒத்தமைந்

திருக்கிறது! நீர் கூறுவதுபோல் அற்ப சொற்ப புத்தியுள்ளவரெவரும் இவ்விதம் ஒருக்காலும் கூறமாட்டாரென்பது திண்ணம். மனித புத்திக்கு ஒத்தமைந்ததும், அறிவு வளர்ச்சிக்கு ஆதாரமானதுமான மதம் நம் துய்மைவாய்ந்த இஸ்லாமென்றே பல மேதாவிகள் வெளியிட்டுக் கூறியிருக்கின்றார்களென்பது உமக்கு புலனாகாது போனதேனோ?

அறிவு வளர்ச்சிக்கான புத்தகங்கள் எழுதி வெளியிட வேண்டியது அவசியந்தான். அதற்காக தப்புத்தவறுமானதும் மார்க்க முரணானதுமாகிய கிரந்தங்களை மொழிபெயர்த்து—"ஈயடித்தான் காப்பி" போல தர்ஜுமா செய்து வெளியிடலாமா? அவ்வாறு வெளியிடுவதில் இழைத்த தவறை எடுத்துக்காண்பிப்பது குற்றமாகுமோ? தவிர தவறை எடுத்து காண்பிக்கப்படின் அதைத் திருத்தி அமைத்து விடுவதாகச் சொல்லி ஒப்புக்கொள்வது விவேகமாகுமேயன்றி குதர்க்க வாதம் புரிவது விவேகமான காரியமாக மாட்டாது. ஆனல் ஒருசமயம் தான் இழைத்த தவறை திருத்தி அமைத்து விடுவதாகச் சொல்லி பிறகு அது குற்றமாகாதென்று கூறி முரண்பட சமயோசிதமாய் கூறிவிடுவது விவேகிகளின் செயலாகுமோ? இழைத்த தவறுகளை எடுத்துக் காண் பித்துத் திருத்தச் செய்வது ஒவ்வொரு முஸ்லிமின் மீதுள்ள முக்கிய கடமை என்பதை நீர் அறியாமல்போனதேனோ? அவ்வாறிழைத்த தவறுகளைவெளிப்படுத்தி நம்முஸ்லிம்சமூகம் அதை விட்டுத்தவிழ்ந்து நடக்குமாறு செய்யாவிடின் நமது சமூகத்திற்கே பெரும் கேட்டை விளைவித்தவர்களாகவன்றோ ஆய்விடுவோம்! சங்கவித்வானுயின் எல்லாம் சுயமே ஏற்பட்டுமார்க்க விளக்கமும் உண்டாய்விடுமென்று எதிர்பார்ப்பது மதியீனமன்றோ? சங்க வித்துவானுயிருப்பதற்கும் மார்க்கத்தை அறிந்துகொள்வதற்குமிடையில் பெரும் வித்தியாசமிருக்கிறது. வித்வான்கள் மார்க்க விஷயமாய் சொல்வதெல்லாம் (அவர்கள் மார்க்கவிஷயம் தெரியாமலிருக்கும் நிலைமையில்) முற்றும் உண்மையானதென்று எவ்வாறு கூறமுடியும்? மார்க்கமறியா ஒரு சிலர் அவ்வாறு நினைத்து மதிமயங்கி உழன்றுலும்விவேகிகள் ஒருக்காலும் அவ்வாறு எண்ணிக்கொள்ளமாட்டார்கள்.

இனி சிலைவணக்க விஷயமாய் நான்வரைந்துள்ள விஷயங்களை முன்பின் பாராமல் பூசனிக்காய் திருடச் சென்றவன் கூறையினின்று கீழே விழுந்தவுடன் கண்களை விழித்து இதுதானு பூலோகமென்று கேட்டாற்போல் நம் தம்பியும் கண்ணைத் துடைத்துக் கொண்டு, "பாராட்டுவார்கள்" என்ற வார்த்தைக்குமட்டும் "வணங்கச் சொல்கிறுர்" என்று நான் வியாக்கியானம் செய்திருப்பதாக கூறுவது விந்தைக்குரியதல்லவா? என் வியாசத்தில் உருவச்சிலை பாராட்டுதலைப்பற்றி கூறப்பட்டிருக்கிறதே யல்லாது "பாராட்டுதல்" என்ற வார்த்தைக்கு மட்டில் பொருள் கூறப்படவில்லை என்பதை சிற்றறிவு படைத்த எச்சாமான்னியருக்கும் புலனாகாமற் போகா. ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொன்றுடன் சேர்த்து ஒழுங்காக இடத்திற்கு தக்க கருத்தமைக்கவேண்டுமே யல்லாது ஒரேவித பொருள் கொள்வது பொருத்தமுடைய தாகாது. "பாராட்டுதல்" என்ற வார்த்தைக்கு பல பொருள்களிருப்பினும் "உருவச்சிலையை பாராட்டுவார்கள்" என்பதற்கு நான் கூறியதைத் தவிர்த்து வேறு யாது கருத்து வைத்துக்கொள்ள முடியும்? "உருவச்சிலை" என்று கூறுமல் "பாராட்டுவார்கள்" என்ற வாக்கியம் மட்டில் கூறப்பட்டிருப்பின் மதியின் மணி கூறியவாறு ஒருக்கால் பல கருத்துகளுக்கு இடங்கொடுக்கும். அஃதின்றி உருவச்சிலையுடன் சேர்த்து கூறப்பட்டிருக்கும் நிலைமையில் வேறு எவ்வித கருத்தும் அந்த இடத்திற்கு பொருந்தாதென்பது திண்ணம். இஃது என் தம்பிக்கு புலனாகாமற் போனதேனோ? பா தா. எழுதியதலையங்கத்தில் கண்டிக்கத் தக்க விஷயம் பகிரங்கமாக காணப்படுவதால் தான் அஃது கண்டிக்கப்பட்டிருக்கிறது.

யாராகிலும் ஒரு வியாசம் எழுதி வெளியிடுவாராயின், அவ்வியாசத்தினின்று வெளிப்படையாக எது தோன்றுமோ அதுதான் அதன் கருத்து என்று யூகித்துக்கொள்ள வேண்டுமேயன்றி, பொது விளக்கத்திற்கு முரணுக அவ்வியாசத்தை எழுதியோரின் நோக்கம் யாதாக யிருக்கவேண்டும்? என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்யவோ, அன்றி நெஞ்சைப் பிளந்து பார்க்கவோ அவசியமில்லை.

மேலே கூறப்பட்டுள்ள விபரங்களை அறிந்த பின்னரேனும் 41 கண்ணோட்டக் காரர்கள் "பாராட்டுவார்கள்" என்று கூறியதின் கருத்து இன்னதென என் மதியின்மணி நன்கு தெரிந்துகொள்வாராக.

ஹி. இ. ல் "குர்பானி செய்யப்படும் பிராணியின்று பூமியில் விழும் ஒருதுளி இரத்தத்தின் காரணமாக அடியான்செய்த பாவங்களனைத்தையும் ஆண்டவன் மன்னித்து விடுகின்றான்" என்று கூறப்பட்டிருப்பதில் "பாவங்கள் அனைத்தையும்" என்ற வார்த்தையை மட்டும் எடுத்துக்கொண்டு எவ்வாறு விவாதிப்பது? அதற்குமட்டும் தனிக்கருத்து ஏதேனுமிருப்பதாக யாரும் யூகிக்கமுடியுமா? குறிப்பிட்ட ஒன்றைமட்டில் நிறைவேற்றிவிட்டு மார்க்கத்திலுள்ள இதர கடமைகளைப் புரியாமலிருக்கும் நிலைமையில் சுவர்க்கம் புகுந்துவிடலாமென்று எந்த முஸ்லிமும் கூறத்துணிவானோ? தூய்மை பொருந்திய நம் மார்க்கத்தில் ஒரு விஷயத்தைப்பற்றி குறிப்பிட்டு அதைச் செய்வதானல் இன்ன நன்மை கிடைக்குமென்று கூறப்படின் அதுதவிர உள்ளமற்ற கடமைகளை நிறைவேற்றாமல் விட்டுவிட்டு, குறிப்பிட்ட விஷயத்தை மட்டில் நிறைவேற்றினால் அதன் பலன் கிட்டாதென்பது நம் தூய்மை மார்க்கத்தின் சித்தாந்த மென்பதை மதியின்மணி உணராமல் பிதற்றியிருப்பதுதான் விந்தைக்குரியதாகும்.

எவனொருவன் "லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி" என்று சொல்வானாகில் அவன் சுவனபதியடைவானென்று தூய்மையான ஹதீதுஷரீபில் கூறப்பட்டிருப்பதனால், இதுதவிர உள்ள மார்க்க கடமைகளாகிய தொழுகை, நோம்பு, ஜகாத், ஹஜ்ஜு முதலிய கடமைகளைச் செய்யாமல் யாராகிலும் சுவனபதி அடைந்து விடுவரென்று எந்த மந்தபுத்திக்காரனும் கூற முற்படுவானா? ஆதலின், அந்த ஹதீதின் கருத்தாவது கலிமாச்சொல்வதுடன் மற்ற மார்க்கக்கடமைகளையும் நிறைவேற்ற வேண்டுமென்பதாகுமென்று மார்க்க நிபுணர்கள் கூறியிருப்பது தம்பிக்குத் தென்படாதுபோனது ஆச்சரியப்படத்தக்கதேயாகும். என் நண்பர் அப்துல் ஜப்பார் ஆராய்ச்சி மேடையின் கீழ் தவற்றுப் பல்லவி பாடியிருப்தாகக் கூறுகின்றீர். அம்மேடையில் பா. தா. இழைத்த தவறுகள் எடுத்துக் காட்டப்பட்டிருப்பதை தாம் நன்குதெரிந்து கொள்ளவில்லைபோலும். அதில் நமது தூய்மைமார்க்கத்தில் (ஹராமாக்கப்பட்ட) விலக்கலான ஓர் விஷயத்தை முஸ்லிம்கள் புரியலாமென்று மார்க்கத்தை புரட்டிக் கூறப்பட்டிருப்பதை எடுத்துக் கண்டிக்கப்பட்டிருப்பது உனக்கு புலனாகவில்லை போலும்! அவ்வாறு தெரிந்துகொள்ளாதது உன் காமாலைக்கண்ணின் தவறேயல்லாது, அதை விளக்கிக்காண்பித்த என் நண்பருடைய குற்றமாகாதென்பது திண்ணம். இனியாகிலும் இவ்வாறு குதர்க்க வாதம் புரியாமல் உண்மையைத் தெரிந்து நேர்வழியைப் பற்றிப் பிடித்துக்கொள்வாயாக! இன்றேல்....

சர்வகட்சி மகாநாடு.

தற்போது இரண்டாம் முறையாக கூடியிருக்கும் லண்டன் சர்வகட்சி மகாநாட்டின் நடவடிக்கைகளைப்பற்றி இந்தியர்கள் மட்டுமின்றி முழு உலகினரும் மிக்க ஊக்கத்தோடு கவனித்துவருகிறார்களென்பது வெள்ளிடை. இந்தியர்களின் வருங்கால அரசியல் திட்டத்தை எவ்வாறு நிர்ணயிப்பது என்பதை முடிவு செய்வதற்காகத்தான் அம்மகாநாடு கூட்டப்பட்டிருக்கிறது. நம் முஸ்லிம் சமூகத்தினர் தாங்கள் பெறவேண்டிய கோரிக்கை விஷயத்தில் ஏற்கெனவே தீர்மானித்த அபிப்பிராயத்தின்மீதே அனைவரும் ஏகோபித்த அபிப்பிராயமுடையவர்களாக இருந்துவருகின்றனரென்பது வெளிப்படை. இந்தியாவிலிருந்து சென்ற பிரதிநிதிகள் பாரிஸில் கூடி ஆலோசித்ததில் முதலாவதாக சிறுபான்மை கமிட்டி கூடி வகுப்புப்பிரச்சினையையும், சிறுபான்மை பெரும்பான்மை சமூகத்தினர்க்கிடையேயுள்ள அபிப்பிராய பேதங்களையும் ஒழித்து முஸ்லிம்களது கோரிக்கைகள் ஒப்

புக்கொள்ளப்பட்டு, ஒரு சமரஸமேற்படாத வரை சமஷ்டி அரசியலமைப்பு கமிட்டி கூட்டத்தில் முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்துகொள்வதில்லையென்றும் அக்கூட்டத்தை பகிஷ்கரிப்பதென்றும் முடிவுசெய்தனர். ஆனது பற்றி சிறுபான்மைக் கமிட்டியினர் ஒரு சமரச முடிவுக்கு வருவதற்கு முன் சமஷ்டிக் கமிட்டி கூட்டத்தில் சிறுபான்மை, பெரும்பான்மையினரின் பிரச்சினையைப்பற்றி விவாதிக்கக்கூடாதென்று முதன் மந்திரியிடம் கனம் எச். எச். ஆகாகான் மூலம் முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவித்துக்கொண்டார்கள்.

பிறகு நம் தலைவர்கள் ஆங்குசென்றவுடன் சமஷ்டி கமிட்டியின் கூட்டம் நடைபெற வேண்டுமென்றும் வகுப்பு பிரசினை விஷயமாக உள்ள யாதொரு விவாதத்தையும் அதில் எடுத்துக் கொள்ளகூடாதெனவும் முடிவுசெய்யப்பட்டு அவ்வாறே சமஷ்டிக் கூட்டம் ஒருவாரம்வரை நடைபெற்றது. அதில் யாதொருமுடிவும் ஏற்படவில்லை. ஆனால் தாங்கள் கொடுக்கப்போகிறது இன்னதென பட்டவர்த்தனமாக தெரிவித்துவிட வேண்டும், அப்பொழுதுதான் நாங்கள் மகாநாட்டின் நடவடிக்கையில் நல்லமுறையில் கலந்துகொள்ள முடியுமென்று காந்திஜீ கூறினர். அத்துடன் அது ஒத்திவைக்கப்பட்டது.

பிறகு இந்தியா மந்திரி ராம்ஸே மக்டனல்டு அவர்களின் தலைமையின்கீழ்சிறுபான்மைக்கமிட்டியின் கூட்டம் நடைபெற்றது.

ஹிந்து முஸ்லிம் பிரசினை

முகவுரைக்குப் பின் அவர் கூறியதன் சாரமாவது:—

சகல சமூகத்தினரிடையே சமரஸம் ஏற்படுவதை யாவரும் விரும்புகின்றனர். இதற்காக இந்திய தலைவர்கள் பெரும்பாடுபட்டு வருகின்றனர். இவ்வாறே இந்தியர் எல்லோரிடையும் சமரஸம் ஏற்படவேண்டுமென்பதே தற்போதிய லக்ஷியமாகும். ஹிந்துக்களையோ, முஸ்லிம்களையோ சீக்கியர்களையோ நான் வெறுக்கவில்லை. அவ்வாறே நீங்களும் எங்களைவெறுக்கவில்லை. இந்தியருள் பல பிணக்கு உண்டென்பது வாஸ்தவம். இதையேமுதலில் யோசிக்க வேண்டும். இப்பிணக்குகளை உங்களுக்குள்ளயே தீர்த்துக் கொள்வது மிக சிலாக்கியமாகும். இதில் சர்க்காரின் பஞ்சாயத்து வேண்டுவதில்லை. சர்க்காருடைய நிர்வாகத்தில் சமரஸத்தைக் கோரினும் அதற்கு ஒருவழி காட்டுகிறேன். இச்சமரசம் இந்தியர் யாவருக்கும் நன்மையானதாயிருக்கும். இதற்காக சிரத்தையுடன் நாங்கள் பாடு படுவோம்.

ஆகாகான்:—அவர்கள் எழுந்து, இரவைக்கு சமரஸ விஷயமாய் யானும் காந்திஜீயும் பேசுவோம். அதன் முடிவு தெரியும் வாரை விவாதத்தை நிறுத்திவைக்கலாம் என்று கூறினர்கள்.

அவ்வறே அன்றிரவு காந்திஜீ, ஆகாகான், வட்டமேஜை மகாநாட்டைச்சேர்ந்த இதர முஸ்லிம் பிரதிநிதிகள் யாவருக்கிடையில் வகுப்பு பிரச்சினை விஷயமாய் இரண்டு மணி நேரம் பேச்சு நடைபெற்று யாதொரு முடிவுக்கும் வராமலேபோய்விட்டது. மறுபடியும் சிறுபான்மையோர்மகாநாடுஆரம்பமாயிற்று. அதில் காந்திஜீ கூறிய அபிப்பிராயம் அனைத்தையும் பிரதிநிதிகள் யாவரும் மறுத்துவிட்டனர். சிறு பான்மை கமிட்டி முடிவு பெறுமல் பெடரல் கமிட்டி கூட்டம் நடைபெறக் கூடாதென்று காந்திஜீதவிர மற்ற யாவரும் அபிப்பிராயப்பட்டனர்.

அதன் நடவடிக்கையில் காந்திஜீ பேசுகையில் இக்கூட்டத்தில் ஒரு சமரஸம் ஏற்படாமைக்கு தான் வருந்துவதாகவும், நாம் எந்த கட்சியின் பிரதிநிதி என்று கூறிக்கொண்டு இங்கு உட்கார்ந்திருக்கிறோமோ அக்கட்சியினரால் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளென்று கூறமுடியாது. சர்க்காரால் நியமிக்கப்பட்டு, நாம் இங்கு வந்திருக்கிறோம். நாம் சமரஸ முடிவுக்கு வருவதற்கு யார் இங்கிருக்கவேண்டியது அவசியமோ அவர்களும் இம்மகாநாட்டில்இடம் பெற்றிருக்கவில்லை. இக்கூட்டத்தை கூட்ட அவசியமில்லாத நேரத்தில் இதைக் கூட்டியிருக்கிறார்கள். இதில் எத்தகைய நலனுமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நான் இந்த விவாதங்களிலெல்லாம் கலந்து கொள்வதின் முக்கிய காரணம், நான் காங்கிரஸ் பிரதிநிதியாக இருப்பதேயாகும். ஆதலால் காங்கிரஸின் நிலைமையை நான் தெளிவுபட எடுத்துக்காண்பித்துவிட வேண்டியிருக்கிறது என்று கூறினர்.

ஸர் ஷபியின் பேச்சு.

இக்கமிட்டி கூடிப்பேசி பயன்படாது முடிவடைந்து விட்டதைக்குறித்து காந்திஜீ

வெட்கமடைவதைவிட அதிகமாக இக்கமிட்டியிலுள்ள ஒவ்வொருவரும் வருந்துவார்களென்றே நம்புகிறேன். சமரஸம் முறிந்ததற்கு இந்திய பிரதிநிதிகளின் அமைப்பே காரணமென்றும், அப்பிரதிநிதிகள் யாவரும் சர்க்காரால் நியமிக்கப்பட்டவர்களேயன்றி ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளல்லவென்றும் காந்திஜீ கூறினார். இவர் இவ்வாறு கூறியதை நான் ஆக்ஷேபிக்கின்றேன். இந்தியாவில் நான்கு முக்கிய அரசியல் கட்சிகளேயிருக்கின்றனவென்பதை கமிட்டியாருக்கு ஞாபகமூட்டுகிறேன். இந்தியகாங்கிரஸ், ஹிந்து மகாசபை, மிதவாதிகள் கட்சி, முஸ்லிம் சமூகம் ஆகிய நான்குமே முக்கிய கட்சிகளாகும். காந்திஜீ காங்கிரஸின் ஏகப் பிந்திநிதியாகையால் காங்கிரஸ் அவர் மூலம் முழுபிரதிநிதித்துவத்தையும் பெற்றிருக்கிறது. ஹிந்துமகாசபையின் தலைவர் டாக்டர் மூஞ்சே, ராஜா நாகேந்திரநாதர் முதலியோரு மிருக்கின்றனர். மிதவாதிகளின் முக்கியஸ்தர்களும் இங்கு பிரதிநிதியாக இருக்கின்றனர். முஸ்லிம் சமூகம் சம்பந்தபட்டவரை கிலாபத் மகாநாடு, முஸ்லிம் லீக், முஸ்லிம் மகாநாடு முதலியவைகளின் தலைவர்களும் நிர்வாகிகளும் இங்கிருக்கின்றனர். ஆதலால் இங்குவந்திருக்கும் பிரதிநிதிகள் யாவரும் சர்க்காரால் நியமிக்கப்பட்டவர்கள்தாமென்று கூறுவது பொருத்தமற்றதாகும். சகல அரசியல் கமிட்டி தலைவர்களும் இம்மகா நாட்டில் பிரதிநிதிகளாகயிருக்கின்றனர். ஆகவே இங்குகூடியுள்ள அங்கத்தினர்கள் யாவரும் இந்தியாவிலுள்ள பலவகுப்புகளின் உண்மையான பிரதிநிதிகளென்று வற்புறுத்திக் கூறுவேன். முதலில் வகுப்பு பிரசினை தீராதவரை இந்தியாவிற்கு எவ்வித அரசியல் அமைப்பையும் திட்டம் செய்யமுடியாதென்ற உண்மையை காந்திஜீ மறந்துவிட்டார்போலும். ஆதலின் சமூக விசாரத்தைத் தீர்க்காமல் அரசியல் திட்டத்தை தயாரிப்பது முடியாத காரியமாகும்.

காங்கிரஸ் தீர்மானத்தைப்பற்றி காந்திஜீ குறிப்பிட்டார் ஏற்கனவே நேரு ரிபோர்ட்டுக்கு நேர்ந்த கதியே இதற்கும் நேர்ந்துவிட்டது என்றுதான் நான் கூறுவேன். பாஞ்சாலத்திலுள்ள ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சீக்கியர்களும் இதை அங்கீகரிக்க மறுத்து நிராகரித்து தள்ளிவிட்டனர். ஆகவே அதைக்குறித்து இனி இங்கு யோசிப்பதில் யாதொருபயனுமில்லை. இந்த சமரச முறிவிற்குப்பின் நமக்கு ஒரே ஒரு வழிதானிருக்கிறது. அதாவது, இக்கமிட்டி தனது வேலையை மேலே நடத்திச் செல்லவேண்டியதேயாகும். மைனர்ட்டி கூட்டத்தில் முடிவு செய்யவேண்டிய வேலைபாக்கியிருக்க, ஐக்கிய அரசியல் கமிட்டியின் வேலைகளை நடத்திக்கொண்டு போவதென்பது முடியாத காரியமென்பதே எங்கள் அபிப்பிராயமாகும். ஆகையால் எவ்வகையிலும் கமிட்டியை ஒத்திவைக்கும் யோசனையை எவரும் ஆதரிக்கவில்லை என்று கூறி முடித்தார். இதற்குபின் ஸர் ஏ. பி. பத்ரோ, டாக்டர் அம்பேத்கார், ஸ்ரீமான் பன்னீர்செல்வம், ஸர்தார் உஜ்ஜல்சிங் முதலியவர்கள் பேசினார்கள்.

பிரதம மந்திரியின் பேச்சு

மிஸ்டர் ராம்ஸே மெக்டோனால்டு கடசியாக பேசியதின் சாராம்சமாவது:—தற்பொழுது சமூக சமரசத்தை ஒட்டியவைகளெல்லாம் தலைகீழாயிருக்கிறது. அவைகளை நேர்மைப்படுத்தவேண்டியதே சிக்கனகமிட்டியின் வேலையாகும். தனிஹோதாவில் நடைபெற்ற கூட்டங்களின் பயனாக சமூக சமரசத்தையொட்டியாதொரு முடிவுக்கும் உங்களால் வரமுடியாமலிருக்கிறது. அதற்காக நாங்கள் பெரிதும் வருந்துகின்றோம். உங்களுக்குள் எப்படியாகிலும் ஓர்வித ஒற்றுமை ஏற்படவேண்டுமென ஆதிமுதல் நான் உங்களை வற்புறுத்தி வந்திருப்பது உங்களுக்கு நன்குதெரியும். சமூக விஷயங்கள் திருப்திகரமாக தீர்ந்தாலொழிய எங்கள் மனதிலுள்ள அரசியல் முறைகளை ஓர் உருப்படுத்துவதென்பது முடியாத காரியமாகும். நீங்களெல்லோரும் கலந்து பேசி மனப்பூர்வமாக ஓர் ஒப்பந்தத்திற்கு வருவதுதான் உசிதமாகும். சமூக சமரசமேற்படுத்த உங்களால் முடியவில்லை என்பதற்காக உங்களை தேர்ந்தெடுத்த முறை சரியில்லை என்றாவது, உங்களிடமுள்ள குறைகள்தான் அதர்க்குகாரணம் என்றாவது நீங்கள் நினைக்கக்கூடாது. உங்களுக்குள் பரஸ்பர ஒற்றுமை ஏற்பட்டாலன்றி உங்கள் அரசியல் பிரசினையை ஒருநாளும் தீர்த்துவைக்க முடியாது. அரசியல் லக்ஷியம் யாதாயினும் ஜனங்களுக்குள் ஒற்றுமை ஏற்படுவது அத்

தியாவசியமாகும். எனவே இந்தமகாநாட்டின் அமைப்பையோ, அல்லது உங்களைத்தேர்ந்தெடுத்த முறையையோ நீங்கள் குறைகூறுவது கூடாதகாரியமாகும். அதற்கு காரணம் தற்போது ஏற்பட்டுள்ள சிக்கல்களை சரிபடுத்தஉங்களால்முடியவில்லை என்பதே. அதுவிஷயமாய் மீண்டும் நீங்கள் முயற்சிக்கலாம். உங்கள் அரசியல் அமைப்பை நீங்களே தயாரிப்பதாயிருந்தாலும், அல்லது பிரிட்டிஷார் தயாரிப்பதாயிருந்தாலும் சமூகசமரசம் ஏற்படாமல் யாதொன்றும்முடியாதென்பதை நீங்கள்யாவரும் கவனிக்கவேண்டும். அது தீராதவரை அரசியலமைப்பு ஏற்படுவதென்பதுமுடியாத காரியமாகும். உங்கள் அரசியல் அமைப்பை நீங்களே தயாரித்துக் கொள்ளுங்களென்றுபிரிட்டிஷாரோ, அன்றி நானோ கூறிஅதைபார்லிமென்டு அங்கிகரித்துவிட்டாலும் அப்பொழுதும் சமரசமின்றி உங்களால் என்னசெய்யமுடியும். நீங்கள் யாதொரு முட்டுக்கட்டையுமின்றி2அடிகூடமுன் செல்லமுடியாது. உங்கள் கோரிக்கை பூர்த்தியடையவும் உங்களுக்குள் பரஸ்பர சமரஸம் ஏற்படவும் பிரிட்டிஷ் சர்க்கார் தங்களால் முடிந்தவரை பெரும் முயற்சி செய்து வருகின்றது.

ஆகவே உங்களுக்கு நான் கூறும் யோசனை என்னவெனில் இக்கமிட்டியின் அடுத்த கூட்டமொன்றை மீண்டும் நான் கூட்டவிரும்புகிறேன். அதற்காக தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கிறேன். ஆனால் லண்டன் மகாநாடு வெற்றிபெற முடிவடையவேண்டுமென நாங்கள் உறுதிகொண்டிருக்கிறோம். சமரசத்திற்கு பிரிட்டிஷ் சர்கார் எவ்விதத்திலும் இடையூறாக யிருக்கப்போவதில்லை. யோசனை நடந்துவரும் இச்சமயத்தில் திடீரென நடுவில் நாங்கள் எங்கள் அபிப்பிராயத்தையும்திட்டத்தையும் எப்படி தெரிவிக்கமுடியும்? எனவே இப்பொழுது இக்கமிட்டியை ஒத்திவைப்பதேநாம் செய்யவேண்டிய காரியமாகும். அதிக தாமதமின்றி மீண்டும் நாம் கூடுவோம். எனவே இக்கமிட்டியை ஒத்திவைக்கிறேன் என கூறி முடித்தார். அத்துடன் ஒத்திவைக்கப்பட்டது.

சமரசம் முறிந்ததற்கு காரணஸ்தர் யார்?

முஸ்லிம்கள் வகுப்புவாதிகளென்றும் சுயராஜ்ய இயக்கத்திற்கு முட்டுக்கட்டை என்றும் மனம்போனபடி பேசித்திரியும் ஹிந்து நண்பர்கள், வகுப்பு பிரசினையை சமரசத்திற்கு கொண்டுவர இணங்காமல் பிடிவாதம் காட்டி, வகுப்பு பிரசினையை தீர்ப்பதற்காக ஏற்பட்ட சப்கமிட்டி முறிந்துபோக காரணமாயிருந்தோர் ஹிந்துக்களும் சீக்கியர்களுந்தான் என்பதையும், முஸ்லிம்கள் எல்லாவித சமரசத்திற்கும் சமாதானத்திற்கும் தயாராயிருந்தனரென்பதையும் நடவடிக்கைகளில் கூட இருந்து கண்கூடாகக்கண்டறிந்த பிரீபிரஸ் ஸ்பெஷல் கமிஷனர் ஸ்ரீமான் எஸ். சதாநந்தர் தெரிவித்திருப்பதிலிருந்து தெரிந்து கொள்வார்களாக.

சமூக சமரஸமுறிந்ததற்கு ஹிந்து, ஸீக்கியர்களே காரணம்.

சமூகசமரஸம் ஏற்படுத்த சர்க்காரும் முஸ்லிம் தலைவர்களும் எம்மட்டோ முயற்சித்தும், முட்டுக்கட்டையாய் நின்று சமரஸம் ஏற்படா வண்ணம் குலைத்தவர்கள் ஹிந்துக்களேயாவர். இதை யொட்டி ஜனாப் ஜின்னா டெய்லி மெயில் பத்திரிகா நிருபருக்கு தெரிவித்ததாவது:—

காந்திஜீக்கும் முஸ்லிம் பிரதிநிதிகட்கும் சமரஸப் பேச்சு நடந்ததன்பயனாய் இறுதியில் கீழ்காணும் சில விஷயங்கள் முடிவுக்கு வந்தன. (1) பஞ்சாப், வங்காளம் ஆகிய மாகாணங்களில் முஸ்லிம்கட்கு அதிகமாக ஒரு ஸ்தானம்தான் (அதாவது 100-க்கு 51-விகிதம்) கொடுக்கப்படும். இந்த அளவு எப்போதும் நேமமானதாவென்பது புதிய அரசியல் திட்டத்தில் முடிவு செய்யப்படவேண்டும். (2) முஸ்லிம்கள் சிறுபான்மையாகவுள்ள மாகாணங்களில் முஸ்லிம்கட்கு அதிகப் படியான ஸ்தானமளிக்கப்படும். தனித்தொகுதி வேண்டுமா? கூட்டுத்தொகுதி வேண்டுமா? என்பதையொட்டி அம்மாகாண முஸ்லிம்கள் செய்யும் முடிவு இதரஎல்லோராலும்ஒப்புக்கொள்ளப்படும். (3) மத்திய சட்டசபையில் முஸ்லிம்கட்கு மூன்றிலொருபாக பிரதிநிதித்துவம் இருக்கும். சுதேச சமஸ்தானங்களிலிருந்து எத்தனை முஸ்லிம் பிரதிநிதிகள் அனுப்பப்படுவரோ அத்தனை ஸ்தானம் மேற்படி தொகையினின்று குறைகப்படும். (4) ரெசியூடி அதிகாரங்கள், இந்திய பெடரல் மாகாணங்கட்கு அளிக்கப்படும். உத்தியோகம், ஸ்தானம், மதம், கலை முதலியவைகளில் முரணானசட்டங்கள் பிறப்பிக்கப்படமாட்டாது.”

முறிவுக்கு காரணம்.

மேற்படி விஷயங்களை காந்திஜீ ஏற்றுக் கொண்டு அதை இதரர்களிடம் கூறினர். பிராமணரல்லாதார், ஐரோப்பியர், தாழ்த்தப்பட்டோர், ஆங்கிலோ இந்தியர், பாரசீகர் முதலியோர் இவற்றை ஒப்புக்கொண்டனர். ஆனால் ஹிந்துமகா சபைப்பிரதிநிதிகளான மூஞ்சே, மாளவியா, ராஜாநாகேந்திரநாத், இரு சீக்கியர் முதலியோர் முட்டுக்கட்டைகளாய் நின்று கெடுத்தார்கள். இருசாராருக்கிடையேயும் எவ்வாறேனும் சமரஸமுடிவை ஏற்படுத்த முயற்சித்தும் அது வியர்த்தமாகிவிட்டது. சீக்கியரும், ஹிந்துமகாசபையினரும் இம்முடிவுகளை ஒப்புக்கொண்டால் மற்றோரும் ஏற்றுக்கொள்ளும்படி காந்திஜீ பிரயத்தனப்படுவதாக ஒப்புக்கொண்டும்பயனில்லை.

முஸ்லிம்களின் நம்பிக்கை.

இவ்விஷயத்தைப்பற்றி லிபர்டி பத்திரிகை எழுதுவதாவது:-பிரதம மந்திரிமாக்டனல்டு, காந்திஜீ ஆகியவர்களிடம் விசையிருந்தும் ஒன்றுஞ் சாதிக்க முடியாதவர்களாயிருக்கின்றனர். முஸ்லிம்கள் கோருவதை ஹிந்துக்கள் கொடாவிட்டால் கவர்ன்மெண்டிடம் ஜவாப்தாரித்துவம் ஏற்படுத்த முஸ்லிம்கள் தயாராயில்லை. கடைசியாக பிரிட்டிஷார் ஒரு முடிவு செய்துவிட்டாலன்றி வேறுவழிக்கு வருவதற்கில்லை. தேசிய முஸ்லிம்களின் அபிப்பிராயத்தை எதிர்பார்த்து, காந்திஜீ இதர முஸ்லிம்களின் கோரிக்கையை மறுக்கின்றார். முஸ்லிம்கள் கோருவதை அளிக்காவிட்டால் சுயேச்சை இயக்கத்தில் முஸ்லிம்கள் சேரப்போவதில்லை. இந் நிலைமையில் சமரஸம் முறியும் குற்றம் யாரைச்சார்ந்ததாகும். தவிர மிஸ்டர் மாக்டனல் இப்பிரசினைகளை மத்தியஸ்தராயிருந்து எளிதில் தீர்க்கலாம். ஆனால் அவரும் இப்பொறுப்பை ஏற்காமலிருப்பதற்கு வருந்தவேண்டி யிருக்கிறது. இவ் விஷயத்தில் காந்திஜீ தலையிட்டுசமரசத்திற்கு கொண்டுவராமலிருப்பது நியாமல்லவென்றே கருதுகிறோம்.

சுகாதாரப் பகுதி.

அஜீரணமும் அதன் சிகிச்சையும்.

அஜீரணம், ஜீரணக்கருவிகள் சம்பந்தமான ஒரு வியாதி. இது இந்தியாவில் சாதாரண நோய்களுள் ஒன்றாகிவிட்டது. இதை அசட்டைசெய்யும் பக்ஷத்தில் வயிற்றுப் போக்கு முதலிய கடூரவியாதிகளில் கொண்டு போய்விடும்.

ஆகாரத்தை நன்றாய் மென்றுனவுடன், அது அன்ன ரஸங்களாய் தாக்கப்பட்டு (ஆகார சத்துவாகஆகி) ஒரு திரவ பதார்த்தமாக மாறுகிறது. தேகத்தைக்கட்டும் (புஷ்டி கொடுக்கக்கூடிய) பதார்த்தங்கள் படிப்படியாய் உறிஞ்சப்பட்டு இரத்தத்தில் கலந்து விடுகின்றன. இரத்தத்தில் கலக்காத பாகங்கள் குடல்கள் வழியாகச்சென்று தேகத்தை விட்டுக்கழிகின்றன. இம்மாதிரி இரத்தத்தில் சேர்ந்த பாகங்கள் யாவும் தேகத்தை சீர்படுத்தவும் உறுதியாக்கவும் உபயோகப்படுகின்றன. இந்த ஆச்சரியமானதும், முக்கியமானதுமான செய்கைக்கு "ஜீரணம்" என்று சொல்லப்படும். இந்த ஜீரணசக்திக் குறைந்தால் அதற்கு "அஜீரணம்" என்று சொல்லப்படும்.

அஜீரணத்திற்குரிய காரணங்களாவன :—(1) அளவுக்கு மிஞ்சி உண்ணுதல், (2) துரிதமாய் உண்ணுதல், அதாவது—ஆகாரத்தை அவசர அவசரமாய் விழுங்குதல் (3) சரியற்றதும், சுகமற்றதுமான ஆகாரம் புசித்தல், (4) தேகப்பியாஸ மின்றியிருத்தல், (5) வழக்கமாய் மலச்சிக்கலிருத்தல், (6) போதுமான அளவு வேகாத சமையல், (7) தித்திப்புப் பண்டங்கள், ஊறுகாய்கள், சாராயங்கள், காபீ, தேயிலை, உபத்திபனமுள்ள (மந்தமான) பானங்கள் முதலியனவற்றால் அஃது ஏற்படுகிறது. இதுதவிர வேறு சில்லரைக் காரணங்களும் அநேகமுள. ஆனால், அவற்றை இங்கு எடுத்துரைக்கின் விரிவாகும்.

அஜீரணத்தின் குறிகளாவன :—ஜீரணமாகும்போது நோவு, வாந்தி, வாயில் எச்சில் சுரத்தல், மார்பில் எரிச்சல், சாப்பிட்டான

வுடன் ஹிருதயம் படபடவென்று துடித்தல், தலைவலி, மலச்சிக்கல், ஏப்பம், நாக்கில் அழுக்கு, வாய்துற்நாற்றம் முதலியன.

சிகிச்சை:— அஜீரணத்திற்கு சிகிச்சை செய்ய பின்வரும் சுலபமான விதிகளை அனுசரிக்கவேண்டும்:—

(1) 'ஆகாரம்' சாப்பிடும்போது மிதமாய் சாப்பிடவேண்டும். பசியாயிருக்கும் போதுதான் சாப்பிட வேண்டும். அதாவது, 'உயிர் பிழைக்க சாப்பிட வேண்டுமே யொழிய சாப்பிட உயிர்பிழைத்திருக்கக்கூடாது.'

(2) நன்றாய் மெல்லுவதற்கும், ஜீரணமாவதற்கும் போதுமான நேரமிருக்கவேண்டும். நன்றாய் மெல்லுவதினால் ஜீரணம் சரியாக ஆகும்.

(3) அமிதமாய் மாமிசம் சாப்பிடுவதையும், அழுகிப்போயிருக்கும்படியான ஆகாரத்தையும், தித்திப்புப் பண்டங்களையும் தவிர்க்கவேண்டும்.

(4) நோய் கடினமானதாக விருந்தால் ஒருநாளைக்கு யாதொரு ஆகாரமும் சாப்பிடாதிருந்தால் அதனால் ஜீரணக்கருவிகளுக்கு ஒய்வு உண்டாகும்.

(5) புதிதான பழுத்தபழங்களை சாப்பிடுவதால் ஜீரண ரஸங்கள் அதிகமாக உற்பத்தியாவதைப் பார்க்கலாம்.

(6) பானம்:—காலையிலும், படுக்கப்போகையிலும் சுத்தமான வெந்நீரை நிரம்பக் குடிக்கவேண்டும். அதனால் ஜீரணம் செவ்வையாகி இரைப்பையின் வலிநீங்கும்.

(7) போதை வஸ்துக்களையும், காபி, தேயிலை முதலிய உபத்தீபனத்தை (மந்தத்தை) உண்டுபண்ணக்கூடிய பானங்களையும் குடிக்கலாகாது.

(8) ஜலமோ, அல்லது எந்த திரவபதார்த்தமோ சாப்பிட்டாலும் அதை சப்பிச் சாப்பிடவேண்டும். சப்புவதால் சிறிதளவே சாப்பிடமுடியும். அதனால் அது சுலபத்தில் ஜீரணமாகும்.

(9) பச்சைப்பாலை விட காய்ச்சின பாலைப் பருகுவது மேலாகும். ஏனெனின் காய்ச்சின பால் சீக்கிரம் ஜீரணமாகும்.

(10) அப்பியாஸம்:—தினம் இரண்டுவேளையும் சுறுசுறுப்பாய் நடந்து தேகப்பியாஸம் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒருவனின் தேகாரோக்கியமானது, ஆகாரம், தேகப்பியாஸம் இவற்றைப் பொருந்தி நிற்கும். தேகப்பியாஸம் இராவிடில் தேகமாகிய இயந்திரமானது துருப்பிடித்துப் போகும். (அதாவது வியாதிக் கிரையாகும்) தவிர தேகப்பியாஸம் வெளிக்காற்றில் செய்யவேண்டும்.

(11) போது:—அமைதியாயும் சந்தோஷமாயு மிருக்கவேண்டும். இது ஜீரணத்துக்கு ஒத்தாசையாகயிருக்கும். கோபம் மனோவேஷ்டை கவலை அறுவெறுப்பு இவற்றுடன் உண்டால் ஜீரணசக்தி குறையும்.

(12) பற்களை சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும் அவை கெட்டுப்போயிருதால் ஒரு பல் வைத்தியரிடம் காண்பித்து சுத்தம் செய்து கொள்ளவேண்டும். கெட்ட பற்கள் அஜீரணத்துக்குக் காரணமாகும்.

(13) ஆகாரம் தேகப்பியாஸம் எடுத்துக் கொள்வதில் ஒழுங்காயிருக்க வேண்டும். தேக சக்தியும் காயசித்தியும்வேண்டும்.

(14) அதற்காக மருந்து ஒன்றும் சாப்பிடாமலிருப்பது மேல். அது தற்கால சாந்தியே யொழிய வேறல்ல. (ஆரோக்கிய தீபிகை)

தித்திப்புப்பண்டங்கள் ஜீரணத்திற்கு நல்லதா?

ஆகார விஷயமான கொள்கைகள் சதா மாறுத லடைந்து கொண்டிருக்கின்றன. சாதாரணமாய் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரேவித ஆகாரம் ஒன்றுங்கிடையாது. சீதோஷ்ண ஸ்திதியும், அந்தந்த தேசத்து பழக்க வழக்கங்களும் இதில் பொதுவாய் சம்பந்தப்படுகின்றன. ஒவ்வொருவருடைய குணாதிசயத்தையும் கவனிக்கவேண்டியிருக்கிறது. ஒருவன் உண்ணும் மாமிசம் மற்றவனுக்கு விஷம் என்று சொல்லப்படுகின்றது. ஜீவசத்துப் பொருட்களைக் குறித்து அனாவசியமாய் பெருமைப்படுத்திப் பேசப்படுகிறது. உலோக உப்புகளே மிகவும் முக்கியமானவை. சரியான விகிதாசாரப்படி உலோக உப்புகள் ஒருவனது தேகத்தில் இருக்கும் பக்ஷத்தில் ஜீவஸத்துப் பொருட்கள் அங்கேயிருப்பது நிச்சயம்.

வாய்க்கு ருசியான ஆகாரங்கள் முக்கியமானவையே. சூப் முதலிய ஆகாரங்களில் போஷணகுண மதிகமில்லை. ஆனால், அவைகள் உமிழ் நீர் கோளங்களை சுறு சுறுப்பாய் வேலைசெய்யும்படி தூண்டும். சில வருஷங்களுக்குமுன், ஆகாரத்தில் சர்க்கரையைப்

பற்றிமிகவும் சிலாக்கியமாக சொல்லப்பட்டிருந்தது. இப்போது அதன் மேம்பாடு குறைந்து போய்விட்டது. ஆகிலும் சர்க்கரை சாப்பிடுவது குறையவில்லை.

இப்போது கால்கேட் சர்வகலாசாலையின் தேகத்தொழில் சாஸ்திர லாபடேரி டைரக்டராகிய டாக்டர் டோனல்டு ஏ. லார்டு என்பவர், பார்வையைவிட ஆகாரத்தின் மணம் ஜீரணத்திற்கு ஏற்றதென்றும் அன்னரஸங்களை தூண்டுதல் செய்ய தித்திப்புப்பண்டங்கள் அவசியம் என்றும் சொல்லுகிறார். கசப்பான ஆகாரங்களைவிட தித்திப்பான ஆகாரங்கள்தான் முக்கியமானவை. ஏனெனில் இதில் அன்ன ரஸங்கள் படிப்படியாய் வந்து கொண்டிருக்கும். சாப்பிட்ட ஐந்து நிமிஷங்கள் கழித்தும் வாயில் மணம் இருந்துகொண்டிருக்கும். கசப்பு வஸ்துக்களுக்கோ அப்படியன்று. அவற்றால் தற்காலப் பிரயோஜனமேயொழிய வேறல்ல. "ஒரு விருந்து சாப்பாட்டில் கடைசியில் தித்திப்புப் பரிமாறுவது நல்லதென்றும், அது ஜீரணத்துக்கு ஏத்ததென்றும்" டாக்டர் லாயர்டு சொல்லுகிறார்.—(அமெரிக்கன் மெடிஸன்.)

மனோ வியாதிகள்.

பின் சொல்லிய குறிகளில் ஒன்று, அல்லது - அதற்கு மேற்பட்ட குறிகள் ஒருவனிடம் காணப்பட்டால், 'மனோ வியாதி' அவனுக் குண்டென்று சந்தேசிக்கவேண்டும். (அவையாவன :—)

தூக்க மின்மை, அடிக்கடி மறதியுண்டாதல். பேசும்போதே வார்த்தைகளை அடக்கிக் கொண்டு பேசாம லிருத்தல், பேச்சில் அடக்கமின்றி யிருத்தல், ஒரே பேச்சை அநேகதரம் திருப்பித் திருப்பிச் சொல்லுதல், ஒரே காரியத்தை திருப்பி திருப்பிச் செய்தல். விரலை விட்டு எண்ணுதல். (ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குமுன் விரலைவிட்டு எண்ணுதல்,) தன்னுடைய விருப்பத்திற்கு விரோதமாக அர்த்தமில்லாமல் ஒவ்வொன்றை நினைத்துக்கொள்ளல், தன்னுடைய விருப்பத்துக்கு விரோதமாக ஒரு காரியத்தை நடத்தல். சுவல்பவேலைகளைச் செய்வதற்குக்கூட தாமதித்தல். அதிக சந்தேக மடையல். அதிக வெட்கப்படல், அதிகமாகப் பேசுதல், சுவல்ப சமாசாரத்திற்கு கூட சிரித்தல், அல்லது அழுதல் மேல்வலிகள் உண்டாதல், திடீரென்று பித்துபிடித்தல், தன்னிடம் ரகஸ்யமான சக்தி இருப்பதாகவும், அபரிமிதமான ஆஸ்தியிருப்பதாகவும் எண்ணுதல் ஒவ்வொரு விஷயத்தையுங் குறித்து கவலை கொள்ளல், ஏதோ கடூரமான நோய் இருப்பதாகவும், ஸ்வல்ப விஷயத்திலும் அபாயமிருப்பதாகவும் நினைப்பது. மரணத்தை குறித்து சதா பயப்படுவது. தன்னைப் பார்த்து ஒருவன் உறுமினனென்றும் தன் நோக்கமாகவே பார்த்து கொண்டிருந்தானென்றும், குசுகுசு வென்று பேசினனென்றும் தன்னைப் பார்த்து துப்பினனென்றும் நினைத்தல். தன் ஆகாரம் விஷசம்பந்தப்பட்டிருகிறதென்று நினைத்தல், பேசமாட்டேனென்று மறுத்தல், சாப்பிடமாட்டேனென்று மறுத்து, ஆகாரத்தை தள்ளிவிடுதல். ஒரே இடத்தில் உட்கார்ந்து நகரமாட்டேனென்று பிடிவாதம் செய்தல்.

—("ஹெல்த் அண்டு ஸ்டெரங்த்")

ஆசிரியர் குறிப்புகள்

அகில உலக முஸ்லிம் மகாநாடு:—முஸ்லிம்களின் புனிதஸ்தலமாகிய பைத்துல் முகத்தவில் சமீபத்தில் அகில உலக முஸ்லிம் மகாநாடொன்று நடைபெறப்போகிறதென்றும், அதில்நம் முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு கலீபா நியமிக்கவேண்டு மென்பதே முக்கிய பிரச்னையாகுமென்றும், அம்மகா நாட்டைக் கூட்டுவதற்கு அமீர் பைசல் அவர்கள் தக்கமுயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறுறென்றும், இப்புனித காரியம் நடைபெறுவதை இந்திய சமஸ்தானமுஸ்லிம் மன்னர்களும் ஏற்று ஆதரித்துள்ளார்களென்றும் வந்துள்ள சுபச்செய்தியைக் கேட்கும்முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் அகமகிழ்வார்களென்பதில் ஐயமில்லை.

இதுகாலை முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு ஏக தலைவரில்லாது நம் சமூகம் க்ஷீணதிசை

யடைந்துவரும் இந்நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அகில உலக இஸ்லாமிய கலீபா ஏற்படுவதை எவரேமறுக்கவல்லார்? ஆகவே இராக் அரசர் அமீர்பைசல் அவர்கள், அம்மகாநாட்டிற்கு விஜயஞ்செய்யும் முக்கியஸ்தரான மாஜீதுருக்கி சுல்தான் அப்துல் மஜீதுகான் அவர்களைச் சந்தித்து கலீபா நியமன விஷயமாய் கலந்துபேசுவார்கள் என்றும் தெரிகின்றது. சுல்தான் அப்துல் மஜீதுகான் கலீபாவாக நியமிக்கப்படுவாரா? அல்லது அமீர் பைசல், அமீர் அப்துல்லா ஆகியவர்களின் குடும்பத்திலிருந்து எவரேனும் நியமிக்கப்படுவாரா? என்பதை பற்றி இப்போது முடிவுகூறுவதற்கில்லை. எவ்வாற்றாலும் இஸ்லாமிய கலீபா ஏற்படுவது முஸ்லிம் உலகுக்கே மாபெரும் பாக்கியமாகும். தவிர உலகின் நானா பாகங்களிலுமுள்ள முஸ்லிம் தலைவர்கள் ஒரு இடத்தில் கூடுவதால் நம் சமூகத்திற்கு மட்டிலடங்கா பிரயோசன மிருக்கிறதென்பதும்மறைவானதன்று.

ஆனால் சுயநலங்கொண்ட ஒரு சிலர் இப்புனித நியமனத்தை தூஷித்து வெறுக்கின்றனரென்று தெரிகிறது. சூரியனின் கதிரொளியைக் காணவௌவால்வெறுப்பதால் அச்சூரியன் சுடர் பிரகாசிக்காமல் போகுமோ? ஒருக்காலுமில்லை. கலீபா நியமனத்தை இச்சுயநலமிகள் எதிர்த்த போதிலும், உலகமுஸ்லிம்க ளெல்லோரும் பெரும்பான்மையாய் ஏகோபித்து மனமுவப்போடு ஏற்க ஆவலுடன் எதிர் பார்க்கின்றார்களென்பது திண்ணம். எல்லாம் வல்ல இறைவன், ஜெரூஸ்லம் மகாநாட்டை நேர்மையான முறையில் பூர்த்தியடையச்செய்து கலீபா நியமனத்தால் முஸ்லிம் உலகத்துக்கும், இஸ்லாமிய ஆசாரநிர்வாகத்துக்கும் பேரனுகூலம் உண்டாக அருள்புரிந்து, இஸ்லாத்தை உலகமெங்கணும் தலைசிறந்தோங்கச் செய்வானாக!

இன்னும் அதிகவரிப் பளுவா? :—இந்தியர்கள் மிக ஏழைகள். ஓர் இந்தியனின் தினசரி வருமானம் (சராசரி) ஒன்றேகாலணாதான். இந்த சொற்ப வரும்படியில் அவன் காலக்ஷேபம் செய்வதல்லாமல், அவன் தலைமேல் விதிக்கப்பட்டுள்ள பற்பல வரிகட்கும் பணத்தைக்கொட்டிக்கொடுக்கவேண்டியிருக்கிறது. வீட்டு வரி, நிலவரி, ஜலவரி, தொழில் வரி, வருமானவரி முதலியவைகளன்றி, நாம் உபயோகிக்கும் சாமான்களின்மீதும் தினேதினே அபரிமிதமான வரிச்சுமைபளுவு ஏற்பட்டுக்கொண்டே போகிறது. சமீபத்தில் உப்பு முதலியவைகட்கு நூற்றுக்கு நாற்பது விகிதம் வரி உயர்த்தப்பட்டுள்ளது. ஈதெல்லாம் ஒருபக்கம் கிடக்கட்டும்!

ஏழை இந்தியர் தம் சுப துக்ககாரியம், விவகாரம் முதலியவற்றிற்கு உபயோகிக்கும், கார்டு—கவரின் விலையை தபால் இலாக்காதாரர் சில வருடங்கட்கு முன் காலணாவை அரையணாவாகவும், அரையணாவை ஒரு அணாவாகவும் பிறகு இதற்குமேல் ஒரு தம்பிடியாகவும் உயர்த்தினார்கள், இதனால் ஏழைமக்கள் அடைந்த அதிருப்தியும் கஷ்டமும் அளவிடமுடியாது. இதுவும் போதாமல் இப்போது, அரையணா கார்டை ஒரு அணாவாகவும், ஒரு அணா கவரை ஒன்றரை அணாவாகவும் ஆக்கிவிட வேண்டுமென்று மசோதா தயாரித்து இம்மாதம் டில்லியில் கூடும் சட்ட நிரூபண சபைகளில் கொணர்ந்து அனுமதி பெற நாடியிருக்கின்றனர்.

தவிர தந்திகளுக்கு வழக்கமாக வாங்கும் கட்டணத்திலும் "கொசுறு" சேர்த்து வாங்கப்படுகிறது. அதாவது, சாதாரண தந்திக்கு 1-அணா அதிகமும், அவசரதந்திக்கு 2-அணா அதிகமும், வெளிநாட்டுத் தந்திக்குரூபாய்க்கு 5-அணா அதிகமும் வசூல் செய்கின்றார்கள். வி. பி. ரிஜிஸ்டர் கட்டணம் 2-அணாவை 3-அணாவாக உயர்த்திவிட்ட விஷயமும் நேயர்கள் அறிந்ததே.

ஏழை இந்தியர் மீது நம் சர்க்கார் இத்தனை பணத்தொல்லைகளையும் ஏன் சுமத்தினார்களெனின் அதற்கு ஒரே காரணம் தான் உண்டு. அதாவது, அரசாங்க இலாக்காவின் வரவுக்கும் செலவுக்கும் சரிக்கட்டவில்லையாம். வரவைவிட செலவு வெள்ளம் அதிகம் புரண்டோடினால் சிக்கனம் என்ற தடையைப் போட்டுவீண் செலவு பிரவாகத்தைத்தடுப்பதே நியாயமல்லாது ஏழை இந்தியர்களின் சொற்ப சம்பாத்திய பணத்தையும் புதுவரிகள் மூலம் சுரண்டுவது சரியன்று. ஆகவே சமீபத்தில் கூடும் சட்ட நிரூபண சபைகளுக்கு நமது பிரதிகள் சென்று இந்தியர் மீது தாங்கமுடியாத வரிச்சுமை பளுவு ஏற்படாத விதத்தில் தக்க முயற்சிசெய்து நலன் புரிவார்களாக!

சந்தா நண்பர்களுக்கு

1931 ஜனவரி முதல் V. P. முதலியன தபாலாபீஸில் 3 நாளைக்கு மேல் வைத்துக் கொள்ளப் படமாட்டாதென போஸ்ட் ஆபீஸார் அறிக்கை வெளியிட்டிருப்பதாலும் இதுபொழுது ரிஜிஸ்டர் சார்ஜ் 3 அணுவாக உயர்த் தப்பட்டிருப்பதாலும் வி. பி. அனுப்புவதானல் நேயர்களுக்கு 5 அணு வீண் சிலவு ஏற்படும். ஆதலின் நமது பழைய சந்தா நேயர்களும் புதிதாக சேரும் கனவான்களும் தங்கள் சந்தாத் துகையை மணியாடர் மூலம் அனுப்பிக் கொடுக்கும்படி கோருகிரேம்.

நமது மாசிகைக்கு ஏற்படுத்தப் பெற்றுள்ள சந்தாத்தொகை மிகவும் சொற்பமா யிருப்பதால் அதனை மணியார்டர் அனுப்புவது வெளிதேச நண்பர்களுக்கு சிரமமாக யிருக்கும்; ஆதலின், நமது சந்தா நண்பர்களாய,

சிங்கப்பூர் வாசிகள் ஆங்கு "77, மார்க்கட் ஸ்ட்ரீட் மெஸ்ஸர்ஸ் A. M. அப்துல்லா சாஹிபு & Co." அவர்களிடமும்,

பேரேட் மலாய் எஸ்டேட் வாசிகள் "கிள்ளானிலுள்ள ஜனுப் K. A. பக்கீர் முஹம்மத் ஸாஹிப்" அவர்களிடமும்,

ரங்கூன் வாசிகள் "385, மங்கமாரி ஸ்ட்ரீட் சுகரசம் & Co. தர்கா மஸ்ஜித்பேஷ் இமாம் மௌலவீ முஹம்மது யாகூப்சாஹிப்" அவர்களிடமும்,

கொளும்பு வாசிகள், 220-ஸகிண்ட் க்ராஸ் ஸ்ட்ரீட் டிலுள்ள மெஸர்ஸ் A. M. K. ஆலிம் ஸாஹிப் & Co. அவர்களிடமும் அவரவர்கள் சந்தாத் தொகையை செலுத்துமாறு கோருகின்றேம்.

அவ்வாறே புதிதாகச் சேரும் அன்பர்களும் செய்வார்களென எதிர் பார்க்கின்றேம்.

"மானேஜர்"

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

48, அங்கப்பன் தெரு, மதருஸ், G. T.

நமது பத்திரிகை கிடைக்கு மிடங்கள்:—

சிங்கப்பூர்

மெஸர்ஸ் **A. M.** அப்துல்லா சாஹிப் **& Co,**
77, மார்கட் ஸ்டிரீட்.

மெஸர்ஸ் பிரிட்டிஷ் **&** அமெரிக்கன் நியூஸ் கம்பெனி,
18, பாட்டரி ரோடு.

கோலாலம்பூர்

மெஸர்ஸ் **M. M.** துல்பகீர் கம்பெனி, மார்கட் ஸ்டிரீட்.

கிள்ளான்

மெஸர்ஸ் **K. A.** பக்கீர் முஹம்மத் **& Co.,**
P. O. Box. 52.

பினாங்

ஜனப் **V. O.** ஹஸன் முஹம்மது அவர்கள்,
34, கிட்டாரோடு.

ரங்கூன்

ஜனப் மவ்லவீ முஹம்மத் யாகூப் சாஹிப்
சுகரசம் **& Co,** 385, மங்மாரி வீதி.

கொழும்பு

ஜனப் **A. M. K.** ஆலிம் சாஹிப்,
220, **2nd** கிராஸ் ஸ்டிரீட், பெட்டா.

மதராஸ்

மெஸர்ஸ் **A. M. K.** ஹாஜி முஹம்மது ஷரீப்,
மரைக்காயர் **&** பிரதர்,
225, அங்கப்ப நாய்க்கன் தெரு.

ஜனப் மவ்லவீ **M.** ஸுல்தான் அஹ்மத் ஸாஹிபு
1/222, அங்கப்ப நாய்க்கன் தெரு.

Printed at the Kesari Printing Works, & Edited & Published by Moulvi A.R Abdur Rahim Saheb
Manager, Hifazath-ul-Islam, 48, Angappa Naick St., G.T., Madras.